பத்தொன்பதாவது ஆண்டு நிறைவு மலர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

# ஆனைபரிதேரின்மேலழகர் மாலை.

திருவல்லிக்கேணித்

தமிழ்ச்சங்க வெளியீடு, 45.


சங்கக் காரியாலயம்:

ஆனந்தபிருந்தாவநம்,

ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத் தெரு,

அம்பத்தூர்.

1953.

ஸ்ரீ

# திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கப் பிரசுரம்.

| இலக்கம். | வெளியீட்டின் பெயர். | வள்ளலார் பெயர். |
|---|---|---|
| 1. | ஸ்ரீஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வைபவம். | ஸ்ரீமான் வி. யன். சிங்காரவேலுமுதலியார் அவர்கள். |
| 2. | தேசிகர் நூற்றந்தாதி. (42) | ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள். |
| 3. | மறைமுடித் தேசிகனுர். | ஸ்ரீமான் சுந்தரசேகர நாயக்கர் அவர்கள். |
| 4. | மணவாள மாமுனிகள். | ஸ்ரீமான் ஸி. நரஸிம்மாசாரியார் அவர்கள். |
| 6. | வேதாந்த தேசிக ஊசல். | ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள். |
| 9. | கம்பர்மாலை. | ராவ்ஸாஹெப். ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள். |
| 11. | ஸ்ரீ ஆண்டாள் மாலை. | ஸ்ரீமான் பி. எஸ். திருமலை அய்யங்கார் அவர்கள். |
| 12. | ஸ்ரீபார்த்தசாரதி மாலை. | ராவ்பஹதூர் கே. ஆர். ராமாநுஜம் அவர்கள். |
| 13. | திருவருண் மாலை. (38) | ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள். |
| 14. | தூப்புல் வள்ளல் பழமொழிச் சிறப்பு. (34) | ப. ரெ. திருமலை அய்யங்கார். |
| 17. | புகழ்மாலை. | தமிழன்பர். |
| 18. | கம்பர் தருங் கண்ணன். | ஸ்ரீமான் பி. சேஷாத்திரி அய்யங்கார் அவர்கள். |
| 19. | முக்கோற்பகவர். | ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸகோபாலய்யங்கார் அவர்கள். |
| 20. | ஸ்ரீ வீரராகவமாலை. | ஸ்ரீமான் ரா. கிருஷ்ணய்யங்கார் அவர்கள். |
| 21. | திருமாமகள் மாலை. | திருப்புகழ்மணி பிரும்மஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள். |
| 22. | திருநரசிங்கர் மாலை. | ஸ்ரீமான் கமலாபுரம் ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள் திருத்தேவியார் ஸ்ரீரங்கநாயகி அம்மாள். |
| 23. | அழகியசிங்கர் மாலை. | ஸ்ரீமான் எம்.பி. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள். |
| 24. | பொய்கையார் மாலை- | ஸ்ரீமான் மங்கலம் ராமாநுஜய்யங்கார் அவர்கள். |
| 25. | ஸ்ரீ ஆண்டாள் சந்திரகலா மாலை. | சிறந்த தேசிக பக்தர். |
| 26. | வாரணமாயிரமாலை. | ஸ்ரீமான் பி. எஸ். திருமலை அய்யங்கார் அவர்கள். |

ஸ்ரீ :

ஸ்ரீமதேராமாநுஜாய நம :



# ஆனைபரிதேரின்மேலழகர் மாலை.

**திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியீடு-45.**

இது

ஸர்வமங்கள நந்தனவாண்டு மீனத் திங்கள்
பதினாறும் நன்னாள் பங்குனி உத்திரத் தன்று
முத்திதரு நகரேழின் முக்கியமாங் கச்சியம்
பதிப் பேரருளாளப் பெருமாள் திருவடி
களில் இடப்பெற்ற காணிக்கை.

29-3-53.

முதற் பதிப்பு—1953

Rajan & Co. (Printer) Madras-1.

ஸ்ரீ:

# உள்ளுறை.


பக்கம்.

முன்னுரை. ... 1

[ஸ்ரீமான் பி. எம். சுந்தர வரதய்யங்கார் அவர்கள்.]

முகவுரை. ... 3

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார். தமிழ் வித்வான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

ஸ்ரீ வரதராஜஸ்தவம். ... 15

[கூரத்தாழ்வான்.]

நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி. ... 48

[திவ்யகவி பிள்ளைப் பெருமாளையங்கார்.]

நூற்றெட்டுத் திருப்பதித் திருப்புகழ். ... 48

[குரவை ராமாநுஜதாசர்.]

திவ்யதேசப் பாமாலை. ... 49

[தென் திருப்பேரை ஸ்ரீ அநந்தகிருஷ்ணையங்கார்.]

திருக்கச்சி நகர் பெருந்தேவித்தாயார் பதிகம். ... 50

[பொற்களந்தைப்பதி முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார்.]

திருக்கச்சி நகர் வரதராஜப் பெருமாள்பஞ்சரத்தினங்கள். 55

[பொற்களந்தைப்பதி முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார்.]

தேவராஜ சதகம். ... 65

[பிள்ளைப்பாக்கம் கோமாண்டூர் இளையவல்லி லக்ஷ்மீ நரஸிம்மாசாரியார்.]

அத்திகிரி வரதராஜப்பெருமாள் கீர்த்தனை. ... 83

[குத்தனூர் சின்னஸாமி சாஸ்திரியார்.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீபெருந்தேவி நாயிகாஸ மேத ஸ்ரீதேவாதி

ராஜ பரப்ரம்மணே நம :

# முன்னுரை.

அடியேனது நண்பர் ஸ்ரீமான் ப. ரெ. திருமலை அய்யங்கார் அவர்கள் காரியதரிசியாக இருந்து சென்ற பத்தொன்பது ஆண்டுகளாக நன்ருக நடத்திவரும் திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் பல அரிய வெளியீடுகளைப் பார்வையிட்டதின் மூலமாக பல்லாண்டுகளாக எண்ணியிருந்த ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. அதாவது அத்திகிரி அருளாளப் பெருமாள் விஷயமாக ஆன்ரோர்கள் திருவாய் மலர்ந்தருளிய தோத்திரங்களை ஒரு மாலையாக அயர்வறும் அமரர்கட்கு அதிபதியான அவனுக்கு ஸமர்ப்பிக்க வேண்டுமென்பதுதான் அந்நோக்கம். இவ்வருஷம் வைசாக மஹோத்ஸவத்தில் கருடஸேவையன்று பெருமாள் கோயிலில் **தேசிகதர்சநரத்ந தீபம் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள்** தலைமையில் நடைபெற்றது "**அருளாளர் மாலை**" (சங்க வெளியீடு 36. 6-6-1952) அரங்கேற்று விழா. அன்று அரங்கேற்றப்பெற்ற "அருளாளர் மாலை"யில் ஸ்ரீவேதாந்த தேசிகர் அத்திகிரிப்பெருமாள் விஷயமாய் அருளிச்செய்த விஷயங்கள் எல்லாம் அச்சிடப்பெற்றுள்ளன. மற்ற சான்ரோர்கள் முத்திதரும் நகர் ஏழில் முக்கியமாம் கச்சி என்றுவழங்கும்

ஸ்ரீ காஞ்சீபுரத்தில் ஸ்ரீ பெருந்தேவிநாயகி ஸமேதராய் எழுந்தருளி யிருக்கும்ஸ்ரீதேவாதிராஜராகிய அத்திகிரித்திருமாலைத்தனியேபாடிய பெரியோரின் பாசுரங்களை ஒருங்கே திரட்டி அச்சுப் போடவேண்டும் என்ற அவா எழுந்தது. அதை இன்றே ஸ்ரீ தேவாதிராஜன் பூர்த்தி செய்ய இவர்கள்தான் அன்றைய வைபவத்தில் நம் சம்பிரதாயத்தில் சிறந்தவர்களான ஸ்ரீ வி. வி. ஸ்ரீனிவாஸய்யங்கார் ஸ்வாமியும், ஸ்ரீ திண்டுக்கல் ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியும் அன்று உத்ஸாஹத்தோடு எடுத்துரைத்தபடி இதை உடனே பூர்த்திசெய்யத் தூண்டியது அவ்வாநந்தம். எனது விருப்பத்தை **"ஆனைபரி தேரின் மேலழகர் மாலை"** வெளியீடாகப் பிரசுரித்து முற்றுவித்த திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கத்திற்கும் அதன் காரியதரிசி எனது நண்பர் ஸ்ரீ ப. ரெ. திருமலை அய்யங்கார் அவர்களுக்கும் எனது நன்றி என்றும் உரியதாகும்.

எனது பெற்றோர்கள் கருத வரந்தருந் தெய்வப் பெருமாளிடம் வைத்திருந்த பக்தியின் ஞாபகார்த்தமாக இச்சங்கத் தமிழ் மாலை விளங்கி, அன்பர்கள் முடிமேல் வீற்றிருப்பதே அடியேன் வேண்டுவது. தேசிகமாலை வாழ்க. வளர்க செந்தமிழ். வாழ்க உலகெலாம்.

"ஸ்ரீ கிருஷ்ண பவனம்"
சைதாப்பேட்டை,
29-3-1953.

**பி. எம். சுந்தரவரதன்.**

ஸ்ரீ:

# முகவுரை.

திருமால் கமலை சேனையர் கோன்
றிருநா வீற துதமுனி
சீருய் யக்கொண் டார்ம ணக்காற்
சிறந்தார் யமுனைத் துறைவர்பெருங்

குருவா நம்பி யெதிப் பெருமான்
கோவிந் தாசா ரியர்பட்டர்
குலவே தாந்தி நம் பிள்ளை
கோலக் கண்ண பாதர்நெறி

யொருவா வரங்கே சாரி யர்பே
ரோங்குங் கேச வாரியர்நன்
குறுமா வாசர் கேசவ ரென்
றுலக குருக்க ளாயுய்ய

வருமா ரியர்க டாள் வணங்கி
வைண வம்பார் மல்கியெழ
வந்தைந் துறுப்பு நல்குமெதி
வரர்வண் சடகோ பரைப்பணிவாம்.

— (அரியக்குடி அலர்மேன் மங்கை பிள்ளைத்தமிழ்.
பாயிரம் 5,)

வேரொப்பார் விண்முதலாங் காவுக் கெல்லாம்
விழியொப்பார் வேதமெனுங் கண்ட னக்குக்

காரொப்பார் கருணைமழை பொழிந்தி டுங்காற்
கடலொப்பார் கண்டிடினுங் காணுக் கூத்தால்

நீரொப்பார் நிலமளிக்குந் தன்மை தன்னு
னிலமொப்பார் நெடும்பிழைகள் பொறுக்கு நேரால்

ஆரொப்பா ரிவர்குணங்க ளனைத்துங் கண்டா
லருளாளர் தாமெனினுந் தமக்கொவ் வாரே.

—(தேசிகமாலை. மெய்விரத நன்னிலத்து மேன்மை. 22)

மச்சவிழி நங்கையரு ளெச்சமொரு செந்தமிழ்வ
ழங்குமெனவே
யிச்சையொடு கந்துமதர் கச்சணி குறுங்கணுறு
மிந்திரையொடு
கச்சிநகர் நின்றருளு மச்சுத னரன்றுயர் கடிந்த
வலியோ
னச்சரவ மீதுதுயில் பச்சைமுகி லும்புளியி
னண்ணினனரோ.

— [சடகோபதிவ்ய சரித்திரம். நூற்றெட்டுத்திருப்பதிப் படலம். 107]

நற்பாவலவர் தொகுத்த சொற்பாடலை நற்றமிழ்தேர்
சொற்பாவலர் செவியுட்கொள்ள வேதுறைதோறு நின்ற
கற்பாரைக் கண்டு மகிழ்ந்த தொன்றுங் கண்ணன்
கச்சி வெற்பிற்
பொற் பாவை பூண்முலை தோய்ந்தின்பவாரியுட்புக்
கதுவே.

— [திருப்பதிக்கோவை. 222]

திருமால் ஆன்மகோடிகள் உய்யுமாறு அர்ச்சாரூபியாய்க் கோயில் கொண்டு விளங்கும் திவ்ய தேசங்கள் நூற்றெட்டு. அவற்றிலே கோயில், திருமலை, **பெருமாள் கோயில்** என்ற மூன்றும் மிகப்பழமையும் பெருமையும் பெற்றவை,

காசி முதலாகியநன் னகரி யெல்லாங்
கார்மேனி யருளாளர் கச்சிக் கொவ்வா.

— [தேசிகமாலை. அமிருதாசுவாதினி, 27]

என **மறைமுடித் தேசிகனுர்** வரிசையறிந்துரைத்த பிரசித்த வைபவத்தையுடையது **ஸ்ரீ காஞ்சீநகரம்** என்கிற **பெருமாள் கோயில்.**

உலகெலாந் தொழுதேத்தும் ஸ்ரீமந்நிகமாந்தமஹா தேசிகன் அருளிச்செய்த ரஹஸ்யமான "ஸ்ரீஹஸ்திகிரி மாஹாத்மியம்," தேசிகப்பிரபந்தத்தில் பேரருளாளர் விஷயமாகவுள்ள அடைக்கலப்

பத்து, அர்த்த பஞ்சகம், ஸ்ரீவைஷ்ணவ தினசரி, திருச்சின்னமாலை, பன்னிருநாமம், கலம்பகம், [அமிருத ரஞ்சனி, அதிகார சங்கிரகம், அமிருதாசுவாதினி, ஆஹார நியமம், இவற்றினின்றெடுத்துத் தொகுத்தது.]என்றிவற்றுடன் கூடியது "அருளாளர்மாலை" [இச்சங் கவெளியீடு 36, ஸர்வமங்கள நந்தனவாண்டு வைசாக மஹோத் ஸவத்தில் நாலாறும் நன்னாள் வெள்ளிக்கிழமை [6-6-1952] கருட ஸேவையன்று முத்திதருநகரேழின் முக்கியமாங்கச்சியம்பதிப்பேர ருளாளப் பெருமாள் திருவடிகளில் இடப்பெற்ற காணிக்கை, இதன் வள்ளலார் **ஸ்ரீமான் திண்டுக்கல் ராமஸ்வாமி அய்யங்கா ரவர்கள்**] என்பது நற்றமிழுலகு நன்கு அறிந்த விஷயம்,

பழந்தமிழ் நூல்களுள் சான்றோர்களால் "**அத்திகிரி**" [அத்தி யூர், கச்சி, கரிகிரி] எவ்வாறு புகழப்பெற்றுள்ளது என்பதை முதற் கண் காண்போம்,

"**மாறனலங்காரம்**" என்னும் நூல் மகிழ்மாறன் அல்லது நம்மாழ்வாரை நாயகனாகக்கொண்ட அலங்கார சாஸ்திரம். இவ்வரிய பெரிய நூலை இயற்றியவர் **திருக்குருகைப் பெருமாள் கவிராயர்**. இவருக்குச் '**சடையன்**' [சடகோபன்] என்னும் இயற்பெயரும் உண்டு. மாறனலங்காரத்தில் கச்சியம்பதியைப் பற்றியுள்ள பாடல்கள் பின் வருமாறு:—

புரந்தரனாதியரராய புத்தேளிர் பொற் போதுகடூஉய்
நிரந்தர மேத்தும் படியே துயின்றது நெஞ்சத்தன்பு
சுரந்தரன் சாபந்துடைத் தோனிருந்ததுதொண்டர்க்
கெல்லாம்
வரந்தர நின்ற தரங்க நன் காஞ்சி வடமலையே.

— [**பொது வியலுரை**. 61]

நித்தமாய் மூன்றுநெறித்தா யிலவ முதல்
வைத்தபான் மைக்குரித்தா மாண்பிற்றே-யத்திகிரிச்
செங்கண்மா லுந்தியின்மேற் செங்கமலத்
தோன்முதலா
மங்கண்ஞா லம்புகழ்கா லம்.

— [**பொருளணியியலுரை, தன்மையலங்காரம்** 132]

[இது காலத்தன்மை, இதனுள் மூன்று நெறியென்றது இறப் பெதிர்வு நிகழ்வு. இலவ முதலியனவும் முறையே பிரமகற்பமீறாக வுணர்ந்து கொள்க. திணை-பொதுவியல், துறை-பருவவாழ்த்து.(6)]

பாம்பு கடித்ததற்குத் தேளுக்குப் பார்ப்பதுபோ
லாம் புகழ்மால் கச்சி யணிவரைவா—யாம்பகட்டா
லோடத் துணிந்தளித்தா னுய்த்த நோய்க் கின்று வெறி
யாடத் துணிந்தா னறிவு.

—[பொருளணியியலுரை. உவமையலங்காரம். 204]

தனந்தா ருயிர்குறைக்குந் தந்துணைவர் பொற்றேண்
மணந்தா ருயிர்நிறைக்கு மானே—யுணர்ந்தார்நல்
யாகத்துதிமா லிபகிரிமேன் மைதவழ் நீண்
மாகத் துதிமா மதி.

— [பொருளணியியலுரை. தீபகம், 385]

[இதுவிருத்த தீபகம், இபகிரி-அத்திகிரி. விருத்தம்; குறைக்கும் நிறைக்குமென்பன. பகுதி-பொருள் வயிற் பிரிதல். துறை-நிலவு கண்டழுங்கல்,]

அன்று மழுவாளி யன்புடைய சுந்தரர்க் காய்ச்
சென்றனன்காண் டூது திருநுதாஅ—லென்றதிலென்
றதியினிற் பஞ்சவர்மே லன்புடைத்தா யத்திகிரிச்
சோதியுஞ்சென்று னிலையோ தூது.

—(பொருளணியியலுரை. வேற்றுப் பொருள் வைப்பலங்காரம். 495)

[இதுவுமது (ஒருவகையடைதல்,) துறை-பாடாண்சார்ந்த புறத் திணையுள், தூது நிலையுரைத்தலாம்.]

பொன்போற்சுடர் பல்கதிரோனடைத்த மென் போதிருக்கை
நன்போதகற்றுந் திறங்கற்றிடர்நள்ளிருளிடையோர்
மின் போற்றமிவந்தருள் செய்ததாலின்ப மெல்லியலா
யென்போற்றவஞ் செய்ததாரருளாளரிபகிரிக்கே.

— [பொருளணியியலுரை. ஆர்வமொழியலங்காரம் 508]

புத்தமிர்தந் தனிற்பிறந்த பொன்கொடியை
யகலாத புனித ஞகி
யத்திகிரி தனிலுதித்த கைத்திகிரிப்
பரன்பரனென் பதனை நாடி

யுத்தமநான் மறைகண்மதித் தொன்றுரைதொன்
ருரையணங்கே யோதி யோதி
மொய்த்துயர்வன் பாற்கடஞ்சென் றழுந்தவுணர்
வதற்கிறைவர் முயல்கின் ருரே.

–(சொல்லணியியலுரை. மடக்கு. 702)

[அணங்கே! நமதிறைவர், புதிய அமிர்திற் பிறந்த பொன்னங் கொடி போன்ற பெரிய பிராட்டியாரைக் கணப்பொழுதும் விட்டு நீங்காத பவித்திரஞகியத்திகிரியினிடத்துதித்த திருக்கை திருவாழி யுடையபரனே பரப் பிரமமென்பதனைச் சுருதிகளுனுமுத்தம ஞானத்தாலறிந்துயர்த்தி யொன்றுபோல வுரைத்த பழையவுரை யைப் பொற்றைகணெருங்கின வலிய பரலையுடைய சுரத்தைக் கடந்து நாட்டின்கட்சென்ருரியருடன் நர்வழுந்தவோதி உண்மை தெளிவதற்கேக முயலா நின்ருரென்றவாறு. இது கொண்டு கூட் டுப்பொருள்கோள். தொன்று-பழமை, ஓதி-பொற்றை, பகுதி- ஓதற் பிரிதல். துறை-நினைவுரைத்தல்.]

ஒருத்தல் வெற்புடையானும் பர் துற்றுண
வருத்த மன்கடன் மாவனமே புக
லருத்தி நாண்மலர் கொய்தறலாடியோ
வருத்தமன் கடன் மாவனமே புகல்.

–(சொல்லணியியலுரை. மடக்கு. 741)

[இஃது இரண்டாமடியும், ஈற்றடியும் முற்று மடக்கு. ஒருத்தல் வெற்புடையான்-அத்திகிரியினையுடையான். உம்பர் துற்றுணவருத்த -தேவர்கள் பொசிக்குமமிர்தத்தை யுண்டாக்கும்படிக்கு, மன்கடல்- நிலைபெற்ற கடலிற் கடைந்து பிறந்த, மா-திருமகளே! வனமே புகல்-புனலே புகலிடமாகிய, அருத்திநாண்மலர் கொய்தற லாடியோ-கண்டார் விரும்பும் பருவமலர்களைக் கொய்தோ? புனலாடியோ? அன்றியாதானே? வருத்தமன்கடன் - உனது திரு மேனிக்குத் தளர்ச்சி யெய்தியமுறை. மாவனமே புகல்-பெருமை பெற்ற அன்னம்போலு நடையினையுடையாய்! கூறுவாயாக வென்றவாறு.

துற்றுணு-வினைத்தொகை, வருத்த-உண்டாக்க, மா அண்மை விளி.வனம்-தண்ணீர்; நந்தவனமுமாம், புகல்-புகலிடம், அருத்தி-விருப்பம், நாண்மலர்-பருவமலர், ஓகாரமிரண்டிடத்துங்கூட்டுக. கடைந்தென்பதும், திருமேனியென்பதும் முதலாயின சொல்லெச்சம், பகுதி-முன்னுறவுணர்தல், துறை-வாட்டம் வினுதல். இவை யாறும் ஈரடி முழுதுமடக்கு.)

நாகவரையானளிய மலருள்ளா
ணுகவரை யானளிய மலருள்ளான்
பாகவதர் தம்பிரான் பாமாறன்றம்பிரா
ணுக வரையானளிய மலருள்ளான்.

–(பொருளணியியலுரை. மடக்கு. 744)

[இஃது ஈற்றயலடியொழித்து ஏனைமூன்று அடியும் முற்று மடக்கு.

புலவீர்காள்! பாம்பையணையும் அரையையுடைய சிவன், வண்டுறுதலையுடைய தாமரையை யிடமாகவுடைய பிரமன், பொன்னுலகினதெல்லையையுடைய இந்திரன், கருணையையுடைய அழுக்கற்றோரென்னு மிவர்களுள்ளத்திற் குடி கொண்டிருப்பான்; (நளிய மலருள்ளான். நாலாமடியீறு) செறிந்த அழுக்குடையோரைத் திருவுளத்தானினையான்; அவன் யாரெனில்? பாகவதர் தம்பிரானுகிய பாமாறனுக்குத்தம்பிரானுகிய அத்திகிரி நாதனென்றவாறு. புலவீர்காளென்னுமெழுவாய் முன்னிலை யெச்சம், அவனை மனமொழிமெய்களினினைந்து வாழ்த்தி வணங்க அற முதலிய நாற்பொருளும் பயக்கும் என்பது கருத்து.]

கோகில மாலைக்கே கொலைமல்கக் கோலமுலைக்
காகுலமா மோகமிக லாகுமோ – சோகமிகு
மேமா சலமா மிகலமைமாச் சொல்லுமிசை
மாமா மலிகச்சி மால்.

–(சொல்லணியியலுரை. மடக்கு 766.)

[இது நாலெழுத்தான் வந்தது. முதலையாற்றுன்பமிகா நின்ற பொன்மலை போலப் பெருத்த தாய்ப் போருக்கு அமைந்த யானை மூலமே யென்னும் பொருளுரையையுந்திருமகளையும் மாமரமிகுந்த திருக்கச்சியையும் உடைய மாயோனே! குயில்களானவை மாலைக் காலத்திலே (காமாகூகூவென்று காமனையழைத்துக்) கொலைத்தொழிலை மிகுப்ப, அழகிய முலையினையுடையாட்கு வருத்தத்தைச் செய்யும் மிக்க காதன் மேன் மேலுமிகுதல் உன்கருணைக்கு முறையாகுமோ வென்றவாறு, எனவே இவளைத்தழுவுவதே நீ பேரரு

ளாளனை திருநாமத்திற்கு முறை என்பது ஆயிற்று. சோகம் - துன்பம், இசை - பொருளுரை; அஃதாவது மூலமந்திரம். மா - பெரிய பிராட்டி. மா - மாமரம். மலிதல் - மிகுதல். மால் - அண்மை விளி. கோகிலம் - சாதியொருமை. ஆகுலம் - வருத்தம். மாமோகம் - மிக்ககாதல். மிகல் - பெருத்தல். ஓகாரம் - ஒழியிசை. திணை - பெண்பாற்கைக்கிளை. துறை - கண்டு கைசோர்தல், 18. "மூல மென வோலமிட வல்லார் வந்தார்" (**தேசிக மாலை, திருச்சின்ன மாலை.**) 10. "ஆதி யுகத்தயன் கண்டிட நின்ற வருள் வரதர், காத லுயர்த்த களிற்றைத் திரேதையிற் காத்தளித்து, வாதுயர் தேவ குருவுக் கிரங்கித் துவாபரத்திற், சோதி யனந்தன் கலியிற்றொழுதெழ நின்றனரே." (**தேசிக மாலை, மெய் விரத நன்னிலத்து மேன்மை, 26**) என்பன காண்க )

பொற்றொடிகற் சட்டகத்தைப் போக்கிப் புறத்திறுத்த
கற்புறத்தற் காட்சிக் கதிகொடுத்த - சிற்றடிப்போ
துச்சிப் பதிக்கத்தாக் கூற்றச் சுறுத்தாது
கச்சிப் பதிக்கத்தா கை.

**—(சொல்லணியியலுரை, சித்திரகவி 767.)**

[வல்லினப் பாட்டு. இதனுள் வல்லின வெழுத்தாறும் வந்து பிறவின வெழுத்துக்கள் வாராதது கண்டு கொள்க.

திருக்கச்சிப்பதிக்குக்கத்தனே ! என்னையமன் வந்து அச்ச முறுத்தாது, நீ பொன்னிறற் செய்த தொடியினை யுடையாள் கற்படிவத்தைப் போக்கி, அவளை விட்டுப் பறமாறின கற்பு மீட்டும் அவளிடத்து எய்தவும் பண்டைச் சரீரத்தினது அழகு எய்தவுங் கூட்டுஞ்சாப விமோசனத்தைக் கொடுத்த சிறிய திருவடிகளாகிய தாமரைப் போதை என் சென்னியிலே சூடத்தருவாயாக, அதனோடும், அஞ்சாதே யென்னும் அபயத்தமுந் தருவாயாக வென்றவாறு

அச்சமுறுத்தாது என்பது அச்சுறுத்தாதெனத் தொகுக்கும் வழித்தொகுத்தல் என்னும் விகாரத்தானின்றது ;"குணமாலையையச் சுறுத்த" வென்பது போலக் கொள்க. துறை - கடவுள் வணக்கம். 20]

தோலாத மாவலிபாற் றெல்லுலக மூன்றுமிரு
காலா லளந்துமுனங் கைக்கொண்டான் - மேலாய
வத்தியூர் நின்ற னடியார் தமக்கழியா
முத்தியூர் காட்டு முதல்.

**- (பொருளணியியலுரை. ஏதுவலங்காரம், 431.)**

“ **திருப்பதிக்கோவை** ” யின் கணுள்ள அத்திகிரி விஷயமான பாடல்கள் இவண் தருதும்.

(5) அமைப்போ ரமைத்தற் கரிதா மடல் வல்லரக்க ரென்போர்
தமைப்போர் கடந்தருள் பேரருளாளர் தந்தந்தி வெற்பி
லுமைப்போலிவ ளொரு மானிடமா மென்றுரைத்ததன்மே
லிமைப்போதினி லெய்துக வென் பதாங் கண்ணிமைக்
கின்றதே.

—(**கைக்கிளை.**)

(9) பூவேட்ட போதருளாத் தெய்வ மாதர் புலம்புறப் பொற்
காவேட்ட பின்னைக் கரு ளருளாளர் கரிகிரிவாய்
மாவேட்ட மார்களிறுய்ந் தெழுகாலையில் வாய்ந்தபிடி
நீ வேட்டருள் கென்னவோ வணங்கே யெதிர் நிற்கின்றதே.

—(**இயற்கைப் புணர்ச்சி, முன்னிலையாக்கல்.**)

(10) மஞ்சரிக்குக் குணமாலை யொட்டா நடுவாழ்வித்த நீ
ரஞ்சரிக்கைத்திரு மாலத்தி யூரருளாளர் வெற்பி
னஞ்சரிக் கண்ணிதன பாரங் கண்டு நடுவறவே
சஞ்சரிக்கின்ற தென்னோ குழன்மேற் சஞ்சரிகங்களே.

—(**மெய்தொட்டுப்பயிறல்.**)

(45) புண்ணிய கோடிப்புயலை யன்பாய்ப் புண்ணியங்கள் புத்தே
ணண்ணிய நாட்செய்த துண்டெனத் தேர்தற்கு ஞாபகமாம்
விண்ணியலாகரர் சேமித்த பானம் வியனிலத்தோர்
பெண்ணியலாய் மதுரந் தெவிட்டாதருள் பெற்றியதே.

—(**புகழ்தல்.**)

(89) பிருதித்திரு நெடுமா லெம் பிரான் வெற்பிற் பெண்ணரசே
பருதிப் பனிப்பிறைக் கோட்டொருவேழம் படி றிழைப்பான்
கருதிக்கடு வளிபோன்றெதிர்போழ் தொருகாளைவன் போர்க்
குருதிச்சுடர் வடிவேலான் மருப்பைக்குறைத்தனனே.

—(**நடுங்கநாடல்.**)

(145) இத்தழை வாசமிழந்த புராதனமெ ன்றனள்வா
சத்தழை வேறு கொய்யாடைக் கென்றுளவ்வுரை
துணையாய்க்
கைத்தழை கோவியர்க் கீந்தபிரான் கச்சி வெற்ப நின்பான்
மெய்த்தழையேற்பதற் கீதே நற்காலம் விரைந்தருளே.

—(**பாங்கிகையுறையேற்றல்.**)

(214) தூசறைசார் நின்புணர்முலை யானைத்துணைப் படைவேள்
பாசறையாம்பொழில் கைக்கொண்டவேலர் கைப்பற்றுதற்
காய்க்
காசறை தோய் குழலாய் கச்சிமால் வெற்பிற்கற் பினிற்குந்
தேசறை போமன மில்லாதெதிர் கொள்ளுஞ் செய்கையதே.

— (பாங்கி தலைமகளைக் குறியிடத்துக் கொண்டுசேறல்.)

(216) பைகுவியா வயநாகணை யான்றன் பதத்தி லென்றுங்
கைகுவியார் கண்ணருள் குவியான்றன் கரிகிரிமேல்
வைகுறுமாலைக் கிடையாமத்தே மென்மலர்க்குழற்குக்
கொய்குவன் யானிவண் வைகுக நீ பொற் கொடியிடையே.

— (தலைமகளைக்குறியிடத்துய்த்து நீங்கல்,)

(222) நற்பாவலவர் தொகுத்த சொற்பாடலை நற்றமிழ்தேர்
சொற்பாவலர் செவியுட் கொள்ளவே துறைதோறு நின்ற
கற்பாரைக் கண்டு மகிழ்ந்த தொன்ருங் கண்ணன் கச்சி
வெற்பிற்
பொற்பாவை பூண்முலை தோய்ந்தின்ப வாரியுட்புக்கதுவே.

—(புணர்ச்சி மகிழ்தல்,)

(265) அளைபோனக மென்றருந்திய காரத்தியூரன் முன்னூல்
வினைபோத முற்றவர் போற்றரு ளாளன்றன் வெற்பர்க்
கென்கை
வளைபோய யர்ந்ததை வாணுதலாய் சொல்லில் வாழ்
பயிர்க்குக்
களைபோம் பசுவுக்கு வாயுறையாமென்கை காட்டுமதே.

—(இடர்தலை மகன்றனக் கியம்ப விரும்பல்,)

(267) வடியார் சுடரிலை வேலர்க்கென் காதல் வடித்துணர்த்த
முடியாது மோகங் கொழுந்துவிடா நிற்கு மூவுலகத்
தடியார்தமக் கெளியாரத்தி யூரருளாளர் வெற்பிற்
கொடியாரிடத்தவர் தோன்றிற் கண்ணீருங்குதி
கொள்ளுமே.

—(அலர்பார்த்துற்ற வச்சக்கிளவி,)

(285) முன்பகலே நள்ளிரவழைத்தான் பொருண் முற்றக்கற்ரு
ரன்பகலே னென்றருளத்தி யூரருளாளர் வெற்பிற்
பின்பகலே சென்ற வெல்லியின் வாயன்றிப் பெய்வளைபா
னன்பகலே வரினண்பா பழிவரு நங்குடிக்கே.

—(பகல்வருவானை யிரவுவருகென்றல்.)

(330) கரவிற்ற யிருண்டு கட்டுண்ட மாயன் கரிகிரிக்கென்
புரவிக்கிரி யென்னும் பொன்னெடுந் தேர்புயல் காள் புறப்பட்
டிரவிக்கிருப்பிட மான்றேரிடைதட்டு மென்னவொரு
சரவிற்கிடைநின்ற தெய்துமிப்போ தென்னுந் தாழ்குழற்கே

—(முகிலொடு கூறல்,)

(372) புண்ணிய கோடிப் புயலருளாளனைப் போற்றுமன்பர்க்
கெண்ணியவாறென்று மின்பமதாந்துன்ப மென்பதுபோன்
றுண்ணிலா வாசைக் கடலகத்தாளுன்னுடனெழுங்கால்
வெண்ணிலவாம் வெயில் பைந்தடமாங்கடம் வேலவனே.

— (பாங்கி தலைமகற்குடன் போக்குடன் படுத்தல்,)

தேனோங்கு சோலைத் திருவேங் கடமென்றும்
வானோங்கு சோலை மலையென்றும் —தானோங்கு
தென்னரங்க மென்றும் திருவத்தியூரென்றும்
சொன்னவர்க்கு முண்டோ துயர்.

என்பது பாரதம் பாடிய பெருந்தேவனார் பாட்டு.

தன் திருமாதுடனே தான் தனியரசாயுறைகின்ற அத்திகிரித் திருமாலுக்கே தனிப்படப் பொருந்தும்படி பாடிய பெரியோரில் முக்கியமாக மூவருண்டு. திருக்கச்சி நம்பிகள், கூரத்தாழ்வான், வேதாந்த தேசிகன். நம்பிகளும் ஆழ்வானும் வடமொழியில் மட்டும் பாடியுள்ளார்கள். தேசிகன் வடமொழி தென்மொழி ஆகிய இரு மொழியிலும் முறையே ஸ்தோத்திரங்களும், பாசுரங்களும் இயற்றியுள்ளார். பின்புள்ளாரும் வரதனைப் போற்றியுள்ளனர்.

கூரத்தாழ்வான் அருளிச் செய்த ஸ்ரீவரதராஜஸ்தவம் தமிழில்சுலோகம், பொழிப்புரையுடனும், திவ்யகவி பிள்ளைப் பெருமாளையங்கார் நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி, ஸ்ரீமான் குரவை இராமாநுஜதாசர் நூற்றெட்டுத் திருப்பதித் திருப்புகழ் தென் திருப்பேரை ஸ்ரீமத், ஸ்ரீஅநந்த கிருஷ்ணையங்கார் திவ்ய தேசப்பாமாலை இவற்றிலுள்ள அத்திகிரி விஷயமான பாடல்கள், பொற்களந்தைப்பதி முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியாரவர்கள் இயற்றிய திருக்கச்சிநகர் பெருந்தேவித்தாயார் பதிகம் வரதராசப்பெருமாள் பஞ்சரத்தினங்கள், பிள்ளைப்பாக்கம் கொமாண்டூர்-இளையவல்லி லக்ஷ்மீ நரசிம்மாசாரியாரால் இயறறப்பெற்ற தேவராஜசதகம், வட ஆற்காடுஜில்லா செய்யாறு தாலூகா குத்தனூர் ஸ்ரீமான் சின்னசாமி சாஸ்திரியாரவர்களால்

பாடப்பெற்ற **அத்திகிரி வரதராஜப் பெருமாள் கீர்த்தனை** (அன்னவர் அநுஜர் லக்ஷ்மணசர்ஸ்திரியார் தௌஹித்ரரும் ஸ்வீகார புத்திரருமான ஸ்ரீமான் கணபதி சாஸ்திரியாரால் இச்சங்கத்துக்கு வழங்கப்பெற்றது. குத்தனூர் காஞ்சீபுரத்திற்கு மேற்கே பத்து மைல் தூரத்தில் உள்ளது.) என்றிவற்றை **''ஆனைபரிதேரின் மேலழகர்மாலை''** என்ற திருநாமத்துடன் இச்சங்கத்தின் நாற்பத்தைந்தாவது வெளியீடாக **சங்கப்பத்தொன்பதாவது ஆண்டு நிறைவு மலராகப்** பிரசுரிக்கலாயிற்று.

இத்தமிழ்ச் சங்கத்துப் பேரபிமானியும் வடஆறுகாடு ஜில்லா வந்தவாசித் தாலூக்காவைச் சேர்ந்த பாப்நல்லூர் என்ற அக்ரஹார வாசியாயும், பிறகு லாலாப் பேட்டையிலிருந்தவருமான நைத்ரவ காசிப கோத்திரத்துதித்த மாடபூசி கிருஷ்ணஸ்வாமிஅய்யங்காரைத் திருத்தந்தையாராகப் பெற்றவரும், கற்பினுக்கணியாய் விளங்கிய ருக்மிணி அம்மாளை அன்னையாகப் பெற்றவரும், அருமறையுச்சியுள் ஆதரித்தோதும் அரும்பிரமம் திருமகளோடு வருந்திருமால் என்று மறைமுடித் தேசிகனுர் அருளிச் செய்தபடி பொன்னருளோடும் அப்பூமகளோடும் புகழ நிற்கும் சிங்கவேள் மாலோலன் மாணடி தொழுதேத்தும் மாசில் மனந்தெளிமுனிவராயும், முக்கோற் பகவரில் முதல்வராயும் உள்ள நம் **ஸ்ரீ** அழகிய சிங்கரின்திருவடிகளைப் பரவும் நல்லார்கட்கு நல்லணியாய் விளங்கிவரும் நன்மையோனும், உழைப்பால் உயர்ந்த உத்தமராகி நற்குண நிதியாய் விளங்கி வருபவரும் பகவத் பாகவத ஆசார்யபக்தியிற் சிறந்தவரும், பரோபகாரத்துக்கே இட்டுப் பிறந்தவரும், அடக்கம் என்ற அருங்கலனை அணிந்து அனைவருக்கும் பேராதரவு அளித்துவரும் அண்ணலும், சிறந்த தேசிக பக்தராய்ச் சிறப்புடன் விளங்கி வருபவரும், கம்பநாட்டாழ்வானை ஆதரித்தசடையப்ப வள்ளல் போன்ற வரும், சம்பிரதாயாபிவிருத்தியில் விசேட நன்னோக்குடையவரும் ஆகிய ஸ்ரீமான் பி. எம். **சுந்தரவரதய்யங்காரவர்களும்** அவருக்கு எல்லா விதத்திலும் சமானமான அவர் ஸஹோர்தரர் **ஸ்ரீமான் நரஸிம்ஹ ராகவய்யங்காரவர்களும்** இச்சங்க வெளியீட்டிற்குப்பூரண உதவி புரிந்தஉத்தமர்கள். இவர்களின் பெற்றோர்களின் ஞாபகார்த்த வெளியீடே இந்த **''ஆனைபரிதேரின் மேலழகர் மாலை''.**

இம்மாலைப் பணியில் எம்மையேவி நற்றமிழ் நற்றொண்டாற்றப் பூரணவுதவி புரிந்து, தங்களது வள்ளற்றிறத்தை நாடறிய நல்கிய மாட பூசி ஸ்வாமியின் இருமணிப்புதல்வர்களான **ஸ்ரீ பி, எம். சுந்தரவரதய்யங்காரும், பி. எம். நரஸிம்ஹராகவய்யங்காரும்,** அவர்களது பந்துமித்திரர்களனைவரும் அத்திகிரி அருளாளப் பெருமாளின் பூரண வநுக்ரஹத்தை என்றும் பெற்று இன்புறுவாராக,

**பொங்கும் மங்கலம்**
**எங்கும் தங்குக,**

வாழி யருளாளர் வாழியணி யத்திகிரி
வாழி யெதிராசன் வாசகத்தோர் -வாழி
சரணு கதியெனுஞ் சார்வுடன்மற் றென்றை
யரணுகக் கொள்ளாதா ரன்பு.

**–(தேசிகமாலை, மெய்விரத நன்னிலத்து மேன்மை.)**

ஸ்ரீ ரங்கவிலாசம்,
அம்பத்தூர்,
29—3—1953.

**ப. ரெ. திருமலை அய்யங்கார்.**
காரியதரிசி,

ஸ்ரீ

கூரத்தாழ்வான் அருளிச்செய்த

# ஸ்ரீ வரதராஜஸ்தவம்.

ஸ்வஸ்தி ஹஸ்திகிரிமஸ்த சேகர :
 ஸந்தநோது மயி ஸந்ததம் ஹரி:,
நிஸ்ஸமாப்யதிகமப்யதத்த யம்
 தேவமௌப நிஷதீ ஸரஸ்வதீ. (1)

[உபநிடதங்களில் உள்ள வாக்கானது எந்த எம்பெருமானை ஒத்தாரும் மிக்காரும் இல்லாதவனாக ஓதிற்றோ திருவத்திகிரியின் சிகரத்திற்கு ஆபரணமாய் உள்ள அந்த ப்ரணதார்த்திஹரவரதன் அடியேன்மீது ஒழிவில் காலமெல்லாம் நன்மையை நல்கி நிரம்பச் செய்யவேணும்.]

ஸ்ரீநிதிம் நிதமபாரமர்த்திநாம்
 அர்த்திதார்த்த பரிதாந தீக்ஷிதம்,
ஸர்வபூத ஸுஹ்ருதம் தயாநிதிம்
 தேவராஜ மதிராஜ மாச்ரயே, (2)

[ஸ்ரீய:பதியாய், அர்த்திகளுக்குக் கொள்ளக் குறையாத அளவற்ற நிதியாயிருப்பவனாய், கேட்டார் கேட்ட பொருளனைத்தையும் வேண்டியாங்கு அளித்தருள்வதையே விரதமாகக் கொண்டவனாய், அகிலப் பிராணிகட்கும் அன்பனாய், கருணாநிதியாய், அயர்வறுமமரர்கள் அதிபதியாயிராநின்ற தேவராஜனை அடிபணிகின்றேன்.]

நித்ய மிந்த்ரிய பதாதிகம் மஹ :
 யோகிநாமபி ஸுதூரகம் திய :,
அப்யநுச்ரவசிரஸ்ஸு துர்க்ரஹம்
 ப்ராதுரஸ்தி கரிசைல மஸ்தகே, (3)

[நித்தியமாய், இந்திரியங்களின் மார்க்கத்தைக் கடந்ததாய், ஐந்தவிக்கும் ஆற்றலுள்ள யோகிகளுடைய புத்திக்கும் அதிதூரத்தில் உள்ளதாய், வேதாந்தங்களிலும் அளவிடற்கு அரியதான பேரருளாளனாகிற ஒருவிலக்ஷண தேஜஸ்ஸானது திருவத்திமாமலை உச்சியில் விளங்காநின்றது.]

வல்லிகா ச்ருதிமதல்லிகாமயீ
யேந பல்லவித விச்வசாகயா,
ஸவச்ரியா கரிகிரே ரநுக்ரியாம்
வஷ்டி ம்ருஷ்டவரதம் தமாச்ரயே. (4)

[சிரேட்டமான வேதமாகிற கொடி யாவனொரு தேவபிரானாகிற தளிரையுடைத்தான அகில சாகைகளையுமுடைய (யாவனொரு தேவபிரானாலே தளிர்பெற்ற கிளைகளனைத்தையும் உடைத்தான) தனது சோபையினாலே கரிகிரியினுடைய அநுகாரத்தை (ஸாம்யத்தை) விரும்புகின்ற அந்த பரிபூர்ண வரதராஜனை ஆச்ரயிக்கின்றேன்.]

யம் பரோக்ஷமுபதேசதஸ் த்ரயீ
நேதி நேதி பரபர்யதாஸத :,
வக்தி யஸ் தமபரோக்ஷ மீக்ஷயதி
ஏஷ தம் கரிகிரிம் ஸமாச்ரயே, (5)

[மறை (ப்ருஹதாரண்யகம்) இவ்வளவல்லன் இவ்வளவனல்லன் என்று மேன்மேலும் மறுத்துக்கொண்டு போவதாகிற உபதேசத்தால் யாவனொரு வரதனை இந்திரியங்களுக்கு வெளிப்பட்டவனாய் (அபரிச்சின்னனாய்) சொல்லி நின்றதோ அந்தப் பேரருளாளனை யாதொரு இந்த கரிகிரி ஸாக்ஷாத்தாக ஸேவை ஸாதிப்பிக்கின்றதோ அந்த இந்த வேழமலையை ஆச்ரயிக்கின்றேன்.]

ஏஷ ஈச இதி நிர்ணயம் த்ரயீ
பாகதேய ரஹிதேஷு னோ திஷேத்,
ஹஸ்திதாமநி ந நி நிர்ணயேத க:
தேவராஜமய மீச்வரஸ்த்விதி, (6)

[வேதமானது இத்தேவபிரான் ஸர்வேச்வரன் என்கிற நிர்ணயத்தை (வேதத்தினுட்பொருளை நன்றாக ஆராய்ந்து தெளியமாட்டாத) கருவிலே திருவிலாத தௌர்பாக்யசாலிகளிடத்தில் உண்டுபண்ணமற்போனால் போகட்டும்; திருவத்தியாகிற தானத்திலேயோவென்றால் தேவராஜனை (ஸேவித்து) இவனே ஸர்வேச்வரன் என்று எவன் நிர்ணயிக்கமாட்டான் ?]

ஹைஹ குத்ருஷ்ட்யபி நி விஷ்ட சேதஸாம்
நிர்விசேஷ ஸவிசேஷதாச்ரயம்,
ஸம்சயம் கரிகிரிர் நுதத்யஸௌ
துங்க மங்கல குணாஸ்பதே ஹரௌ. (7)

[உயர்ந்த கல்யாண குணங்களுக்கு நிலயமான பகவானிடத்தில் குத்ருஷ்டியான யோசனைகளிலே பொருந்தின மனத்தையுடைய துர்வாதிகட்கு (உண்டாயிருக்கிற) இவன் குணம் உடையவனு குணம் இல்லாதவனு என்கிற இரண்டு கோடிகளைப்பற்றிய ஸந்தேஹத்தை இந்தத் திருவத்திகிரியானது போக்கடிக்கின்றது. இது பிரஸித்தம்.]

ந்யாயதர்க்க முநிமுக்ய பாஷிதை :
சோதிதைஸ் ஸஹ கதஞ்சந த்ரயீ,
ஜோஷயேத்தரி மநம் ஹஸோ ஜநாந்
ஹஸ்திதாம ஸகலம் ஜநம் ஸ்வயம். (8)

[வேதமானது நன்ருக சோதிக்கப்பெற்ற மீமாம்ஸா ந்யாயங்களென்ன, தர்க்கமென்ன, வியாஸபராசராதி முனிவர்களின் சொற்களாகிய புராணங்களென்ன, ஆகிய இவற்றேடு சேர்ந்து கஷ்டப்பட்டு புண்யசாலிகளான சிலருக்கு எம்பெருமானை (பரத்வமாக) உணர்த்தும் ; திருவத்திமாமலையோவெனின் தானுகவே (பாபிகள், புண்யசாலிகள் என்றவிபாகமற) அனைவருக்கும் எம்பெருமானை ஸேவை ஸாதிப்பிக்கின்றது.]

அத்புதம் மஹதஸீம பூமகம்
கிஞ்சிதஸ்தி கில வஸ்து நிஸ்துலம்,
இத்யகோஷி யதிதம் ததக்ரத :
தத்த்யமேவ கரிதாம்நி த்ருச்யதே, (9)

[ஆச்சரியகரமாயும், அபரிச்சிந்ந ஸ்வரூபத்தையுடையதாயும், எல்லையில்லாத வைபவத்தை உடையதாயும், இவ்வாறு இருப்பதனுலேயே ஒப்பற்றதாயும், ஒரு வஸ்து உள்ளது என்று யாதொரு வஸ்துவானது (வேதாதிகளில்) ப்ரஸித்தமாகச் சொல்லப்பெற்றிருக்கின்றதோ அந்த இந்த வஸ்து கரிகிரியில் இதோ உண்மையாகவே காணப்பெறுகின்றது.]

ஸம்வதேத கில யத் ப்ரமாந்தரை :
தத் ப்ரமாணமிதி யே ஹி மேநிரே,
தந்மதேபி பத மாநதாம் கதா
ஹஸ்திநாத்ய பரவஸ்துநி த்ரயீ, (10)

["(ப்ரமாணமாக அபிமாநிக்கப்படுகிற) யாதொன்ருனது வேறு ப்ரமாணங்களோடு இணங்குமோ அதுவன்றே ப்ரமாணமாகும்" என்று யாவர் சிலர் எண்ணினுர்களோ அவர்களின் மதத்திலும் இப்

போது ஹஸ்திகிரியினுலே வேதமானது பரம்பொருளாகிற எம் பெருமான் விஷயத்தில் ப்ராமாண்யத்தை அடைந்தது.]

குணயத்தம் லோகே குணிஷு ஹி மதம் மங்கலபதம்
விபர்யஸ்தம் ஹஸ்திக்ஷிதிதரபதே தத் த்வயி புந :,
குணஸ் ஸத்யஜ்ஞாநப்ரப்ருதய உத த்வத்கததயா
சுபீபூயம் யாதா இதி ஹி நிரணைஷ்ம ச்ருதி வசாத். (11)

[உலகில் குணசாலிகளிடத்தில் 'இவர்கள் நல்லவர்கள்' என்ற சொல்லானது அவர்களிடத்திற் காணப்பெறுகிற இரக்கம், ஒழுக்கம், வணக்கம், பொறுமை முதலிய நற்குணங்களைப்பற்றியதாக வன்றோ எண்ணப்பட்டிருக்கிறது. திருவத்திகிரிநாதனே! அந்த விஷயமானது தேவபிரானுடைய உம்மிடத்திலோவென்றால் நேர் விபரீதமாயிராநின்றது. ஏனெனில், ஸத்யம், ஞானம் முதலிய குணங்கள் தேவரீரை யடைந்திருப்பதனுல் அவை மங்களத்தன்மையை அடைந்தனவென்று வேதங்களைக்கொண்டு நிர்ணயித்தோம். எந்த குணங்கள் பரந்தாமனேடு ஸம்பந்தம் பெற்றனவோ அவை மங்களம் என்றும், எவை பெறவில்லையோ அவை ஹேயம் என்றும் வேதப்ரமாணத்தால் நிச்சயிக்கப்பெற்றிருப்பதால் உலக ரீதியைப் பகவானிடத்தில் பாவிக்கலாகாது.]

நிராபாதம் நித்யம் நிரவதி நிரம்ஹோ நிருபமம்
ஸதாசாந்தம் சுத்தம் ப்ரதிபடமவத்யஸ்ய ஸததம்,
பரம் ப்ரஹ்மாம் நாதம் ச்ருதிசிரஸி யத் தத் வரத தே
பரம் ரூபம் ஸாக்ஷாத் ததிதமபதம் வாங்மநஸயோ : (12)

[விகாரமற்றதாயும், கால, தேச வஸ்துபரிச்சேதம் அற்றதாயும், ஹேயகுணம் இல்லாததாயும், நித்யாநுகூலமாய் நித்யபோக்ய மாயும், ரஜோதமங்கள் கலவாத சுத்த ஸத்வமாயும், எப்போதும் தோஷத்துக்கு எதிர்த்தட்டாயும் யாதொரு பரப்பிரமமானது வேதாந்தத்தில் ஓதப்பெற்றுள்ளதோ, ஓ! பேரருளாளனே! உன்னுடைய சிறந்த நிஜஸ்வரூபமானது வாய்கொண்டு துதிப்பதற்கும் நெஞ்சுகொண்டு சிந்திப்பதற்கும் முடியாதபடி மன மொழிகளுக்கு எட்டாதது.]

ப்ரசாந்தா நந்தாத்மா நுபவஜமஹாநந்த மஹிம
ப்ரஸக்தஸ்தைமித்யா நுக்ருதவிதரங்கார்ணவதசம்,
பரம் யத்தே ரூபம் ஸ்வஸத்ருசதரித்ரம் வரத தத்
த்ரயீ பிஸ்ப்ரக்ஷந்தீ பரநிரஸநே ச்ராம்யதி பரம், (13)

[ஏ ! வரதராஜனே ! மிக அநுகூலமாயும் அபரிச் சிந்நமாயும் இருக்கிற ஸ்வஸ்வரூபத்தினுடைய அநுபவத்தாலே யுண்டாகிற அதிக ஆநந்தாதிசயத்தாலே சேர்ந்த நிச்சலமாயிருக்கும் தன்மை யாலே அநுக்ரஹிக்கப்பட்ட ஒய்ந்திருக்கிற அலைகளையுடைய ஸமுத்திரத்தினுடைய அவஸ்தையையுடைத்தானதாயும், தன்னோ டொத்த வேறொன்றையுடைத்தாகாததாயும், ஸர்வோத்தமுமாயு மிருக்கிற யாதொரு ஸ்வரூபமானது உனக்கு இராநின்றதோ அந்த ஸ்வரூபத்தை ஸ்பர்சிக்கவேணும் என்று விரும்பாநின்ற வேத மானது ஹேயமான அவயவம் விகாரம் முதலியவற்றை மறுப்பதில் மாத்திரம் சிரமப்படுகிறது.]

**ந வக்தும் ந ச்ரோதும் ந மநிதுமதோபாஸிஸிஷிதும்**
**ந சத்ரஷ்டும் ஸ்ப்ரஷ்டும் ததநு ந ச போக்தும்**
**ஹிஸ¬சகம்,**
**பரம் யத் வஸ்தூக்தம் நநு வரத ஸாக்ஷாத் ததஸிபோ ;**
**கதம் விச்வஸ்மை த்வம் கரிகிரிபுரஸ் திஷ்டஸ இஹ.**
(14)

[வரதனே ! யாதொரு பரதத்வமானது உபதேசிக்கக்கூடாத தாகவும், கேட்கக்கூடாததாகவும், மனனம் பண்ணக்கூடாததாக வும், அதற்குமேல் உபாஸிக்க விரும்பக்கூடாததாகவும், காணக் கூடாததாகவும், தொடக்கூடாததாகவும், அதற்குமேல் அநுபவிப் பதற்குக் கூடாததாயும் ச்ருதிகளில் சொல்லப்பெற்றுள்ளதோ அந்த பரதத்வமானது ஸாக்ஷாத் நீயேயன்றோ ஆகிறாய். இப்படி ஸர்வதா துர்லபனான நீ இவ்வுலகத்திலே கரிகிரியின் முன்னே எப் படி ஸர்வ ஜனங்களுக்கும் தன் கருத்தை வெளியிட்டுக்கொண்டு நிற்கிறாய் ? எம்பெருமான் இப்படிப்பட்டவன் என்று உபதேசித் தல் வசனம். ஒருவன் உபதேசிக்க அதனைச் செவிசாத்துதல் வணம். கேட்ட அர்த்தங்கள் நெஞ்சிலே பதியுமாறு சிந்தனை செய்தல் மநநம். தைலதாரைபோல் அவிச்சிந்நஸ்ம்ருதி ஸந்ததி யாகிற உபாஸனையைச் செய்ய விரும்புதல் உபாஸிஸிஷை. அந்த ஸ்ம்ருதி ஸந்தானத்தாலே விளையக்கூடிய ப்ரத்யக்ஷஸமாநாகார மான விலக்ஷண ஸாக்ஷாத்காரம்தர்சநம். ஸாக்ஷாத்காரத்திற்குப் பிறகு ஆசை கிளர்ந்து தொடுகை ஸ்பர்சம். ஒருவித அநுபவத்திற் கும் முடியாதது பகவத் ஸ்வரூபம். ஒரு இந்த்ரியத்துக்கும் விஷய மாக மாட்டாதவனாக ஓதப்பட்டுள்ள நீ இந்நிலவுலகில் ஸர்வஸுலப னாய் அவதரித்து ஹஸ்திகிரியின் முன்னே தன் கருத்தை வெளி யிட்டுக்கொண்டு நிற்பது என்னே ?]

ப்ரக்ருஷ்டம் விஜ்ஞாநம் பலமதுலமைச்வர்யமகிலம்
விமர்யாதம் வீர்யம் வரத பரமா சக்திரபிச,
பரம் தேஜச்சேதி ப்ரவரகுணஷட்கம் ப்ரதம ஜம்
குணாநாம் நிஸ்ஸீம்நாம் கணநவிகுணாநாம் ப்ரஸவபூ:(15)

[ஓ வரதனே! சிறந்த ஞானம், ஒப்பற்றபலம், அநவதிகமான ஐசுவரியம், எல்லையற்ற வீரியம், சிரேட்டமான சக்தி, சிறந்த தேஜஸ்ஸு ஆகிய இவையாகிற முதல் மூர்த்தியான பரவாஸுதேவ மூர்த்தியிலேயுள்ள சிறந்த ஆறுகுணங்கள் எல்லையற்றனவும், எண்ணக்கூடாதனவும் ஆன கலியாண குணங்களுக்குப் பிறப்பிடம். ஜ்ஞாநம் சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ்ஸு என்ற சிறந்தஆறுகுணங்களும் பரவாஸுதேவமூர்த்தியிலே புஷ்கலங்கள். பகவான் அநந்த கல்யாண குண பரிபூர்ணன். இதர குணங்களுள் இவ்வாறு சிறந்தவை. இக்குணங்கள் அடியாகத்தான் இவற்றின் சாகோபசாகங்களாக மற்ற குணங்கள் பெருகுகின்றன.]

குணைஷ் ஷட்பிஸ்த்வேதை: ப்ரதமதரமூர்த்தி ஸ்தவபபௌ
ததஸ் திஸ்ரஸ் தேஷாம் த்ரியுக யுகளைர்ஹித்ரி பிரபு:,
வ்யவஸ்தா யாசைஷா நநுவரத ஸாவிஷ்க்ருதிவசாத்
பவாந் ஸர்வத்ரைவத்வகணி தமஹாமங்கள குண: (16)

[மூவிரண்டு குணங்களையுடைய வரதனே! உன்னுடைய அகில மூர்த்திகளுக்கும் முதன்மையான பரவாஸுதேவ மூர்த்தியானது கீழ்ச்சொன்ன இந்த ஆறுகுணங்களால் விளங்கிற்று. அதற்குமேல் மூன்று மூர்த்திகள் அந்தகுணங்களுடைய மூவிரண்டுகளாகவே பிரகாசித்தன. இப்படிப்பட்ட வியவஸ்தையானது குணங்களை வெளியிடுதல் பற்றியாம். நீயோவென்னில், எல்லா மூர்த்திகளிலுமே எண்ணிறந்த சிறந்த கல்யாண குணங்களையுடையையாயிரா நின்றாய்.]

இயம் வையூஹீ வை ஸ்திதிரத கிலேச்சாவிஹ்ருதயே
விபூதீநாம் மத்யே ஸுர நரதிரச்சா மவதரந்,
ஸஜாதீயஸ் தேஷா மிதி து விபவாக்யாமபிபஜந்
கரீச த்வம் பூர்ணோ வரகுணகணைஸ் தாந் ஸ்தகயஸி.(17)

[ஏ! அத்திகிரிநாதனே! கீழ்க்கூறியவியவஸ்தையானது வியூகத்தைப் பற்றியதாம். அதற்குமேல் இஷ்டப்படி விளையாடுவதற்கு உன்னுடைய விபூதியாகிய தேவமநுஷ்யதிர்யக்குகளின் நடுவில் அவதரித்தவனாய், விபவாவதாரம் என்னும் திருநாமத்தை அடைந்தவனாய்ச் சிறந்த குணங்களின் சமூகங்களால் நிறைந்தவனா

யிருந்தாலும் அந்த தேவ மனுஷ்யதிர்யக்குகளுக்கு ஸஜாதீயன் என்ற காரணத்தால் அந்த குணசமூகங்களை மறைத்துக் கொண்டிருக்கிறாய்]

**பரோவா வ்யூஹோவா விபவ உதவார்ச்சாவதரண:**
**பவன்வாந்தர்யாமீ வரவரத யோயோ பவஸிவை,**
**ஸஸத்வம் ஸந்நைசாந் வரகுணகணாந் பிப்ரதகிலாந்**
**பஜத்ப்யோ பாஸ்யேவம் ஸததமிதரேப்யஸ்த் விதரதா.(18)**

[சிறந்த வரங்களையளிக்கும் பேரருளாளனே! நீ பரவாஸுதேவனாகவோ, வியூகமூர்த்தியாகவோ, விபவாவதாரமாகப் பிறந்தவனாகவோ அல்லது அர்ச்சையாக அவதரித்தவனாகவோ அந்தர்யாமியாகவோ எவ்வெவனாக இருக்கிறாயோ அவ்வவனாய்க்கொண்டு ஈசுவரனுக்குரிய சிறந்தகுண ஸமூகங்கள் எல்லாவற்றையும் தன்னிடத்தில் உடையவனாய் இப்படி ஸகலகுண விசிஷ்ட வேஷனாக எல்லா அவஸ்தைகளிலும் ஆச்ரிதர்களுக்குத் தோன்றுகிறாய்; அநாச்ரிதர்களுக்கோவென்றால் வேறு விதமாக, குண சூந்யனாகத் தோற்றுகிறாய்.]

**தயாக்ஷாந்த்யௌதார்யம் ரதிமஸமதா ஸௌஹ்ருதத்ருதி**
**ப்ரஸாதப் ரேமாஜ் ஞாச்ரிதஸுலபதாத்யா வரகுணா:,**
**ததா ஸௌந்தர்யாத்யாஸ் தவ வரதராஜோத்தமகுணா:**
**விஸீமாநோ ஸங்க்யா: ப்ரணத ஜநபோகம்**
**ப்ரஸுவதே, (19)**

[ஏ! வரதராஜனே! உன்னுடைய எல்லையற்றவையும், எண்ணிறந்தவையுமான தயை, பொறுமை, ஔதார்யம், ஸௌகுமார்யம், ஸமத்வம், ஸுஹ்ருத்வம், உறைப்பு, கனிவு, அன்பு, ஆணை, ஆச்ரிதஸௌலப்யம் முதலிய சிறந்த, ஆத்ம குணங்களும், அப்படிப்பட்ட ஸௌந்தர்யம் முதலிய சிறந்த தேஹ, குணங்களும் ஆச்ரித ஜநங்களுக்கு மகிழ்ச்சியை உண்டு பண்ணுகிறது. உன்னுடைய ஆத்ம குணங்களையும் தேஹகுணங்களையும் அவலம்பமாகக்கொண்டு அடியார்கள் மகிழ்கிறார்கள்.]

**அநந்யாதீநத்வம் தவகில ஜகுர் வைதிக கிர:**
**பராதீநம் த்வாம் து ப்ரணதபரதந்த்ரம் மநுமஹே,**
**உபாலம்போயம்போ: ச்ரயதி பத ஸார்வஜ்ஞ்யமபி தே**
**யதோ தோஷம் பக்தேஷ்விஹ வரத நைவாகலயஸி. (20)**

[வரதனே! வேதவாக்குகள் உனக்கு பிறருக்கு வசப்பட்டிராமையாகிற ஸ்வாதந்த்ரியத்தைக் கூறியுள்ளன. நாங்களோவென்

ருல் அடியவர்களுக்குப் பரவசனுன உன்னைப் பரதந்திரனுக எண்ணு கின்றோம். இப்படிப்பட்ட தூஷணமானது உன்னுடைய ஸர்வஜ்ஞத்வத்தையும் பற்றுகிறது. ஆச்சர்யம், ஏனென்ருல் இவ்விபூதியிலுள்ள பக்தர்களிடத்தில் குற்றத்தைச் சிறிதும் பார்க்கின்ருயில்லையிறே.]

பாணிபாதவதநேக்ஷண சப்தை:
அம்புஜாந்யபதிசந் வரதத்வம்,
பாஹுபிஸ் த்வதி விசால தமாலாந்
ஆஞ்ஜநம் கரிகிரேரஸி ச்ருங்கம். (21)

[ஓ வரதனே! திருக்கை, திருவடி, திருமுகம், திருக்கண் என்னும் திருநாமங்களாலே தாமரை மலர்களையும், புஜங்களினுலே மிகப்பெரிய பச்சிலை மரங்களையும் மறைத்துக் கொண்டிரா நின்ற நீ திருவத்திகிரிக்கு அஞ்சன மயமான சிகரமாக ஆகி நின்ருய்].

த்வாமுதாரபுஜமுந் நஸமாயத்
கர்ணபாச பரிகர்மஸதம்ஸம்,
ஆயதாக்ஷமபி ஜாத கபோலம்
பாரணீயதி வரப்ரத த்ருங்மே. (22)

[ஓ வரதனே! அடியேனுடைய கண்ணுனது ஔதார்யமுள்ள பாஹுவையுடையவனும், உன்னதமான திரு மூக்கையுடையவனும், நீண்டு சிறந்த திருச்செவிகளை அலங்காரமாகக் கொண்ட நல்ல திருத்தோள்களையுடையவனும், செவியளவும் நீண்ட திருக்கண்களையுடையவனும், ஆபிஜாத்யம் பொருந்திய கண்டஸ்தலங்களையுடையவனுமான உன்னை பூர்ணுநுபவம் பண்ண விரும்புகின்றது.]

நீலமேக நிபமஞ்ஜந புஞ்ஜ
ச்யாமகுந்தள மநந்தசயம் த்வாம்,
அப்ஜபாணிபதமம் புஜநேத்ரம்
நேத்ரஸாத்குரு கரீச ஸதா மே, (23)

[ஓ திருவத்திகிரிநாதனே! கருமுகில் போன்றவனுய், மைவண்ண நறுங்குஞ்சிக்குழலை யுடையவனுய், திருவநந்தாழ்வான் மீது பள்ளி கொள்பவனுய், தாமரை போன்ற திருக்கைகளையும், திருவடிகளையும் உடையவனுன உன்னை எப்போதும் அடியேனுக்கு சக்ஷுர் விஷயமாக்கியருள்.]

**த்வக் ச த்ருக் ச நிபிபாஸதி ஜிஹ்வா**
**விஹ்வலா ச்ரவணவத் பரவ்ருத்தௌ,**
**நாஸிகா த்வயி கரீச ததேதி**
**ப்ராப்நுயாம் கதமிமாம்ஸ் விதவஸ்தாம். (24)**

[ஓ ஹஸ்திகிரி நாதனே! த்வகிந்த்ரியமும், சக்ஷுரிந்திரியமும் மிகவும் பானம் பண்ணவிரும்புகின்றது. ரஸேந்த்ரியமானதுச் ரோத்ரேந்த்ரியத் தோடொப்ப இந்த்ரியாந்தரங்களின் வியாபாரத்தில் சாபல்ய முடையதாய் ஆகிறது. க்ரோணேந்த்ரியமும் அப்படியே இந்த்ரியாந்தரவ்ருத்தியை விரும்பி நிற்கிறது என்று சொல்லக்கூடிய (முக்திதசையில் விளையக்கூடிய) இந்த அவஸ்தையை அடியேன் இந்த விபூதியிலே உன் விஷயத்திலே எங்ஙனமேயோ அடைந்திடுவேன்.]

**ஆதிராஜ்யமதிகம் புவநாநாம்**
**ஈச தே பிசுநயந் கில மௌலி:,**
**சூலிகாமணி ஸஹஸ்ரமரீசே:**
**ஹஸ்திபூஷண பவத்யுத யாத்ரி: (25)**

[ஹஸ்திகிரிக்கு அலங்காரமாயுள்ள தேவாதிராஜனே! உலகங்கட்கெல்லாம் நீ அதிராஜனுயிருக்கும் தன்மையை மிகவும் கோட் சொல்லா நின்ற உன்னுடைய திருவபிஷேகமானது தன் சிகரத்திலேயுள்ள ரத்நமாகிற ஸூர்யனுக்கு உதயபர்வதமாக ஆகா நின்றதன்றே.]

**உத்தரத்யுபரி பக்தஜநாநிதி**
**ஊர்த்வதாச்ரயண ஸூசிதசக்திம்,**
**ஊர்த்வபுண்ட்ரதிலகம் பஹுமாநாத்**
**கிம் பிபர்ஷி வரத ஸ்வலலாடே. (26)**

[ஓ வரதனே! இந்த ஊர்த்வபுண்ட்ரதிலகமானது பகவத் பக்தர்களை ஊர்த்வகதியை அடைவிக்கின்றது என்று ஊர்த்வாகார விசிஷ்டமாயிருக்கையினுல் ஸூசிப்பிக்கப்பட்ட சக்தியையுடைய ஊர்த்வபுண்ட்ரதிலகத்தைத்தன் திருநெற்றியிலே 'நம் அடியார் உகந்தது' என்கிற ப்ரீதிவிசேஷத்தாலேயே தரியா நின்ருய்.]

**கர்ணிகா தவ கரீச கிமேஷா**
**கர்ணபூஷண முதாம் ஸவிபூஷா,**
**அம்ஸலம்ப்யலக பூஷணமாஹோ**
**மாநஸஸ்ய மம வா பரிகர்ம. (27)**

[ஓ! திருவத்திகிரிநாதனே! உன்னுடைய இந்த கர்ணபூஷண மானது திருச்செவிகளுக்கு அலங்காரமோ? அல்லது திருத்தோள் களுக்கு அலங்காரமோ? அங்ஙனன்றிக்கே திருத்தோள்களில் அலையாநின்ற திருக்குழல்களுக்கு அலங்காரமோ? அங்ஙனுமன்றி அடியேனுடைய ஹ்ருதயத்திற்கு அலங்காரமோ ?]

பாரிஜாதவிடபாநபிதோ யா
புஷ்பஸம்பதுதியாத் கரிநாத,
தாம் விடம்பயதி தாவக பாஹு
ஆததா து கடகாங்கதலக்ஷ்மீ: (28)

[ஓ ஹஸ்திகிரிநாதனே! உனது புஜங்களில் பரம்பியுள்ள கைவளை, தோள்வளை இவற்றின் சோபையோ வெனில் கல்ப விருக்ஷத்தின் கிளைகளைச் சுற்றி யாதொரு புஷ்பசோபை உண்டா குமோ அந்த சோபையை அநுகரிக்கின்றது. "ஒரு கற்பகத்தரு பணைத்துக் கணுத்தோறு மரும்பினுப்போலேயாயிற்று வடிவும் திவ்யாயுதங்களும் சேர்ந்த சேர்த்தியிருப்பது" (திருவாய்மொழி 3-10-1. ஈடு.) பாரிஜாததருஸ்தானீயன் பேரருளாளன்.]

மத்யமாநசலபேஙிலஸிந்து
ப்ரோத்திதிக்ஷணதசாம் கமிதௌ தே,
வக்ஷஸி ஸ்புரிதமௌத்திகஹாரே
கௌஸ்துபச் ச கமலா ச கரீச. (29)

[ஓ ஹஸ்திகிரிநாதனே! தளதள என்ற முக்தாஹாரத்தை யுடையதான உனது திருமார்பில் ஸ்ரீகௌஸ்துபமணியும் பிராட்டி யும் கடையப்படாநின்றும் அசையாநின்ற நுரைகளையுடைத்தா யுமிரா நின்ற கடலில் நின்றும் உதித்த ஸ்மயத்தின் அவஸ்தையை அடைவிக்கப் பெற்றுள்ளன. ஸமுத்ரம்-திருமார்பு, மதனகால சமய சஞ்சலமாயிராநின்ற நுரை-தளதளென்ற முக்தாஹாரம், கௌத்துபம்கமலை உதிக்கப்பெற்ற ஸமயம் - திருமார்பிலே விளங் கும் நிலையெனக் கொள்க.]

அஞ்ஜநக்ஷிதிப்ருதோ யதி நாம
உபத்யகா வரத ஹேமமயீ ஸ்யாத்.
தாத்ருசீ தவ விபாதி து லக்ஷ்மீ:
ஆம்பரீ பத விடம்பித வித்யுத். (30)

வரதராஜனே! மின்னல் போன்றதான உனது பீதாம்பர சோபையோவெனில் அஞ்சனமயமான தொருமலையினுடைய தாழ்

வரையானது ஸ்வர்ணமயமாக இருக்குமேயர்கில் அதுபோன்றதாக விளங்குகின்றது ஆச்சரியம். அஞ்சனபர்வதம் பேரருளாளன் ஹிரண்மயஸாநுதிருப்பீதாம்பரம்.]

**பரபாகமியாத் ரவேஸ் தமிஸ்ரா**
**வரதாத்ய த்வயி தந்நிசாமயாம:,**
**கமிதா தவ வக்த்ரசித்ரபாநோ:**
**பரமாகம் நநு கௌந்தலீ தமிஸ்ரா. (31)**

[ஓ வரதராஜனே! இருள்திரளானது ஸூர்யனுக்கு பரபாகம் என்னும்படியை அடையட்டும். அந்த நிலைமையை இப்போது உன் பக்கலில் காணுகின்றோம். எங்ஙனேயென்னில், உன்னுடைய திருக்குழற்கற்றையிலே யுள்ள இருளானது திருமுகமண்டலமாகிற ஸூர்யனுக்கு பரபாகசோபையை அடைவிக்கப் பட்டிராநின்றதிறே, ஒரு நிறத்தினுடைய ஸந்நிதானத்திலே அதற்கு ப்ரதிபடமான மற்றொரு நிறம் அமைந்திருந்து சோபித்தால் அந்த சோபைபரபாகசோபை எனப்பெறும். பகவானுடைய கரியதிருமேனியிலே ஹிரண்யவர்ணையான பிராட்டிதிகழ்வது பரபாக சோபை. கொவ்வைக்கனிபோன்ற திருவதரத்தின் அருகே மல்லிகை அரும்புபோன்ற திருமுத்துக்கள் திகழ்வதும், அதிவிசாலதமால நிபமான பாஹுக்களிலே கனகமயக்கடகாங்கதங்கள் விளங்குவதும் பரபாக சோபையின்பாற்படும். பேரருளாளனுடைய குந்தளங்கள் காளராத்திரிபோலே கருத்து விளங்குகின்றன. திருமுகமண்டலம் கதிராயிரமிரவிபோல ஜ்வலியா நின்றது. இந்தமுககுந்தளங்களுடைய பரபாக பரஸ்பர ஸ்ரீயானது பரமபோக்யமாயிராநின்றது.]

**உபயோரபி பக்ஷயோஸ் திதிர்யா**
**விஷமீபாவநிராஸதாஷ்டமீதி,**
**உபமாநஜ ஸம்பதே ஹி ஸேந்தோ:**
**வரதாபூத் பவதோ லலாடலக்ஷ்ம்யா. (32)**

[ஓ! வரதராஜனே! சுக்லமும் கிருஷ்ணமும் இரண்டு பக்ஷங்களிலும் உள்ள அஷ்டமி என்கிற யாதொரு திதியானது சந்திரனுக்கு விஷமத்தன்மையைப் போக்கடிக்க வல்லதோ அந்த அஷ்டமி திதியானது அந்த சந்திரனுக்கு உன்னுடைய திருநெற்றியின் அழகோடே ஒப்பிடுவதனால் உண்டாகிய செல்வத்தின் பொருட்டும் ஆயிற்று. அஷ்டமி திதி ஏற்றத்தாழ்வில்லாமல் ஸமமான அர்த்தாம்சமாயிருக்கும் தன்மையைச் சந்திரனுக்கு அளிக்கின்து. இரு

ளோடே சேர்த்தியையுடையவனும் ஸம நிலைமையையுடையவனுன அஷ்டமீ சந்திரன் பேரருளாளனுடைய திருநெற்றிக்கு ஒப்பாகச் சொல்லத்தக்கவன். வரதனுடைய திருமுக மண்டலத்திலே அல்லன்னகுழலை அர்த்தாம்சமாகவும், அழகிய திருநுதலை அர்த்தாம்சமாகவும் கொள்க.]

அலகாலிசி கீர்ஷயா கிலாத்தா
ஸுபரீசி க்ஷிஷயா லலாட பட்டே,
ஸுமஷீ நிகஷீக்ருதா ப்ருவௌ தே
வரத ஸ்யாதக்ருதத்வதஸ் து நைவம். (33)

[ஓ வரதராஜனே! பிரமனுலே திருக்குழற்கற்றை நிருமிக்க வேணும் என்கிற இச்சையினுல் கையில் எடுத்துக் கொள்ளப் பெற்றதாய் அதன் கருமையை நன்ருகப் பரீக்ஷித்துப் பார்க்க வேணும் என்கிற விருப்பத்தினுலே திருநெற்றியாகிற கற்பலகையிலே உரைக்கப் பெற்ற நல்ல மையானது உன்னுடைய புருவங்களாக ஆயிற்று. இப்படி உத்ப்ரேக்ஷிக்கலாமாயினும் உன்னுடைய திருமேனி க்ருத்ரமமன்ருகையாலே, ஸ்வயம் வியக்தமாகையாலே இங்ஙனே உத்ப்ரேக்ஷிக்கலாகாது. எல்லாவற்றையும் உண்டாக்குகின்ற சதுர்முகன் பேரருளாளனுடைய திருநெற்றிக்கு மேலே கருங்குழல்களைச் சிருட்டிக்கப் புகுந்து அந்த குந்தலங்களுக்கு உபாதாந காரணமாகச்சிறந்த அஞ்ஜனத்தைக் கையிலே பற்றி 'இவ் வஞ்ஜனத்தின் நிறம் சிறந்ததா? என்று பரீக்ஷிக்கத் திருநெற்றியாகிற உரைகல்லிலே இரண்டு இடங்களில் தீற்றிப் பார்த்தான். அம்மைதான் திருப்புருவங்களாக விளங்குகின்றன. பேரருளாளனுடைய திவ்ய திருமேனி ஒருவராலும் சிருட்டிக்கப் பெற்றதல்லாமையாலே இந்த உத்ப்ரேக்ஷை ஒவ்வாது.]

ச்ரவஸச் ச த்ருசச் ச சப்தரூப
க்ரஹணே தே ந ஹி ஜீவ வத் வ்யவஸ்தா,
உபயோரகிலே க்ஷண க்ஷமத்வாத்
வரதாத: ச்ரவணுச்ரயே த்ருசௌதே. (34)

[ஓ வரதனே! உன்னுடைய திருச்செவிக்கும் திருக்கண்ணுக்கும் சப்தத்தையும் ரூபத்தையும் க்ரஹிக்கும் விஷயத்தில் ஜீவாத்மாவுக்குப்போல 'இன்ன இந்திரியம் இன்ன குணத்தைத்தான் கிரஹிக்கவற்று' என்கிற வியவஸ்தை இல்லையன்ரு? அந்த இரண்டு இந்திரியங்களும் எல்லாவற்றையும் ப்ரத்யக்ஷிப்பதில் ஸமர்த்தங்களாகையாலே உன்னுடைய திருக்கண்கள் திருச்செவிகளை ஆச்ரயமாகவுடையனவாயின. ஜீவாத்மாக்களினுடைய இந்திரியங்

களுக்கு விஷயவ்யவஸ்தை உண்டு. ஒரு இந்திரியத்தின் சக்தி மற்றோர் இந்திரியத்துக்குக் கூடுவது இல்லை. அது கூடுவது முக்தி தசையிலே பகவத்ஸங்கல்பத்தாலே. இவ்வாறு ஜீவாத்மாக்களுக்கு உள்ள வ்யவஸ்தை பரமாத்மாவுக்கு இல்லை, 'ச்ரோத்ரமேதான் சப்தத்தை க்ரஹிக்கக் கடவது' நயனமே தான் ரூபத்தை க்ரஹிக்கக் கடவது' என்கிற நியமமில்லை எம்பெருமானுக்கு. எனவே திருக்கண்கள் திருச்செவிகளின் ஸ்தானத்தையும் விளாக்குலை கொண்டிரா நின்றன.]

கருணாரஸவாஹி வீக்ஷணோர்மே:
வரத ப்ரேமமய ப்ரவாஹபாஜ:,
தததீரவ ந:வலீ ப்ருவௌ த்ருக்
சலஸிந்தோஸ் தவ நாஸிகேவ ஸேது:. (35)

[ஓ வரதனே! கிருபாரஸத்தைப் பெருக்கா நின்ற கடாக்ஷமாகிற அலைகளை யுடைத்தாயும், பிரணயரூபமான ப்ரவாஹத்தை யுடைத்தானதாயும் இருக்கிற உன் திருக்கண்களாகிற அசையும் கடலுக்கு திருப்புருவங்கள் பரம்பியதாய்க் கரையிலுள்ள சோலை போலும், திருமூக்கானது அணைபோலும்.]

விபவம் விவ்ருணோதி விஸ்த்ருணீதே
ருசமாவிஷ்குருதே க்ருபாம பாராம்,
அபிவர்ஷதி ஹர்ஷமார்த்ரபாவம்
தநுதே தே வரதைஷ த்ருஷ்டிபாத: (36)

[ஓ வரதனே! உன்னுடைய இந்த கடாக்ஷமானது உன்னுடைய உபயவிபூதி ஸார்வபௌமத்வத்தை வ்யக்தமாக்குகின்றது; சோபையைப் பரவச் செய்கின்றது; எல்லையில்லாத கருணையை வெளிப்படுத்துகின்றது; நெஞ்சு கசிந்திருத்தலை உண்டாக்குகின்றது.]

அருணாதரபல்லவே லஸந்தீ
வரதாஸள த்விஜசந்த்ரசந்த்ரிகா தே,
அதிவித்ரும மஸ்த நிஸ்தலாலீ
ருசம் ஆவிஷ்குருதே ஹி புஷ்கராக்ஷ. (37)

[செந்தாமரைக் கண்ணனை வரம்தரும் பெருமானே! உன்னுடைய சிவந்ததும் தளிர்போன்றதுமான திருவதரத்திலே விளங்குகின்ற இந்த சந்திரன்போன்ற திருமுத்துக்களின் ஒளியானது பவழத்தின்மேலே வைக்கப்பட்ட முத்துவரிசையின் சோபையை வெளிப்படுத்துகிறது போலும்].

ஸ்மிதநிர்ஜ்ஜரிகா விநிஷ்பதந்தீ
தவ வக்ஷஸ்ஸ்தல பூதலே விசீர்ணா,
வரத ப்ரபிபர்த்தி ஹாரலக்ஷ்மீம்
அபி முக்தாவலிகா நதீவ தஜ்ஜா. (38)

[வரதனே ! முகமாகிற உந்நத ஸ்தாநத்தில் நின்றும் விழா நின்ற உன்னுடைய புன்முறுவலாகிற அருவியானது திருமார்பாகிற தரையிலே இறைந்ததாய்க் கொண்டு ஏகஹஸ்ரயஷ்டிக ஹார சோபையை அடைந்திடாநின்றது. ஏகாவளீஹாரமும் அந்த அருவியில் நின்றும் உண்டான ஆறுபோல் விளங்குகின்றது,]

பரிமண்டிதராஸ மண்டலாபி :
வரதாக்ராத்ம பீஷ்டகோபிகாபி :,
அநுவர்த்திததாத நப்ரஹர்ஷாத்
இவ புல்லம்ஹி கபோலயோர் யுகம் தே. (39)

[பேரருளாளனே ! அலங்கரிக்கப்பெற்ற குரவை கோஷ்டியையுடைய பிரியைகளான கோபஸ்த்ரீகளாலே மோரப்பெற்ற உன்னுடைய கபோலத்வயமும் இப்போதும் அநுவர்த்தித்து வாராநின்ற அப்போதைய ஹர்ஷப்ரகர்ஷத்தாலே போல விகஸித்திரா நின்றது.]

முகமுந்ந ஸமாயதாக்ஷமுத்யத்
ஸ்மிதத்ந்தம் ருசிராதரம் நதப்ரு,
லஸதம்ஸவிலம்பி கர்ணபாசம்
மயிதே நிச்சலமஸ்து ஹஸ்திநாத. (40)

[ஓ கரிகிரிநாதனே! உந்நதமான நாஸிகையையுடையதாயும், நீண்ட திருக்கண்களையுடையதாயும், விம்மி வெளியெழுகின்ற புன்முறுவலையுடைய திருமுத்துக்களையுடையதாயும், அழகிய திருவதரத்தையுடையதாயும், வளைந்த திருப்புருவங்களை யுடையதாயும், விளங்குகின்ற தோள்வரை தொங்குகின்ற சிறந்த செவிகளையுடையதாயும் இருக்கிற உனது திருமுக மண்டலமானது அடியேன் விஷயத்திலே நீடித்திருக்கக்கடவது. உன்கோயில் கடைத்தலைப்புகுந்த அடியேன் திறத்திலே உன்னுடைய திருமுக மண்டலம் எப்போதும் ஸேவை தந்தருளவேணும்.]

பத்மாயா : ப்ரணயரஸாத் ஸமாஸஜந்த்யா :
ஸ்வம் பாஹும் ஸபஹுமதோ புஜேநதேந,
காம நாமாந்வபவதஹோ தசாம் ததாத்வே
கண்டஸ் தே கரிகிரிநாத கம்பு காந்த :. (41)

[திருவத்திமாமலைத் தலைவனே ! சங்கம்போல் அழகிய உன்னுடைய திருக்கழுத்தானது பரீதிரஸத்தாலே அப்படிப்பட்ட உனது புஜத்தோட்டே தன்னுடைய புஜத்தைத் தழுவி முழுசா நின்ற பெரிய பிராட்டிக்கு மிகவும் பஹுமான பாத்திரமாய்க் கொண்டு அக்காலத்தில் என்ன அவஸ்தையை அநுபவித்ததோ! அந்தோ!]

**ஸாயாமா த்ருதபரிணத்தயோ ப்தயோ வா**
**தாத்ருச்யஸ் ஸ்புடமத வா திசச் சதஸ்ர :,**
**சத்வாரோ வரத வரப்ரதாஸ் த்வதீயா :**
**பாஸந்தே புஜபரிகாஸ் தமால நீலா :. (42)**

[ஓ வரதனே ! பச்சிலை மரம்போல் கறுத்தவையாயும் அடியார் வேண்டும் வரங்களையளிக்கவல்லவையாயும், நான்காயும் உள்ள உழல்தடி போன்ற உனது புஜங்களானவை நீட்சியோடு கூடி சுற்றுப்பரப்பு உடைத்தான கடல்போலவோ அல்லது அத்தனை நீட்சியும் சுற்றுப்பரப்பும் உடைய நான்கு திசைகள் போலவோ விளங்காநின்றன,]

**ஆச்லேஷ வரத புஜாஸ் தவேந்திராயா :**
**கோபீநாமபிமதராஸபந்தநே வா,**
**பந்தே வா முதமதிகாம் யசோதயாஹோ**
**ஸம்ப்ராப்தாஸ் தவ நவநீத மோஷதோஷாத் (43)**

[வரதனே ! உன்னுடைய புஜங்கள் பிராட்டியின் ஆலிங்கனத்திலேயோ, ஆய்ச்சிகளுக்கு அபிமதமாகத் திருக்குரவை கோத்ததிலேயோ, அல்லது வெண்ணெய் களவுகண்ட குற்றத்திற்காக யசோதையினால் கட்டுண்டதிலேயோ அதிகமான மகிழ்ச்சியை அடைந்தன.]

**ஸாலீயா இவ விடபாஸ் ஸபல்லவாக்ரா :**
**கல்லோலா இவ ஜலதேஸ் ஸவித்ருமாக்ரா :,**
**போகீந்த்ரா இவ ச பணமணீத்தவக் த்ரா :**
**பாஸந்தே வரத புஜாஸ் வாருணக்ரா : (44)**

[ஓ வரதனே ! சிவந்த நுனிகளையுடைய, சிவந்த திருவிரல்களையுடைய, உன்னுடைய புஜங்கள் தளிரோடு கூடிய நுனிகளையுடைத்தான ஸால வ்ருக்ஷத்தினுடையதான கிளைகள்போலவும், பவழங்

களோடு கூடிய நுனிகளையுடைய கடலினுடைய பெரிய அலைகள் போலவும், படங்களினுடைய மணிகளால் பிரகாசிக்கின்ற திரு முகங்களையுடைய சேஷன், வாஸுகி முதலிய அரவரசுகள் போல வும் விளங்குகின்றன.]

**அம்போதேஸ் ஸ்வயமபிமந்நதநம் சகர்த்த**
**சேஷாணீத்ரம் புநரபிபச் ச ஸப்தராத்ரம்,**
**ஸப்தாநாம் விவலய ஸிஸ்ம கண்ட முக்ஷ்ணும்**
**அம்லாநா வரத ததாபி பாணயஸ் தே. (45)**

[ஓ வரதனே! நீதானே கடல் கடைவதைச் செய்தருளி நின் ருய். அன்றியும் கோவர்த்தநமலையை ஏழுநாளளவும் தாங்கி நின் ருய். ஏழுவ்ருஷபங்களினுடைய கழுத்தையும், நம்பின்னைப்பிராட் டிக்காக முறித்தாய். இத்தனைசெய்து வைத்தும் உனது திருக் கைகள் வாடவில்லை.]

**ரிங்காதோ வ்ரஜஸத நாங்கணேஷு கிம் தே**
**கோயஷ்டிக்ரஹண வசாந்நு கோபகோஷ்ட்யாம்,**
**ஆலம்பாத்தயநய ஸூத்ரதோத்ரயோர் வா**
**பாணீநாம் வரத தவாருணத்வமாஸீத்.**

[வரதனே! திருவாய்ப்பாடியில் உள்ள மனைகளின் முற்றங் களில் தவழ்ந்து விளையாடினதாலேயோ, ஆயர்களின் திரளிலே பசுக் களை மேய்க்கும் கோல்களைப்பிடித்ததினலேயோ, பார்த்தஸாரதியா யிருந்தபோது தேர்க்குதிரைகளை சிக்ஷித்து நடத்தும் கருவிகளா யிருந்த கடிவாளத்தையும் சாட்டையையும் பிடித்ததனலேயோ உனது திருக்கைகளுக்குச் சிவப்பு உண்டாயிற்று.]

**ஸர்வஜ்ஞாஸ் ஸமுசிதசக்தயஸ் ஸதைவ**
**த்வத்ஸேவாஙியமஜுஷஸ் த்வ தேக போகா:,**
**ஹேதீ நாமதிபதயஸ் ஸதா கிமேதாந்**
**சோபார்த்தம் வரத பிபர்ஷி ஹர்ஷதோ வா. (47)**

[பேருளாளனே! ஆயுதத் தலைவர்களான சங்கசக்ராதிகள் ஸர்வஜ்ஞர்களாயும் அநந்யபோகர்களாயும் எப்போதுமே உன்னை ஸேவித்துக் கொண்டிருப்பதிலே நையத்ய முடையவர்களாயும் இருக்கிருர்கள். இப்படிப்பட்டவர்களை அழகுக்காகவோ ஸந் தோஷத்தினலோ எப்போதும் வஹித்துக் கொண்டிருக்கிருய்?]

கிம் தாதுர் ககநவிதாநமாத்ருகாபூத்
வக்ஷஸ் தே வரதவரேண்ய யத்ரநாம,
பத்மாயர் முகமத கௌஸ்து பச்ச ஜாதௌ
சந்த்ரார்க் காவுடுநிகராயதே து ஹார: (48)

[வரமளிக்கும் தேவர்களிற் சிறந்த வரதராஜனே! யாதொரு திருமார்பில் பிராட்டியின் திருமுகமும் கௌஸ்துப மணியும் சந்த்ர ஸூர்யர்களாக ஆயினவோ, முக்தாஹாரமோவென்றால் நக்ஷத்ர சமூகம் போன்றதோ, அப்படிப்பட்ட இந்த உனது திருமார்பானது பிரமனுக்கு ஆகாசம் என்ற ஒரு பூதத்தைச் சிருட்டிப்பதற்கு மூல நிதர்சநமாக ஆயிற்றே!]

அண்டாநாம் த்வதுதரமாமநந்தி ஸந்த:
ஸ்தாநம் தத்வரத கதம் நு கார்ச்யமஸ்ய,
மாஹாத்ம்யம் ஸ்வதஇஹ யேஷு நூநமேஷாம்
ருத்திஸ் ஸ்யாந்மஹிமகரீ ந ஹீதரேஷாம். (49)

[ஓ வரதனே உனது திருவயிற்றை அண்டங்கள் அனைத்துக்கும் இருப்பிடமாக பராசராதிப்ரஹ்ம வித்துக்கள் இயம்புகின்றனர். அப்படியிருக்க இந்தத்திருவயிற்றுக்கு மெலிவானது எங்ஙனேயோ? இவ்வுலகில் எந்தவஸ்துக்களில் பெருமையானது ஸ்வதஸ்ஸித்தமோ இந்த வஸ்துக்களுக்குத்தான் உண்டாகிற பெருமையில்லாத இதர வஸ்துக்களுக்கு உண்டாகிற ஸம்ருத்தியானது பெருமையை விளைவிக்கவல்லதன்று, இது திண்ணம்.]

ஸௌந்தர்யாம்ருதரஸவாஹவேகஜஸ் ஸ்யாத்
ஆவர்த்தஸ் தவ கில பத்மநாப நாபி:,
தத்பத்மம் வரதவிபாதி காந்திமய்யா:
லக்ஷ்ம்யாஸ் தே ஸகலவபுர்ஜுஷோநு ஸத்ம. (50)

[பற்பநாபனாகிய வரதனே! உனது திருநாபியானது திருமேனியழகாகிற அம்ருதரஸ ப்ரவாஹத்தின் வேகத்தாலேயுண்டான சுழியாம். அந்த நாபியிலுள்ள தாமரைமலர் உன்னுடைய திருமேனியெங்கும் வியாபித்திருக்கிற காந்தியாகிற லக்ஷ்மிக்கு இருப்பிடம்போல விளங்குகின்றது.]

யா தாமோதர இதி நாமதா தவாஸீத்
ஸா தாமாங்கில கிண காரிணீ பபூவ,
தந்நூநம் வரத வலித்யச்சலேந
த்வந்மத்யப்ரதமவிபூஷணீ பபூவ. (51)

[ஓ வரதனே ! யாதொருதாம்பானது உனக்கு தாமோதரன் என்னும் பெயரை அளித்ததோ அந்தத் தாம்பன்றோ தழும்பையும் உண்டுபண்ணிற்று. அந்தத் தழும்பானது த்ரிவளியென்கிற வியாஜத்தால் உனது மத்ய ப்ரதேசத்திற்கு முதன்மையான பூஷணம் ஆயிற்று.]

**யாத்ருக்பீஜாத்யுஷிதபுவி யத் வஸ்து ஹஸ்தீச ஜாதம்**
**தத் தாத்ருக்ஷம் பலதி ஹி பலம் த்வய்ய பீக்ஷாம ஹேதத்,**
**யஸ்மாதண்டாத்யுஷித உதரே தாவகே ஜாயமாநம்**
**பத்மம் பத்மாநந கில பலத்யண்ட ஷண்டாந கண்டாந். (52)**

[தாமரைபோன்ற திருமுகத்தையுடைய ஸ்ரீ ஹஸ்திகிரி நாதனே ! எந்த ஜாதியமான விதை பொருந்தியவிடத்தில் எந்த வஸ்துவானது உண்டானதோ அந்த வஸ்துவானது அந்த விதையின் ஸஜாதியமான பலத்தை உண்டாக்குகின்றதன்றோ ? அந்த நியாயத்தை உன்னிடத்திலும் காண்கின்றோம். யாதொரு காரணத்தாலே அண்டங்கள் வஸிக்கப்பெற்ற உனது திருவயிற்றில் உண்டாகிற நாபிக்கமலமானது அளவற்ற அண்ட ஸமூஹங்களை உண்டாக்குகின்றதோ.]

அஜ்ஞே யஜ்ஞேச்வர கில ஜநே க்வாப்யதர்சம் விமர்சம்
விச்வாதீச : கதம இதி தந்நிர்ணயம் வர்ணயாம:,
வ்யாவக்ரோசீ ந்ருஷு ஸமுதிதா யாநுபாச்ரித்ய தேபி
ப்ரஹ்மாத்யாஸ் தே வரத ஜநிதாஸ் துந்தகந்தார விந்தே. (53)

(ஸர்வஜ்ஞஸமாராத்யனான ஓ வரதனே ! அடியேனுகிற ஒரு மூடஜனத்தினிடத்தில் ஸர்வலோகங்களுக்கும் தலைவன் யார்? என்ற ஆராய்ச்சியை நோக்கினேன். அவ்வாராய்ச்சி முடிவைச் சொல்கின்றோம். யாவர் சில ப்ரஹ்மாதிகளைப் பற்ற பரத்வ விஷயமான மாறுன கோலாஹலம் தேவதாந்தரப்ரவணரான மனிதர்களிடத்தில் உண்டாயிற்றோ அந்த பிரமனுதி தேவதாந்தரங்களும் உன்னுடைய உந்தியை மூலகந்தமாகவுடைய தாமரை மலரில் உண்டாக்கப்பட்டவை.]

முஷ்ணந் க்ருஷ்ண: ப்ரியநிஜஜனைர் ஜய்யஹையங்கவீநம்
தாம்நா பூம்நா வரத ஹியயா த்வம் யசோதாகராப்யாம்,
பத்தோ பந்தக்ஷபணகரணீம் தாம் கிலாத்யாபி மாது :
ப்ரேம்ணு காத்ராபரணமுதராபந்தநாக்யம் பிபர்ஷி.
(54)

[ஜயித்து ஸம்பாதிக்கக்கூடிய கவ்யத்தை தோழன்மாரோடு கூட களவாடினவனுய் யசோதையின் கைகளால் யாதொரு தாம்பிஞலே கட்டுண்டவனுய் ஆனுயோ, ஸம்ஸார பந்தமென்னும், கட்டை அவிழ்த்துத் தொலைக்கவல்ல அந்தத் தாம்பை பேரருளாளனுக ஸேவை ஸாதிக்கிற இப்போதும் தாயினிடத்தில் அன்பிஞல் உதரபந்தனம் என்று பெயர்பூண்ட தேஹபூஷணமாக சாத்தியருளா நின்ருய்.]

*ஸௌந்தர் யாக்யா ஸரிதுரஸி விஸ்தீர்ய மத்யா வருத்தா*
*ஸ்தா நால்பத்வாத் விஷமகதி ஜாவர்த்த கர்த்தாப*
*நாபி:,*
*ப்ராப்ய ப்ராப்த ப்ரதிம ஜகநம் விஸ்த்ருதா ஹஸ்திநாத*
*ஸ்ரோதோபேதம் பஜதிபவத: பாததே*
*சாபதேசாத். (55,*

[ஹஸ்திகிரிநாதனே! திருமார்பில் பரவி பெருகிக்கொண்டு வருமளவில் மத்ய ப்ரதேசத்தாலே தடைபட்டதாய் அவகாசம் ஸ்வல்பமாயிருந்ததாலே உண்டான, விஷமகதியாலுண்டான குழி போன்றிருக்கிற நாபியையுடைத்தான ஸௌந்தர்யம் என்ற பெயர் பூண்ட நதியானது அடையப்பட்ட ப்ருதுத்வத்தையுடைய, கனமான, ஜகனப்ரதேசத்தை அடைந்து, முன்பு திருமார்பில் போல, பரவியதாய்க்கொண்டு உன்னுடைய திருவடிகள் என்கிற வியாஜத்தாலே இரண்டு வாய்க்காலாகப் பிரிகிறது.]

*ரம்பாஸ்தம்பா: கரிவரகரா: காரபாஸ் ஸார பாஜ:*
*வேஷாச்லேஷா அபி மரகதஸ்தம்ப முக்யாஸ்*
*துலாக்யா:,*
*ஸாம்யம் ஸம்யக் வரதந ததுஸ் ஸர்வ முர்வோஸ்*
*த்வ தூர்வோ:*
*நஹ்யைச் வர்யம் தததி ந தததா யௌவநாரம்ப*
*ஜ்ரும்பா : (56)*

[ஓ வரதனே ! பலிஷ்டங்களான வாழைத்தண்டுகள், கஜேந்திரத்தின் துதிக்கைகள், கரப்ரதேசங்கள், மரகதமயமான தூண்

முதலியவற்றையெல்லாம் துடைகளினுடைய ஆக்ருதியின் ஸம்பந்தத்தையுடையவைகளால் உபமானமாகப் போரும் ப்ரஸித்தியை உடையவையாயினும் பருத்திருக்கிற உனது திருத்தொடைகளுக்கு ஸர்வாத்மநா ஸாம்யத்தை நன்றாகப் பெறவில்லை. ஏனென்றால் கீழ்ச்சொன்ன ரம்பா ஸ்தம்பாதிகள் அப்படிப்பட்ட சக்தி விசேஷத்தை வஹிக்கின்றனவில்லை. எப்போதும் யௌவனாரம்பமேயாயிருக்கிற அப்படிப்பட்ட அழகுகளேயும் அல்லது யௌவன ஆரம்பத்தில் உண்டாகக்கூடிய அப்படிப்பட்ட விகாஸங்களையும் வஹிக்கின்றனவில்லையே.]

*யா தே காந்ரே வரத ஜநிதா காந்திமய்யாபகாபூத்*
*தஸ் யாஸ் ஸ்ரோதோத் விதயமிஹ யத் யாதி பாத ப்ரவாதம்,*
*தஜ்ஜா தோர்த்வப்ரமியுகமிவோத் பாநு நீ ஜாநு நீதே*
*ஸ்யா துக்ஷ்ணோர் வா ககுதயுகளம் யௌவனைச்வர்ய நாம்நோ.* (57)

[ஓ வரதனே ! உனது திருமேனியில் காந்தி ஸ்வரூபமான யாதொரு நதியானது உண்டாக்கப்பெற்றிருக்கிறதோ அந்த நதியினுடைய இரண்டு பிரிவான யாதொரு பிரவாஹமானது இந்தத் திருமேனியில் திருவடிகள் என்கிற வியாஜத்தை அடைகின்றதோ மேற்கிளர்ந்த உனது முழந்தாள்கள் பாதப்ரவாதத்தையடைந்த அந்த ப்ரவாஹத்வயத்தில் உண்டான ஊர்த்வாகாரமான இரண்டு நீர்க்குமிழிபோல விளங்குகின்றன அல்லது யௌவனம் என்றும், ஐச்வர்யம் என்றும் பெயரையுடைய இரண்டு எருதுகளினுடைய இரண்டு முசுப்புகளாம்.]

*ப்ரேம்ணாக்ராதும் கரிகிரிசிரோ நோமுகீ பாவ பாஜோ:*
*அங்க்ரீத்வந்த் வாஹ்வயகமல யோர் தண்ட காண்டா யமானே,*
*அத்ரிஸ்பர்சோத் பவஸுகத உத்கண்டகே ரோமஹர்ஷாத்*
*த்ரஷ்டுர் த்ருஷ்டிர் வரத கிமலம் லங்கிதும் ஜங்கிகே தே.* (58)

[ஓ வரதனே ! கரிகிரியின் உச்சியை போக்யதாதிசய ப்ரயுக்தமான ப்ரீதியால் ஆக்ராணம் செய்வதற்கு கவிழ் முகமாகவிருக்கும் நிலைமையை யடைந்துள்ள திருவடியிணைகளென்னும் தாமரை மலர்களினுடைய நாளத் தண்டு போன்றனவாய் திருமலையோட்டை ஸ்பர்சத்தால் உண்டான ஸுகத்தினால் ஆகிய மயிர்க்கூச்செறிவதனால் கண்டகிதங்களாயிருக்கிற உனது கணைக்கால்களை ஸேவிப்பவனுடைய கண் விட்டு அவ்வருகே போகவல்லதோ ?]

பக்தா நாம் யத் வபுஷி தஹரம் பண்டிதம் புண்டரீகம்
யச்சாம் லாநம் வரத ஸததாத் யாஸநாதாஸ நாப்ஜம்,
ஆம் நாயாநாம் யதபி ச சிரோ யச்ச மூர்த்தா சடாரே:
ஹஸ்த்யத்ரேர் வா கி மதிஸுகதம் தேஷு பாதாப்
ஜயோஸ்தே. (59)

[ஓ வரதனே! பக்தர்களான யோகிகளுடைய சரீரத்தில் ஞான விகாஸ சாலியாய் தஹரம் என்னும் பேருடையதாய் யாதொரு தாமரையுண்டோ, பரமபதத்தில், நீ எப்போதும் வீற்றிருந்த போதிலும் வாட்டமடையாத ஆஸனத்தாமரையென்று யாதொன்றுண்டோ, நம்மாழ்வாருடைய திருமுடி யாதொன்றுண்டோ இந்த ஸ்ரீஹஸ்திகிரியின் சிகரம் யாதொன்றுண்டோ ஆக ப்ரசித்த மான இந்த ஸ்தானங்களுள் உன் திருவடித் தாமரைகளுக்கு மிக்க ஸுகத்தைக் கொடுக்கிற இடம் எது கொல்?]

பத்யாஸ்வத்யாங்குளிஷு வரத ப்ராந்தத: காந்திஸிந்தோ:
வீசீ வீதீ விபவமுபயீஷ்வம்பஸோ லம்பிதாஸு,
விந்தந்நிந்து: ப்ரதி பல நஜாம் ஸம்பதம் கிம் பதம் தே
சாயாச்சத்மா நகவிததிதாம் லம்பித: சும்பிதஸ்
ஸந். (60)

[ஓ வரதனே! காந்திக்கடலினுடைய நீரைச் சுற்றி அலை வரிசைகளின் சோபையை அடைவிக்கப் பெற்றிருக்கிற திருவடி களிலேயுண்டான இரண்டு வகுப்பான திருவிரல்களில் ப்ரதிபலிப் பதனுல் உண்டான இப்போது அடைகிறவனுய் ப்ரதிச்சாயா ஸ்வ ரூபனுன சந்திரனுனவன் நகபங்க்தியாயிருக்கை அடைவிக்கப் பெற்றவனுய் உனது திருவடியை விளங்கச் செய்தனன்கொல்]

சம்போரம் போருஹமுக ஸகா ஸந் ஸஹாங்கச்சசாங்க:
குர்வந் ஸேவாம் வரத விகலோ வ்ருத்த ஹீநஸ்
ஸுவக்ர:,
த்வத் பாதாப்ஜே ப்ரியமக நகச்சத்மநாச்ரித்ய நித்யம்
ஸத்வ்ருத்தோபூத் ஸ ச தசகுண: புஷ்கலோ
நிஷ்கலங்க: (61)

[தாமரைபோன்ற திருமுகத்தையுடையவனுய். யஜ்ஞப்ரிய னுன ஓ பேரருளாளனே! ஏற்கனவே பாபமுடையனுன (களங் கத்தையுடையவனுன) அந்த சந்திரன் ருத்ரனுக்குத் தோழனுனவ னுயும், வித்யாவிஹீனனுயும் (மூளியாய்), ஸதாசாரஹீனனுய் (உருண்டை வடிவமிழந்தவனுய்), குடிலஹ்ருதயனுய் (மிகவும் கோணலான ஆகாரமுடையனுய்), ஆகாநின்று உன் திருவடித்

தாமரைகளைத் தினமும் ஆச்ரயித்து களங்கமற்றவனாய் நித்யபூர்ணனாய், ஸதாசாரமுடையனாய் (உருண்டைவடிவமுடையனாய்) பதின்மடங்கு பெருகினவனாய் ஆனான்.]

த்வத்பாதாப்ஜே ப்ரஜாதா ஸுரஸரித பவத் ப்ராக்
சதுர்த்தா ததஸ்தாஸு
ஏகாம் தத்தே த்ருவஸ் ஸா த்ரிபுவநமபுநர்த் த்ரீந்
பதோ பாவயந்தீ,
தத்ரைகா கம் வ்ரஜந்தீ சிவயதி து சிவம் ஸாபுநஸ் ஸப்த
தாபூத்
தாஸ்வேகா காம் புநாநா வரத ஸகரஜஸ்வர்க்க
ஸர்க்கம் சகார. (62)

[ஓ வரதனே! உன் திருவடித் தாமரையில் உண்டான கங்கை முந்துறமுன்னம் நான்குபிரிவாக ஆயிற்று. பிறகு அந்த நான்கில் ஒன்றை துருவன் தரித்தான். துருவனால் தரிக்கப்பட்ட அது மூன்று மார்க்கங்களை உண்டாக்கா நின்றுகொண்டு ஸ்வர்க்க, அந்தரிக்ஷ, பாதாள என்ற லோக த்ரயத்தை பரிசுத்தமாக்கிற்று. மூன்றுவகையாகப் பெருகின அவற்றுள் அந்தரிக்ஷம் நோக்கிச் செல்கின்ற ஒரு நதியோவென்றால் உருத்திரனைப் பரிசுத்தமாக்குகிறது. சிவனாலே தரிக்கப்பெற்ற கங்கையோவெனில் ஏழு பிரிவாக ஆயிற்று. அவற்றில் பூமியைப் பரிசுத்தமாகச் செய்கின்ற ஒரு கங்கையானது ஸகர புத்ரர்களுக்கு ஸ்வர்க்கம் அடையச்செய்தது.]

பரிஜநபரி பர்ஹா பூஷணாந்யாயுதாநி
ப்ரவரகுணகணாச்ச ஜ்ஞாநசக்த் யாத யஸ்தே,
பரம பதமதாண்டாந் யாத்ம தேஹஸ் ததாத்மா
வரத ஸகல மேதத் ஸம்ச்ரிதார்த்தம் சகர்த்த. (63)

[வரதனே! சேஷசேஷாசநாதி பரிஜநங்களும், சத்ர சாமராதி பரிச்சதங்களும் கிரீடகுண்டலாதி பூஷணங்களும், திருவாழி திருச்சங்கு முதலிய திவ்யாயுதங்களும், ஜ்ஞாநசக்தி முதலிய ப்ரஸித்தங்களான சிறந்த குணகணங்களும், பரமபதமும் அண்டங்களும், ஸ்வாஸாதாரண விக்ரஹமும், திவ்யாத்மஸ்வரூபமும் ஆகிய இவையெல்லாவற்றையும் ஆச்ரிதர்களுக்கு ஆக்கினாய்.]

அநாப்தம் ஹ்யாப்தவ்யம் ந தவ கில கிஞ்சித் வரத தே
ஜகஜ்ஜந்மஸ்தே மப்ரலய விதயோ தீவில ஸிதம்,
ததாபி க்ஷோதீயஸ்ஸுர நரகுலேஷ்வாச்ரித ஜநாந்
ஸமாச் லேஷ்டும் பேஷ்டும் ததஸுகக்ருதாம்
சாவதரஸி. (64)

[வரதனே! உனக்கு முன்பு கிடைக்காததாய், பிறந்துபடைக்க வேண்டியதான ஒன்றும் இல்லையிறே. ஏனென்றால் ஜகத்துக்களின் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கார்யங்கள் உனது ஸங்கல்பத்தின் விலாஸமாக நிகழ்கின்றதிறே. இப்படி அவாப்த ஸமஸ்தகாமனாயினும் க்ஷணவிரஹாஸஹிஷ்ணுக்களான பாகவதர்களை அணைக்கைக்கும் அந்த பாகவதர்களுக்குத் தீங்கிழைக்கும் துஷ்டர்களைப் பொடிபடுத்துவதற்கும் அதி க்ஷுத்ரமான தேவ மநுஷ்யாதி ஜாதிகளில் அவதரித்தருளா நின்றாய்.]

விவேகதியமேகதோ ஹ்யபி நிவேச லேசோ ஹரேத்
மஹத்த்வபி நிவேசநம் கிமுத தந்மஹிம் நஸ் தவ,
அஹோ விஸத்ருசே ஜகத்யவததர்த்த பார்த்தாதிகம்
நிஜம் ஜநமுதஞ்சயந் வரத தம் ஸமாச்லேஷக: (65)

[பேரருளாளனே! ஒருவஸ்துவிலுள்ள ஆசாலேசமும், இது தக்கது இது தகாதது என்று பகுத்தறிவதாகிற விவேக ஞானத்தைக் கொள்ளை கொள்ளுமிறே. அதிகமான ஆசையோவென்றால் விவேகத்தை அழிக்கும் என்பதில் என்ன ஸம்சயம்? ஆகையால் உனது பெருமைக்கு அநுரூபமல்லாத இந்த லோகத்தில் அர்ஜுநாதிகளை பந்து ஜநமாக ஸம்பாவியாநின்றவனாய், அந்த அர்ஜுநாதி ஜனத்தைத் தன்னோடு ஒரு நீராகச் செய்கிறவனாய் அவதரித்தருளினாய். இதொரு ஸௌசீல்யம் இருந்தபடியென்?]

ஸம்ச்லேஷ பஜதாம் த்வராபரவச: காலேந ஸம்சோத்ய தாந்
ஆநீய ஸ்வபதே ஸ்வஸங்கமக்ருதம் ஸோடும் விலம்பம் பத,
அக்ஷாம்யந் க்ஷமிணாம் வரோ வரத ஸந்தராவதீர்ணோ பவே:
கிம் நாம த்வமஸம்ச்ரிதேஷு விதரந் வேஷம் வ்ருணீஷே து தாந். (66)

[ஓ பேரருளாளனே! பொறுமைசாலிகளுட்சிறந்த நீ பக்தர்களுடைய கலவியில் மிகவும் த்வரிதனாய் அந்த பக்தர்களைக் காலக்ரமமாக சீர்திருத்தி தனது நிலயிடமாகிய பரமபதத்திலே கொணர்ந்து சேர்த்துக்கொண்டு, உனதடி சேர்த்துக் கொண்டு, அவர்களை உன்னோடே அணையச் செய்வதில் ஏற்படுகிற விலம்பத்தை ஸஹிப்பதற்கு வல்லவனல்லவனாய் இவ்விருள்தருமா ஞாலத்தில் பிறந்தாயாகில் பிறந்திடுகிடாய். அதைப்பற்றி நான் ஒன்றும் கேட்கவரவில்லை. பின்னையோவெனில் அநாச்ரிதர்களிடத்தில் உனது திவ்ய விக்ரஹத்தை அநுபாவ்யமாகக்கொடாநின்றவனாய் அவர்களையும் திருவுள்ளம் பற்றுகின்றாயே. இது என் கொல்?]

வரத யதி ந புவ்யவாதரிஷ்ய:
ச்ருதிவிஹிதாஸ் த்வதுபாஸநார்ச்ச நாத்யா:,
கரணபத விதூரகே ஸதி த்வயி
அவிஷயதா நிக்ருதா: கிலாபவிஷ்யந். (67)

[ஓ வரதனே! இவ்வுலகில் நீ அவதரியாமல் போவாயாகில் பரவ்யூஹாந்தர்யாம் யாகாரமாயிருக்கிற நீ இந்திரிய மார்க்கங்களுக்கு தூரஸ்தனாயிருக்கு மளவில் வேதங்களில் விதிக்கப்பட்ட உன்னையுபாஸித்தல் ஆராதித்தல் முதலிய க்ரியைகள் நிர்விஷயங்களா யொழிவதனால் திரஸ்க்ருதங்களாக ஆய்விடுமத்தனையிறே.]

யத பராத ஸஹஸ்ர மஜஸ்ரஜம்
த்வயி சரண்ய ஹிரண்ய உபாவஹத்,
வரத தேந சிரம் த்வம விக்ரிய:
விக்ருதி மர்ப்பக நிர்ப்பஜ நாதகா: (68)

[ரக்ஷகனான ஓ வரதனே! ஹிரண்ய கசிபு உன்விஷயத்தில் ஸார்வகாலிகமான யாதொரு ஆயிரக்கணக்கான அபராதத்தைச் செய்தானோ அந்த அபராத ஸஹஸ்ரத்தால் நெடுநாள் வரையில் விகாரமே உண்டாகாதிருந்த நீசிறுகுழந்தையாகிய பிரஹலாதனுக்கு நேர்ந்த நலிவுகாரணமாக மனோவிகாரததை அடைந்தாய்.]

த்வாமாமநந்தி கவய: கருணாம்ருதாப்தே
ஜ்ஞாநக்ரி யாபஜநலப்ய மலப்ய மந்யை: ,
ஏதேஷு கேந வரதோத்தர கோஸலஸ்தா:
பூர்வம் ஸதூர்வமபஜந்த ஹி ஜந்தவஸ் த்வாம். (69)

[அருளாகிற அம்ருதத்திற்குக் கடல் போன்ற வரதனே! பராசரபாராசர்யாதிகவிகள் உன்னை ஞானயோக கர்மயோக பக்தியோகங்களால் ப்ராப்யனாகவும் உபாயாந்தரங்களினாலே அப்ராப்யனாகவும் ஓதி வைத்திருக்கிறார்கள், முன்பு ஸ்ரீராமாவதாரத்தில் உத்தரகோஸலத்திலுள்ள ஜந்துக்கள் த்ருணமுட்பட உன்னை அடைந்தனவன்றோ? அப்படி அடைந்ததானது கீழ்ச்சொன்ன கர்மஜ்ஞான பக்தியோகங்களுள் எந்த உபாயங்கொண்டு?]

பஜத்ஸு வாத்ஸல்யவசாத் ஸமுத்ஸுக:
ப்ரகாம மத்ராவதரேர் வரப்ரத,
பவேச்ச தேஷாம் ஸுல போத கிந்விதம்
யதங்க தாம்நா நியத: புராருத: (70)

[வாராய் வரதராஜனே! நீபக்தர்கள் பக்கலில் ப்ரீதிவிசேஷத்தால் மிக்க விருப்பமுடையவனாய் இவ்விபூதியில் வேண்டியபடி

அவதரித்துக்கொள். அதற்குமேல் அந்த அன்பர்களுக்கு ஸுலபனு யும் ஆகுகிடாய். பண்டு கிருஷ்ணவதாரத்தில் தாம்பினுல் கட்டுண் டவனுய் அழுதாய் என்பது யாதொன்றுண்டோ இது என் கொல்?]

நரஸிம்ஹதநுர கௌணீ
ஸமஸமய ஸமுத் பவச்ச பக்தகிர:,
ஸ்தம்பே ச ஸம்பவஸ் தே
பிசுநயதி பரேசதாம் வரத. ((71

[ஓ வரதனே! அப்ராக்ருதமான நரஸிம்ஹ திருக்கோலமும் பக்தனுகிய ப்ரஹ்லாதனுடைய 'எங்குமுளன்' என்ற வாய்ச் சொல்லின் ஸமகாலத்திலேயே வந்து தோன்றியதும் உன்னு டைய பரமேச்வரத்வத்தைத் தெரிவிக்கிறது.]

தாபத்ரயீ மயதவா நலதஹ்ய மாநம்
முஹ்யந்த மந்த மவயந்த மநந்த நைவ,
ஸ்தாதும் ப்ரயாது முபயாது மநீச மீச
ஹஸ்தீச த்ருஷ்ட்யம்ருத வ்ருஷ்டி பிராபஜதா: (72)

[ஸர்வஸ்வாமியாய் அபரிச்சின்னரூபனுய் ஹஸ்திகிரிநாதனுன வரதனே! தாபத்ரமயமான காட்டுத்தீயால் தபிக்கப் பெற்றிருக்கிற வனுய் மயக்கமுடையவனுயும், இந்த ஆர்த்தியின் எல்லையை அறியாதவனுயும், கையொழிந்து நிற்பதற்கும் ஒன்றைச் செய்யப் போவதற்கும், உன்னைக்கிட்டுகைக்கும் அசக்தனுன அடியேனை கடாக்ஷாம்ருதவர்ஷங்களால் புடைசூழக்கடவாய்.]

நாநாவிருத்த விதிசாஸு திசாஸு சாஹோ
வந்த்யைர் மநோரதசதைர் யுகபத் விக்ருஷ்ட:,
த்வத்பாதயோர நுதிதஸ்ப்ருஹ ஏஷ ஸோஹம்
ந ஸ்வஸ்தி ஹஸ்திகிரிநாத நிசாமயாமி, (73)

[அத்திகிரி நாதனே ! ஊமை கண்ட கனுப்போலே பழுதா யொழிகின்ற பல மனோரதங்களால் விருத்தங்களான பல பல குறுக்கு வழிகளிலும் நல்வழிகளிலும் ஒரே காலத்தில் இழுக்கப்பட் டவனுய் உன் திருவடிகளில் அன்பு உதிக்கப்பெருதவனுயிருக்கிற அடியேன் நன்மையை நோக்குகின்றிலேன்.]

ஹை நிர்ப்பயோஸ்ம்யவிநயோஸ்மி யதஸ் த்வதங்க்ரௌ
லிப்ஸாமலப்தவதி சேதஸி துர்விநீதே,
துஷ்கர்மவர்மபரிகர்மித ஏஷ ஸோஹம்
அக்ரே வரப்ரத தவ ப்ரலபாமி கிஞ்சித். (74)

[வரதனே! இவ்வடியேன் அச்சமற்றவனுயிருக்கிறேன்; விநயமற்றிருக்கிறேன்; அந்தோ! ஏனெனில், சீர்திருந்தாமலிருக்கிற என் நெஞ்சானது உன் திருவடிகளில் விருப்பத்தை அடையாதிருக்குமளவில் தீவினைகளாகிற கவசங்களை அணிந்துள்ள இவ்வடியேன் உன் எதிரில் வாயால் வந்ததொன்றைப் பிதற்றுகின்றேன்.]

**ஸவ்யாதிராதிர விதுஷ்டிர நிஷ்டயோக:**
**ஸ்வாபீஷ்டபஞ்ஜநமமர்ஷகரோ நிகர்ஷ:,**
**க்ருந்தந்தி ஸந்தத மிமாநி மநோ மதீயம்**
**ஹஸ்தீசந த்வதபிலாஷ நிதிப்ரஹாணி:. (75)**

[அத்திகிரிநாதனே! சரீரவ்யாதியோடு கூடின மனோவ்யாதி, நெடுநாள் அநுபவித்தும் திருப்தி பிறவாமை, வேண்டாதவை வந்துசேர்வது, விரும்பியபொருள் கிடைக்காதபடி தடைபடுவது, கோபத்தை உண்டாக்கவல்ல தாழ்ச்சி, என்ற இவை என் மனத்தை எப்பொழுதும் ஈர்கின்றன, உன்னிடத்தில் அன்பு இல்லையே என்கிற துக்கம் மாத்திரம் இல்லை என்க.]

**வித்வேஷ மாநமதரா கவிலோபமோஹாதி**
**ஆஜாநபூமிரஹமத்ர பவே நிமஜ்ஜந்,**
**நிர்த்வந்த்வநித்ய நிரவத்ய மஹாகுணம் த்வாம்**
**ஹஸ்தீச கச்ச்ரயிது மீக்ஷிதுமீப்ஸிதும் வா. (76)**

[ஜ்ஞாநாஜ்ஞானங்கள், ஸுகதுக்கங்கள் என்கிற த்வந்த்வம் இல்லாதவனும், ஸ்வபாவமாகவே ஹேயப்ரதிபடனுமுள்ள பேரருளாளனே! ஒரு வஸ்துவில் அகாரணமாகப் பகைகொள்வது, ஆபிஜாத்யாதிப்ரயுக்தமாக அஹங்கரிக்கை, விஷயலாபத்தாலே கொழுப்படைவது, விஷயப்ராப்தியை விரும்புகை, விசேஷலாபம், மோகம் என்ற இவை முதலான துர்க்குணங்களுக்குப் பிறப்பிடமாய் இந்த ஸம்ஸாரத்தில் மூழ்கிக் கிடக்கிற அடியேன் சிறந்த குணமுடைய உன்னை அடைவதற்கும் காண்பதற்கும் அடைய விரும்புவதற்கும் ஒன்றுக்கும் அதிகாரியல்லேன்.]

**புத்ராதய: கதமமீ மயி ஸம்ஸ்திதே ஸ்யு:**
**இத்ய ப்ரதிக்ரிய நிர்த்தகசிந்தநேந,**
**தூயே நது ஸ்வயமஹம் பவிதாஸ்மி கீத்ருக்**
**இத்யஸ்தி ஹஸ்திகிரிநாத விமர்சலேச: (77)**

[அத்திகிரிநாதனே! நான் மாண்டவளவில் இந்த மக்கள் முதலானவர்கள் எப்படியாவார்களோ என்று ப்ரதிகாரமற்றதாய், வியர்த்தமான சிந்தையால், அடியேன் கஷ்டப்படுகின்றேன். நாம் எப்படி ஆகப்போகிறோம் என்று மாத்திரம் சிறிது ஆராய்ச்சியும் அடியேனுக்கு இல்லை.]

**சம்பாசலம் பஹுளதுக்கமநர்த்த ஹேது:**
**அல்பீய இத்யபி விம்ருஷ்டிஷு த்ருஷ்டதோஷம்,**
**துர்வாஸநாத்ரடிமதஸ் ஸுகமிந்த்ரியோத்தம்**
**ஹாதும் ந மே மதிரலம் வரதாதிராஜ, (78)**

[பேரருளாளப் பெருமாளே! ஆராய்ச்சி செய்யும் அளவில் மின்னல்போல் க்ஷணிகமானது என்றும். துக்கப்ரசுரமானது என்றும், அநர்த்தங்களுக்குக்காரணம் என்றும், அத்யல்பம் என்றும், இவ்வாறாக ப்ரத்யக்ஷிக்கப்பட்ட தோஷங்களையுடையதாயும் இந்த்ரிய ஜந்யமாயும் உள்ள விஷய ஸுகத்தை என் புத்தியானது துர்வாஸனையின் உறைப்பினாலேவிட மாட்டாதிருக்கிறது.]

**புத்த்வா ச நோ ச விஹிதாகரணைர் நிஷித்த**
**ஸம்ஸேவனைஸ் த்வதபசாரசதைரஸஹ்யை:,**
**பக்தாகஸாமபி சதைர் பவதாப்யகண்யை:**
**ஹஸ்தீச வாக்தநுமநோஜநிதைர் ஹதோஸ்மி. (79)**

[தெரிந்தும் தெரியாமலும் வாக்கு, சரீரம், மனம் இவற்றால் உண்டாக்கப்பெற்ற ஸர்வசக்தனான உன்னாலும் எண்ணமுடியாத விஹிதங்களைச் செய்யாமையாகிற பாபங்களாலும், உன் திறத்தில் செய்யும் பலபல அபசாரங்களாலும், ஸர்வஸஹிஷ்ணுவான உனக்கும் பொறுக்கமுடியாத பலபல பாகவதாபசாரங்களாலும் கெட்டேன்.]

**த்வத்தாஸ்யமஸ்ய ஹி மம ஸ்வரஸப்ரஸக்தம்**
**தச்சோரயந்நயமஹம் கில சஸ்கல ப்ராக்,**
**த்வம் மாமகீந இதி மாமபிமந்யஸே ஸ்ம**
**ஹஸ்தீச ஸம்சமய நஸ் தமிமம் விவாதம், (80)**

[பேரருளாளனே! இப்படிப்பட்ட மஹாபாபியான எனக்கு என் பக்கல் அடிமையாயிருப்பதன்றோ ஸ்வாரஸிகமானது, ஸ்வதஸ்ஸித்தம். இந்த நான்பண்டெல்லாம் அந்த ஸ்வதஸ்ஸித்த தாஸ்யத்தைக் களவுகாணா நின்றவனாய் நழுவிப்போந்தேன்காண். நடுவே வந்துய்யக் கொள்கின்ற நாதனாகிய நீ இப்படிப்பட்ட என்னை 'இவன் நம்முடையவன்' என்று அபிமானித்தருளினாய். உனக்கும் நமக்கும் உண்டான நான் உன் தாஸன் அல்லேன் காண் என்று கைகழியப்போவதும், 'நீ என் தாஸன்' என்று என்னை நீ பின்தொடர்வதுமான இந்த ஸம்வாதத்தை இனி எப்போதும் தலையெடுக்கவொண்ணாதபடி ஸமூலசாந்தி செய்தருள்வாய்.]

**போகா இமே விதிசிவாதிபதம் சகிஞ்ச**
**ஸ்வாத்மாநு பூதிரிதி யா கில முக்திருக்தா,**
**ஸர்வம் ததூஷ ஜல ஜோஷமஹம் ஜுஷேய**
**ஹஸ்த்யத்ரிநாத தவ தாஸ்ய மஹாரஸஜ்ஞ: (81)**

[திருவத்திமாமலைநாதனே! உன்னுடைய அடிமைச்சுவ டறிந்த அடியேன் ஐஹிகங்களான எந்தசிலபோகங்கள் உண்டோ ப்ரஹ்மருத்ராதிகளுடைய பதவியாதொன்றுண்டோ, இன்னமும் ஆத்மாநுபவம் என்று சொல்லப்பட்ட யாதொரு மோக்ஷம் உண்டோ ஆகிய அவையனைத்தையும் ஊஷரஜலப்ராயமாக, அஸா ரமாக நினைக்கக்கடவேன்.]

**விஷய விஷதர வ்ரஜவயாகுலே**
**ஜநநமரண நக்ரசக்ராஸ்பதே,**
**அகதிரசரணோ பவாப்தௌ லுடந்**
**வரத சரணமித்யஹம் த்வாம் வ்ருணே, (82)**

[வரந்தரும் பெருமானே! சப்தாதி விஷயங்களாகிற ஸர்ப்ப ஸமூகங்களால் நிபிடமாயும், பிறப்பிறப்பாகிற முதலைக்கூட்டங்களு க்கு இருப்பிடமாயும் இருக்கிற ஸம்ஸாரக்கடலில் புரளாநின்ற அடி யேன், உபேயாந்தரசூந்யன், உபாயாந்தர சூன்யன் என்ற காரணத் தினாலே உன்னைச் சரணம் புகுகின்றேன்.]

**அக்ருதஸுக்ருதகஸ் ஸுதுஷ்க்ருத்தர:**
**சுபகுண லவலேச தேசாதிக:,**
**அசுபகுண பரஸ் ஸஹஸ்ராவ்ருத:**
**வரதமுருதமம் கதிம் த்வாம் வ்ருணே. (83)**

[அல்பஸுக்ருதத்தையும் அநுஷ்டிக்காதவனாய், பாபிஷ்டர் களில் அக்ரகண்யனாய், நல்ல குணத்தின் லவலேஸத்திற்கும் அதி தூரஸ்தனாய், காமக்ரோதம் முதலிய பல்லாயிரம் தீயகுணங்கள் சூழப்பட்டவனை அடியேன் பேரருளாளனாய் வரம்தரும் பெரு மாளான உன்னைச் சரணமாக அடைகிறேன்.]

**சரணவரணவாகியம் யோதிதர்**
**ந பவதி பத ஸாபி தீ பூர்விகா,**
**இதி யதி தயநீயதா மய்யஹோ**
**வரத தவ பவேத் தத: ப்ராணிமி. (84)**

[வரதராஜனே! யாதொரு இந்த சரணாகதிவாக்கு அடியேனி டத்தில் உண்டாயிற்றோ அதுவும் புத்திபூர்வமாக அல்ல, அந்தோ! என்று திருவுள்ளம் பற்றி அடியேன் மீது இரக்கம் உனக்கு உண் டாகுமாகில் பிறகு பிழைத்திடுவேன்.]

நிரவதிஷு க்ருதேஷு சாகஸ்ஸ்வஹோ
மதிரநுசயினீ யதி ஸ்யாத் தத :,
வரத ஹி தயஸே ந ஸம்சேமஹே
நிரநுசயதியோ ஹதா ஹை வயம். (85)

[வரதனே ! குற்றங்கள் எல்லையில்லாமல் செய்யப்பட்டவளவிலும் புத்தியானது பச்சாத்தாபத்தையுடையதாகுமேயாகின் அந்த அநுதாபமடியாக இரங்கி அருள்வாய்காண். இதில் ஸம்சயப்படுகிறோமில்லை. நாமோவென்றால் அநுதாப புத்தியற்றவர்களாகக் கெட்டுப்போனோம் அந்தோ.]

சரணவரணவாகியம் யாத்ய மே
வரத ததிகம் ந கிஞ்சிந்மம,
ஸுலபமபிமதார்த்ததம் ஸாதநம்
ததயமவஸரோ தயாயாஸ் தவ. (86)

[வரதனே ! இப்போது என்னுடைய யாதொரு இந்த சரணகதிவாக்கானது உண்டாயிற்றே அதற்கு மேற்பட்டதாய் ஸுகரமாய் அபேக்ஷித பலப்ரதமான யாதொரு ஸாதனமும் அடியேனுக்கு இல்லை. இப்படி அநந்யோபாயனாய் இருப்பதனால் இந்தஸமயமானது உன்னுடைய அருள் ப்ரஸரிப்பதற்கு வாய்ந்தகாலம்.]

விஷயவிஷயிணீ ஸ்ப்ருஹா பூயஸீ
தவ து சரணயோர் ந ஸால்பாபி மே,
வரத நநு பரஸ் தவைவ த்வயம்
யதுத தவ பதஸ்ப்ருஹாஜந்ம மே. (87)

[ஓ வரதனே ! அடியேனுக்கு சப்தாதி விஷயங்களைப்பற்றிய ஆசை மிகவும் அதிகமானது. உன்னுடைய திருவடிகளிலோ அந்த ஆசை சிறிதும் இல்லை. உன் திருவடிகளில் எனக்கு அன்பை உண்டாக்குவது என்பது யாதொன்று உண்டோ இது உனக்கே தலைச் சுமைக்கிடாய்.]

இயமிஹ மதிரஸ்மதுஜ்ஜீவநீ
வரத தவ கலு ப்ரஸாதாத்ருதே,
சரணமிதி வசோபி மே நோதியாத்
த்வமஸி மயி தத : ப்ரஸாதோந்முக : (88)

[ஸ்ரீ வரதனே ! விஷயாநுரக்தனான எனக்கு சரணம் என்கிற வாங்மாத்திரமும் உனது அநுக்ரஹத்தாலன்றி உண்டாகமாட்டாதிறே, ஆகையினாலேவே த்வதநுக்ரஹைக ஜந்மயமான சரணவாண

வாக்குண்டானதால் நீ அடியேன் அளவில் அநுக்ரஹத்தில் ஊக்கம் உடையவனாய் ஆகி நின்றாய் என்கிற இந்த புத்தியானது இப்போது அடியோமுக்கு உஜ்ஜீவநத்துக்கு உறுப்பு.]

வரத யதிக வஸ்து வாஞ்சாம்யஹம்
தவ சரணலபாவிரோர்தஸ் தத :,
யதி ந பவதி தத் ப்ரதேஹி ப்ரபோ
ஜடிதி விதர பாதமே வாந்யதா. (89)

[வரதராஜனே! அடியேன் இங்கே யாதொரு வஸ்துவை விரும்புகிறேனோ அந்தவஸ்து வாஞ்சையினால் உனது திருவடிகளைப்பெறுவதற்கு ப்ரதிபந்தமானது உண்டாகமாட்டாகில் அந்த வஸ்துவைத்தந்தருள்: நான் ஒருவஸ்துவை விரும்புவது உன்பத கமலப்ராப்திக்கு ப்ரதிபந்தகமாகுமாகில் திருவடியையே உடனே தந்தருள்.]

ததபி கிமபி ஹந்த துர்வாஸநா
சதவிவசதயா யதப்யர்த்தயே,
ததுலதய ஸார்வ ஸர்வப்ரத
ப்ரவிதர வரத க்ஷமாம்போநிதே. (90)

[ஒப்பற்ற அருளையுடையவனே! பொறுமைக்கடலே! ஸர்வ ஜனஹிதனே! எல்லாவற்றையும் கொடுப்பவனே! அதுதோன்ற வரதன் என்ற திருநாமம் பூண்டவனே! ஆனபோதிலும் அடியேன் பலபல துர்வாஸனைகளுக்கு வசப்பட்டிருப்பதனால் ஏதோ ஒன்றை ப்ரார்த்திக்கிறேன். அதை அளித்து அருள்.]

ப்ரியமிதரததாபி வ யத் யதா
விதரஸி வரதப்ரபோ த்வம் ஹி மே,
ததநுபவநமேவ யுக்தம் ஹி மே
தவயி நிஹிதபரோஸ்மி ஸோஹம்யத: (91)

[வரதராஜனே இப்படி அடியேன் ப்ரார்த்தித்த போதிலும் ஸ்வதந்த்ரனானநீ •இஷ்டமானதோ அனிஷ்டமானதோ, ஹிதமானதையோ யாதொன்றை எப்படி எனக்குக் கொடுத்தருள்கிறாயோ அப்படியே அதை அநுபவிப்பதேயன்றோ பரதந்த்ரனான எனக்குத் தகுந்தது. ஏனென்றால் அடியேன் உன் பக்கலில் பரஸமர்ப்பணம் பண்ணிக்கிடக்கிறேனிறே.]

யதாஸி யாவாநஸி யோஸி யத்குண :
கரீச யாத்ருக்விபவோ யதிங்கித :,
ததாவிதம் த்வா ஹமபக்ததுர்க்ர ஹம்
ப்ரபத்திவாசைவ நிரீக்ஷிதம் வ்ருணே. (92)

[அத்திகிரிநாதனே! எவனுயிருக்கின்ருயோ, எந்த குணங்கள் உடையவனே யாதொரு ப்ரகாரத்தையுடையவனே, எவ்வளவனு யிருக்கிருயோ, எப்படிப்பட்ட விபவத்தை யுடையவனுயிருக் கிருயோ, எந்த வியாபாரத்தையுடையவனுயிருக்கிருயோ அப்படிப் பட்டவனுய் பக்தர்களுக்கன்றி மற்றையோர்க்கு அரியனுன உன்னை சரணம் என்கிற வார்த்தையால் ஸாக்ஷாத்கரிக்க விரும்புகின்றேன்.]

அயே தயாளோ வரத க்ஷமாநிதே
விசேஷதோ விச்வஜநீந விச்வதே,
ஹிதஜ்ஞ ஸர்வஜ்ஞ ஸமக்ரசக்திக
ப்ரஸஹ்ய மாம் ப்ராபய தாஸ்யமேவ தே, (93)

[பேரருளாளனே! பொறுமைக்கு நிதியே! மிகவும் ஸகல ஜனங்களுக்கும் ஹிதனே! எல்லாவற்றையும் தந்தருள்பவனே! அடியோங்களுக்கு இதமானவற்றை அறியுமவனே! எல்லாவற் றையும் அறிபவனே! பரிபூர்ண சக்தியுடையவனே! வரந்தரும் பெருமாள் என்ற திருநாமம் உடையவனே! அடியேனுக்கு உன் னடிமைத்திறத்தையே எப்படியாவது ப்ராப்தமாக்கி அருள்.]

ஸ்வகைர் குணைஸ் ஸவைச் சரிதைஸ் ஸ்வவேதநாத்
பஜந்தி யே த்வாம் த்வயி பக்திதோத வா,
கரீச தேஷாமபி தாவகீ தயா
ததாத்வக்ருத் ஸைவ து மே பலம் மதம், (94)

[கரிகிரிநாதனே! எந்த சேதநர்கள் தம்குணங்களாலோ, தம் கர்ம யோகங்களாலோ, தம் ஞானயோகத்தாலோ. அல்லது உன் திறத்தில் பக்தியாலோ, உன்னை பஜிக்கிருர்களோ அவர்களுக்கும் உன்னுடையதான அந்த தயையே அந்த நித்ய கைங்கர்ய நிலைமை யை உண்டாக்கவற்று. அந்ததயையேயன்ரே அடியேனுக்கும் முக்ய ஸாதனமாக நிச்சிதம்,]

யதி த்வபக்தோப்யகுணேபி நிஷ்க்ரிய :
நிருத்யமோ நிஷ்க்ருததுஷ்க்ருதோ ந ச,
லபேய பாதௌ வாத ஸ்புடாஸ் தத :
க்ஷமாத யாத்யாஸ் தவ மங்களா குணா : (95)

[வரதனே! பக்திசூன்யனுயினும், குணமற்றவனுயினும், தத ங்கமான ஞானயோகமற்றவனுயினும், கர்மயோக சூன்யனுயினும் ஆநுகூல்ய ஸங்கல்பரஹிதனுயினும், ப்ராயச்சித்தத்தாலே ஒழிக்கப் படாத பாபங்களை யுடையனுயினும் அடியேன் தேவரீருடைய திருவடிகளை அடைவேனேயாகில் அதனால் பொறுமை, தயை முத லிய தேவரீருடைய திருக்கல்யாண குணங்கள் ப்ரகாசமாகும்.]

**விலோகனைர் விப்ரமணைரபி ப்ருவோ :**
**ஸ்மிதாம்ருதைரிங்கித மங்களைரபி,**
**ப்ரஸோதிதஸ் தே வரத ப்ரஹ்ருஷ்டதீ :**
**கதா விதாஸ்யே வரிவஸ்யநம் தவ. (96)**

[வரதனே! உனது கடாக்ஷ வீக்ஷணங்களாலும், திருப்புரு வங்களினுடைய விலாஸங்களாலும், பரமபோக்யமான புன்முறுவ லாலும், அழகான இங்கிதங்களாலும் அடியேன் ப்ரேரிதனுய். உவந்த உள்ளத்தவனுய், தேவரீருக்கு பரிசர்யையை எப்போது செய்யப்போகிறேன்.]

**விவிச்ய விச்வேந்த்ரியதர்ஷகர்ஷணீ :**
**மநஸ்ஸ்தலே நித்யநிகாத நிச்சலா :.**
**ஸுதாஸகீர் ஹஸ்திபதே ஸுசீதலா :**
**கிரச் ச்ரவஸ்யா : ச்ருணுயாம தாவகீ : (97)**

[திருவத்திகிரிநாதனே! உட்புகுந்து ஸர்வேந்திரியங்களுடைய வும் விடாயைத்தீர்ப்பவையாய், மனத்தில் எப்போதும் நாட்டப் பெற்று ஸ்திரமானவையாய், அமிருதம் போன்றனவாய், மிகக் குளிர்ந்தவையாய், செவிக்கினியவையான உன்னுடையவைகளான திருவாய் மொழிகளைச் செவியேற்கக்கடவோம்.]

**அசேஷதே சாகிலகாலயோகி நீஷு**
**அஹம் த்வவஸ்தாஸ்வகி லாஸவந்ந்யதீ :.**
**அசேஷதாஸ்யைகரதிஸ் ததாசரந்**
**கரீச வர்த்தேய ஸதா த்வதந்திகே, (98)**

[கரிகிரிநாதனே! ஸர்வதேச ஸர்வகாலங்களோடும் சேர்ந்த ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வவித கைங்கர்யங்களிலும் ஆராதகாத லையுடைய அடியேன் அந்த அசேஷதாஸ்யத்தை வேறென்றில் புத்திசெலுத்தாதவனுகி அநுஷ்டிக்கிறவனுய் எப்போதும் உனது ஸமீபத்தில் இருக்கக்கடவேன்.]

**இமம் ஜநம் ஹந்த கதாபிஷேக்ஷ்யதி**
**த்வதக்ஷிநத்யோர் வரத ச்ரமாபஹா,**

**அக்ருத்ரிமப்ரேமரஸப்ரவாஹஜா**
**விஸ்ருத்வரீ வீக்ஷணவீசிஸந்ததி : (99)**

[பேரருளாளா! உனது திருக்கண்களாகிற நதிகளினுடைய ஸ்வாபாவிகமான ப்ரீதியாகிற ரஸப்ரவாஹத்தில்நின்றும் உண்டாகக் கடவதாய் விடாய் தீர்க்க வல்ல எங்கும் பரவக்கூடிய கடாக்ஷமாகிற அலைகளின் வரிசையானது இந்த அடியேனைஎப்போது மஞ்சனமாட்டப்போகின்றது?]

**ஸதாதநத்வேபி ததாதநத்வவத்**
**நவீபவத்ப்ரேமரஸப்ரவாஹயா,**
**நிஷேவிதம் த்வாம் ஸததோத்கயா ச்ரியா**
**கரீச பச்யேம ப்ரச்சதம் ஸமா : (100)**

[கரிகிரிநாதனே! நித்ய பரிசிதமாயிருக்கச் செய்தேயும் அபூர்வமானுற்போல புதிது புதிதாக விளையாநிற்கிற ப்ரணயரஸபரம்பரையையுடையவளாய் நித்யமாசை கொண்டிருக்கிற பிராட்டியாலே நித்யாநுபூதனுயிரா நின்ற உன்னைப்பல்லாண்டு பல்லாண்டாக ஸேவிக்கக்கடவோம்.]

**ஸமாஹிதைஸ் ஸர்து ஸநந்தநாதிபி :**
**ஸுதுர்லபம் பக்தஜனைரதுர்லபம்,**
**அசிந்த்ய மத்யத்புதமப்ரதர்க்கணம்**
**வரப்ரத த்வத்பதமாப்நுயாம் கதம். (101)**

[பேரருளாளனே! நன்றாக சமாதி நிஷ்டர்களான ஸநந்தன ஸநகஸநத்ஸுஜாதாதி முனிவர்களாலும் அடையமுடியாததாய் பத்துடையடியவர்களாலே எளிதில் அடைய முடிந்ததாய் சிந்தைக்கும் விஷயமாகாததாய் ஊஹத்துக்கும் அவிஷயமாய் மிகவும் ஆச்சர்யமான உனது இருப்பிடமாகிய திருநாட்டை எப்படி ஸ்வப்ரயத்நத்தினால் அடைவேன்?]

ராமாநுஜாங்க்ரி சரணோஸ்மி குலப்ரதீப :
**த்வாஸீத் ஸ யாமுநமுநேஸ் ஸ ச நாதவம்ச்ய :**
**வம்சய : பராங்குசமுநேஸ் ஸ் ச ஸோபி தேவ்யா :**
**தாஸஸ் தவேதி வரதாஸ்மி தவேக்ஷணீய : (102)**

[பேரருளாளனே! அடியேன் ஸ்ரீ பாஷ்யகாரருடைய திருவடிகளைச் சரணமாக அடைந்தவன். அந்த எம்பெருமானுரோ ஸ்ரீ ஆளவந்தாருடைய வித்யாவம்சத்திற்கு அணிவிளக்காய் ஆனார். அந்த ஆளவந்தார்தாமும் வித்யாந்வயத்தாலும் குடல் துடக்காலும் ஸ்ரீமந்நாதமுனிகளுடைய வம்சத்தவர், அந்த நாத முனிகளும் நம்மாழ்வாருடைய வம்சத்தவர், அந்த ஆழ்வாரும் பிராட்டிக்கு அடியவர் என்கிற இந்த பாரம்பர்யத்தாலே தேவரீருக்கு அடியேன் கடாக்ஷிக்கத்தகுந்தவனுகின்றேன்.]

ஸ்ரீ :

திவ்வியகவி

பிள்ளைப்பெருமாளையங்கார் அருளிச்செய்த

## நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி.

*பொருளாசை மண்ணாசை பூங்குழலார் போகத்*
*திருளாசை சிந்தித் திராதே—யருளாளன்*
*கச்சித் திருப்பதியா மத்தியூர்க் கண்ணன்ரு*
*ளிச்சித் திருப்பதியா மென்று.* (74)

[செல்வத்தினிடத்து ஆசையையும், பூமியினிடத்தில் ஆசையையும், மலரையணிந்த கூந்தலையுடைய மகளிரது இன்பத்திலே வைக்கின்ற மனம் மேன்மேலும் இருளுவதற்குக் காரணமான பெண்ணாசையையும் மனத்திற் கொண்டிடாமல் பேரருளாளனாகிய காஞ்சீபுரத்திலுள்ள திவ்விய தலமாகிய திருவத்தியூரில் எழுந்தருளியிருக்குந் திருமாலினது திருவடிகளை யாம் உபாயமும் உபேயமுமாக விரும்பிச் சிந்தையற்றிருப்பது எந்நாளோ ?]

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம :

பரம பாகவதோத்தமராகிய

ஸ்ரீமான்

குரவை *இராமாநுஜதாசர்* இயற்றிய

## நூற்றெட்டுத் திருப்பதித் திருப்புகழ்.

### திருக்கச்சி அத்தியூர்.

*தத்தத்தன தத்த தானன*
*தத்தத்தன தத்த தானன*
*தத்தத்தன தத்த தானன—தன தானா*

நட்டத்தவ முற்று மாதர்கள்
பற்றித்தரு முத்தி யேபெற
நட்புற்றவர் சொர்க்க மாமலை மிசையேறி
நச்சிக்கைவ ழுக்கி யே நர
கக்கெட்டகு ழிக்கு ளாவிரு
டுக்கத்தின்வி ழுக்கை யாவரும் விடவேதான்

இட்டத்தது விட்டெ ழாவகை
யைப் பட்டுழல் பட்ட வீயென
யெய்த்துப்பிர மித்து நாடொறு மறிவேபோ

யெட்டட்சர நிட்டை ஞானம
தற்றுக்கதி கெட்ட பாவியென்
ரட்சைப்பட ரட்சை நீயருள் புரிவாயே

துட்டக்கள விட்ட ராவணன்
முட்டிச்சம ரிட்ட போரிடை
துக்கப்பட பத்து நீண்முடி யடியோடு

சுற்றித்துகள் பட்டு வீழவி
சித்ரத்தொடு மத்ர மார்ரிக
டொட்டுப்பின ரக்கர் யாரையும் முதலோடு

கட்டப்படு பத்ர காளிதன்
வட்டத்தினி நிர்த்த மாடுக
ளத்திற்பலி யிட்ட ராகவ நெடுமாலே

கற்றைக்கதிர் விட்டு வீசிய
செச்சைத்தெரு ரத்ன மேதிகழ்
கச்சித்திரு வத்தி யூர்வரு பெருமாளே. (74)

ஸ்ரீ

ஸ்ரீ வானமாமலை மடம் ஆஸ்தான வித்வான் தென்திருப்பேரை

*ஸ்ரீமத் ஸ்ரீ அனந்தகிருஷ்ணையங்கார் அவர்கள்*

*இயற்றிய*

## திவ்ய தேசப் பாமாலை.

திருக்கச்சி, அத்திகிரி.

சந்த விருத்தம்.

*மச்ச விழிச்சியர் கொச்சை யிடைச்சியர் வைச்ச கடத்தயிரை*
*அச்ச மிலச்சை யறத்திரு டித்தினு மச்சுத னுக்கிடமாம்*
*இச்சக மெச்சு நிலச்சுரர் நித்த மியற்று மகப்புகைகள்*
*அச்சிர தத்தெரு முற்று மணத்திடு மத்தி கிரிப்பதியே* (81)

ஸ்ரீ :

ஸ்ரீமதேராமாநுஜாயநம ;

பொற்களந்தைப்பதி

**முத்தமிழ்க் கவி வீரராகவ முதலியாரவர்கள்**

இயற்றிய

**திருக்கச்சிநகர்**

# பெருந்தேவித்தாயார் பதிகம்.

சிறப்புப்பாயிரம்.

விரகறி முத்தமிழ் வீர ராகவன்
வரகவி மாலையை வழுத்துந் தோறெலாம
உரகனும் வாணனு மொக்கக் கூடினால்
சிரகர கம்பிதஞ் செய்ய லாகுமே.

## நூல்.

உலகமொரு பதினலு முட்கொண்ட வண்டங்க
ளுன்கரக் கந்து கசூலம்
ஓதண்ட கந்துகத் திரள்வெளி படுத்தியு
மொளித்தும்விளை யாடல் புரியும்

வலமையைப் பெற்றவொரு சித்துனுன் பதியான
மாயனவ னனவ ரதமுன்
மழைமதர்க் கண்ணேவு தொழில்செய்ய மணியோடு
வனமாலை யணி மார்பினுஞ்

சலசநிகர் விழியினு மனத்தினுங் குடிகொண்டு
சகலவுயி ருந்த ழைக்கத்
தயவுபுரி பெண்சக்ர வர்த்திநீ யுன்பெருமை
சாற்றுதற் கெளி தாகுமோ

அலர்தலைக் கலியாண கோடிநில யத்தில்வா
ழதிகுண பாக்ய வதியே
அடியவர்க் காவியே யதுலசஞ் சீவியே
யழகிய பெருந் தேவியே. (1)

எத்தனை தரந்துதிக் கினுமஞ்ச லிக்கினும்
எண்ணி னுந் தயவு சற்றும்
இல்லா திருக்கின்ற வன்னெஞ் சுடைத்தேவ
ரிருபொழுது மபய வரதக்

கைத்தலம் விரிப்பரக் கரயுகள மபிநயக்
கரமவர் தமைக் கனவினுங்
கருதே னுனைப்பணியு மடியரடி யாரடியர்
காலிணை வணங்கு மடியார்

பத்தரை மனத்தினி னினைப்பவர் தமக்குநின்
பரிவினிக லோக வாழ்வும்
பரலோக வாழ்வையுந் தருதெய்வ நீயுன்
பதத்தையே தொழுவெ னம்மே

அத்திகிரி கரிவரதர் சித்ரமணி மார்பத்தி
லமரும்வனி தாரத் னமே
அடியவர்க் காவியே யதுலசஞ் சீவியே
யழகிய பெருந் தேவியே. (2)

இருள்வரு மனத்தரா னுலுமுன் சந்நதியி
னெதிர்வந்து பணிவரானுல்
இங்கிலத் தவருக்கு ரத்னபூ டணம்வரு
மிலகுபீ தாம்ப ரம்வரும்

பொருள்வரும் தானியத் திரள்வருஞ் சுழிபெற்ற
புரவியுங் கவிகை யும்வரும்
பொற்சிவிகை வருமத்த கரிவரும் புவியைப்
புரக்கின்ற வாண்மை வருமெய்த்

தெருள்வருந் திகழ்பெரும் புகழ்வரும் மட்டமா
சித்தியும் வரும் பரத்தில்
தேவேந்த்ர போகம்வரு நான்முகன் பதவியிற்
றிருவாழ்வும் வரு முண்மைகாண்

அருள்வரு கடைக்கணின் பெண்ணமுத மேகச்சி
யருளாளர் மார்பி லணியே
அடியவர்க் காவியே யதுலசஞ் சீவியே
யழகிய பெருந் தேவியே. (3)

வான்மேவு மமரர்திரள் சொரியுநாண் மலர்பட
வருந்திச் செவந்த பதமும்
வண்பட்டி னைச்சாத்து கொடியென நுடங்கிய
மருங்குலுந் தேவா மிர்தம்

தான்மேவு கலசநிகர் முலையுமே காசமுந்
தங்கவளை யிடு செங்கையும்
சங்கக் கழுத்துமங் கலநாணும் வேயெனத்
தகுதிருத் தோளு மிருசேல்

மீன்மேவு மொருதா மரைக்குநிகர் நகைமுகமும்
வெண்முல்லை மாலை சொருகும்
மென்குழற் சுருளுமென் கண்காண வந்தெனது
வினைதொலைத் தெனை யாளுவாய்

ஆன்மேவு பெருமானு மலரோனும் வந்திக்கு
மற்புதக் கச்சி வாழ்வே
அடியவர்க் காவியே யதுலசஞ் சீவியே
யழகிய பெருந் தேவியே. (4)

மலைபெற்ற மாதுனைப் போல்வளென மொழிவர்புன்
மதிபெற்ற மனித ரவடான்
மற்றுனைப் போல்வீறு பெற்றமண வாளனை
வளம்பெறு பிறந்த கத்தில்

நிலைபெற்று வாழவைத் தனளோ தினந்தினமு
நிறைபெற்ற வவள ரைப்பெண்
நீமுழுப் பெண்ணிரந் துண்டசிவன் மனைவியவ
ணிகிலவுல கும்பு ரக்குந்

தலைபெற்ற சோதிமணி மகுடபுரு டோத்தமன்
றன்மனைவி நீ யாதலால்
சந்திரவிம் பானனீ யந்தவுமை யுன்னையெத்
தன்மையொப் பாள்சொல் லுவாய்

அலைபெற்ற வேகவதி நதிபெற்ற கச்சியி
லகம்பெற்ற செல்வ மயிலே
அடியவர்க் காவியே யதுலசஞ் சீவியே
யழகிய பெருந் தேவியே, (5)

மின்னையொத் தெழுபுனற் குமிழியொத் தவனிதனில்
விரைவிலழி தனுவும் வாழ்வும்
வெற்பொத்து நிலையாக நிற்குமென வெண்ணியும்
வெறும்பாவ மட மாதைப்

பொன்னையொப் பாரெழுது சித்ரமொப் பார்நறும்
பூவையொப் பாரெ னமனம்
புண்பட நினைத்துமவ மேசெய்து நாள்களைப்
போக்கினேன் பிழைபொ றுத்தற்

குன்னையொப் பாரில்லை பிழைசெய் தவற்கென்னை
யொப்பாரு மில்லை யெனையும்
உகந்தெந்த வகையாள் வையோசற்று மறிகிலே
னுன்சித்த மென் பாக்கியம்
அன்னையொத் துலகாளு மத்திகிரி வரதர்க்
கருக்காணி யான பொன்னே
அடியவர்க் காவியே யதுலசஞ் சீவியே
யழகிய பெருந் தேவியே. (6)

இரதியும் பாரதியு முபயசா மரைவீச
வெறிதிரைக் கங்கை மாதும்
இமகிரி யணங்குமங் களகௌள மேபாட
விந்த்ராணி செந்தாம ரைக்
கரதலத் தாலடைக் காயுதவ வள்ளியுங்
கன்தவள யானை மகளுங்
கர்ப்பூர வாரத்தி யேந்தமே னகைரம்பை
கயல்விழி யுருப்ப சியுமே
பரதநட மாடவிதி சிவன்வச்ர பாணிமுப்
பத்துமுக் கோடி சுரரும்
பலமுனிக் கணமும் புகழ்ந்துகொண் டாடநின்
பதிவரத னெடு கச்சியில்
அரதனக் கோயிலுறை யுன்கொலுவை வர்ணிக்க
வரவரச னாலு மாமோ
அடியவர்க் காவியே யதுலசஞ் சீவியே
யழகிய பெருந் தேவியே. (7)

ஒளிகொண்ட நவமணிச் செம்பொனோ லைச்சுருளை
யுட்கொண்ட காதைத் தொடும்
ஒண்கடைக் கண்ணிடங் கொண்டவருள் வெள்ளத்தி
லொருதுளியை யென்மீ திலே
களிகொண்டு சிதரவிடி லுன்பத்த னென்றெனைக்
கைக்கொண்டு சூல பாசக்
காலனுந் தொடரான் மணங்கொண்ட நாண்மலர்க்
கணைமதன் றானு மணுகான்
நளிகொண்ட பூவிலுறை மகனுமென் சென்னிதனி
னல்லெழுத் தேயெ ழுதுவான்
பவக்கோளு மேகா தசத்தான பலனுதவு
நகைகொண்ட முகனெடெழுதண்

அளிகொண் டழைத்துநின் பதியத்தி கிரிவரத
னடிநிழலில் வைப்ப னம்மே
அடியவர்க் காவியே யதுலசஞ் சீவியே
யழகிய பெருந் தேவியே. (8)

பூகத்தி லுறைகவி நிமர்த்தவா லரவெனப்
பூவாத வலரி வெருவும்
பொழுதிலப் பரிதிவிடு கிரணம்வார் கோலெனப்
புன்கவிக் குலமும் வெருவும்

மாகச்சி வளநகரில் வாரணக் கிரிகோயில்
வாழ்தேவ ராச னெடுநீ
வளர்தமா லத்தரு வினைச்சேரு மொருகனக
வல்லியென வயிறு நிறைசூல்

மேகத்தெ டொழுசோதி மின்னென வெழுந்தருள்
விதங்கண்டு பேரின் பமாம்
வெள்ளத் தழுந்துபரி சுத்தமன மண்ணவரின்
விண்ணவர் மிகப்பெரி யரோ

ஆகத்தி னெழுசக்ர வாகத் தனத்தினு
லசைசிற் றிடைக் கமலையே
அடியவர்க் காவியே யதுலசஞ் சீவியே
யழகிய பெருந் தேவியே. (9)

ஓதிநிற மேகண்டு நாணிமுகின் மலையேறு
முன்னிணைக் கண்ணே சலால்
ஒண்கயலி னம்புனல் கிடக்குமுன் முகத்தினுக்
கொவ்வா திருத்தலாலே

சோதிமதி யுடல்வற்று முன்மிடற் றுனலந்
தொலைசங்க மின்ன் மலறும்
துணைமுலையி னெழில் பெற நிமிர்ந்தவட கனககிரி
சுரரைச் சுமந்து நிற்கும்

சாதிநவ ரத்னவளை யிடுகரத் தாலுமுன்
சரணத்தி னாலும் வெட்கித்
தாமரைகள் பங்கத்தை யடையுமுன் னவயவந்
தம்மைவர் ணிக்க வசமோ

ஆதிநடு வந்தமு மிலாதபொரு ளேகச்சி
யமர்துரைப் பெண்ணே தொழும்
அடியவர்க் காவியே யதுலசஞ் சீவியே
யழகிய பெருந் தேவியே. (10)

கூடுறை பசுங்கிளிக் குசிதமொழி சொல்லிக்
கொடுத்தந்த மொழி யச்சுகம்
கூறுகா லேயில்வின்வி மகிழுமவர் போலவே
கோகனக னுதி யிமையோர்

நாடுதற் கரியநீ யென்மனத் தாமரையி
னுடொரு மிருந்து தமிழ்நூல்
நலத்தையறி வித்தற்ப னுகிய வெனேக்கொண்டு
நானு விதக்க விகளேப்

பாடுவித் திருசெவிக் கொண்டுளங் களிகொள்வை
பலகாலு முன்வி நோதம்
பகரவச மோகடவு ளன்னமே யென்னமே
பரிதியைக் கோ புரதலத்

தாடுகொடி தொடுகச்சி யருளாளர் கண்மணியி
னகலா துலாவு பாவாய்
அடியவர்க் காவியே யதுலசஞ் சீவியே
யழகிய பெருந் தேவியே. (11)

---

ஸ்ரீ;

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

பொற்களந்தைப்பதி

முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியாரவர்கள்

இயற்றிய

திருக்கச்சிநகர்

## வரதராசப்பெருமாள்
## பஞ்சரத்தினங்கள்.

---

சிறப்புப்பாயிரம்,

விரகறி முத்தமிழ் வீர ராகவன்
வரகவி மாலேயை வழுத்துந் தோறெலாம்
உரகனும் வாணனு மொக்கக் கூடினல்
சிரகர கம்பிதஞ் செய்ய லாகுமே,

## நூல்.

### 1-ஆவது.

வரதவென் றெருதரஞ் சொன்னபேர் புவியையாள்
வாருனது கோயிலை வலம்
வந்தபே ரிந்திரனூ ரடைவருன் பொன்மயவி
மானத் தினைத் தொழுதபேர்.

பிரமனுல கினில்வாழ்வர் கரிகிரியி லேறியெம்
பெருமானின் னடிப ணிந்தோர்
பெருவிரசை யக்கரையி லேறியழி வறுமுத்தி
பெருகுவ ரிவைக் கையமோ

பரமபுரு டாபரம பத்தப்பிரி யாபரம
பாவனு பரம கருணு
பாங்காவி கங்கமர தாங்காம காசார்ங்க
பாணீ மிருகாங் கானனு

சரணமணி நூபுரா ருசிரதர கோபுரவி
சாலகாஞ் சீபு ரேசா
சயதேவ ராசனே லோசனும் போசனே
சதகோ டிரவி தேசனே. (1)

அந்தமணி மௌலிபுனை வசுகுல விமானங்க
ளச்சுவினி தேவதைக ளூர்
அற்புத விமானமள கைத்துரைவி மானம்வந்
தனுதினஞ் சூழ வவைமேல்

குந்தனப் பொற்சுடரை வீசல்புரி யுன் புண்ணியனு
கோடீவி மான மொருகால்
கும்பிடப் பெற்றபேர் முன்செய்வினை கோடானு
கோடியோ டப்பெறு வர்காண்

நந்தன வனத்தினுங் கயல்பொரு வனத்தினு
நாறுபல மலரி லூறும்
நனையுண்டு களிகொண்டு திரிவண்டு புடைசென்று
நங்கையர் பதங்கை வதனஞ்

சந்தன குசங்களர விந்தமின் றலமருந்
தண்டமிழ்க் கச்சியோனே
சயதேவ ராசனே லோசனும் போசனே
சதகோ டிரவி தேசனே. (2

சதுமறையு மறியொண்ணு வொருவன் வந்தான்முத்தி
தரவல்ல தலைவன் வந்தான்
சகலாண்ட நாதன்வந் தானடியர் செய்தபிழை
சற்றுமித யத்தி லெண்ணு

முதல்வன்வந் தானித்ய விபவன் வந்தா னென்றுன்
முன்னூது விருது சின்னம்
முச்சகமு மெச்சுமிதை மற்றுமுள தெய்வங்கண்
முன்னூதில் வெட்குவார்காண்

மதுரகவி பணிமாறன் வண்பொய்கை பேய்பூதன்
மழிசைமன் குலசே கரன்
மங்கைநா தன்கோதை புதுவைவரு முனிபாணன்
மண்டங்கு டிக்க திபனும்

ததியர்துதி செயவோது கவிமாலை புனையெங்கள்
சாமியே கச்சி யோனே
சயதேவ ராசனே லோசனும் போசனே
சதகோ டிரவி தேசனே. (3)

பாடுமவ ராடுமவ ரருமையுன் போலவறி
பவரா ரரங்க மென்னும்
பதியரையர் வந்துநின் றிருவடி வணங்கியிசை
பாடியா டித் துதித்து

வீடருள்க வென்னும லெதிபதியை யருள்கெனவும்
வினவிநன் றென்ற ருளினுய்
வீறுமனு சனையுதவு நீகௌத் துவமணியை
வீசெனினு மீவை கண்டாய்

நீடிய செழுந்தாழை நெற்றுமா வினின்மாவி
னிறைகனி பலா விற்பலா
நேர்பழங் கமுகினிற் கமுகின்முதிர் காய்கதலி
நிறையினிற் கதலி பலமும்

தாடிமப் பலமுமுரு கினில் வீழ மந்திபாய்
தண்பொழிற் கச்சி யோனே
சயதேவ ராசனே லோசனும் போசனே
சதகோடி ரவி தேசனே. (4)

எத்திசையு மிகமெச்சு குருகா புரிப்புளி
யிடத்திலகு மகிழ்மா றனும்
எங்கள் கற்ப பகநல்கு பலகனி யெனத்தக்க
வீரைந்து நூறு கவியும்

சித்தமகிழ் வைத்தருதல் போலுனக் கலகைநிகர்
சிறியனே னேது புன் சொற்
செய்யுளு மகிழ்ச்சிதரு மெவ்வித மெனிற்றினஞ்
செவியுணர்வு பெற்ற பெறியோர்க்

குத்தமக லைத்திர ளுணர்ந்த நல் லுணர்வுளோ
ரோதுமொழி யுவகை யுதவும்
உன்மத்தர் சொல்லுநகை யுண்டாக வேயுவகை
யுதவல்செயு மந்த விதமே

சத்தமழை தவழ்காவில் வளர்கிளியு மாழ்வார்
தமிழ்ப்பகர் திருக்கச்சியாய்
சயதேவ ராசனே லோர்சனும் போசனே
சதகோ டிரவி தேசனே. (5)

## 2-ஆவது வேற்றுமகுடம்.

காலனுர் தமர்வந்து கைப்பாசம் வீசவுங்
கண்கள்பஞ் சடைய விருகால்
கைகளுஞ் செயலின்மை பெறமொழிகள் குழரிடக்
கண்டத் துளைய டைப்ப

பாலரொடு மனைவிதம ரழவுயிர்ப் பொழுகலொழி
பருவத்தி னுள்ள லமரும்
பாவியேன் முன்னில மலைபோல நின்றருட்
பார்வைவைத் தெனை யாளுவாய்

சாலவிரு கூலத்து முத்தெரிந் தனுதினந்
தத்திவரு மலை மலிநறுந்
தண்புனற் பொன்னிசூழ் திருவரங் கத்தினுந்
தடநெடுங் கடலி டத்தும்

ஆலிலையி னுந்துயிலு மாயனே கொடியாடு
மணிமதிட் கட்சி மூதூர்
அருளாள னேபெருந் தேவிமண வாளனே
யாடர வினடி தாளனே. (1)

சூத்திரி யசைத்தபடி பாவைநின் றுடுநீ
சூழ்ந்த படியுயி ரனைத்துந்
தொழில் புரிய நன்மைபுரி சனர்தீமை செய்தபேர்
சொர்க்கநர கடைவ ரென்றே

சாத்திரம் விதித்தனை யுனக்குத்தரஞ் சொலுஞ்
சதுர ராருன் னுடைமையாஞ்
சனனவேலை யில்வீழி லார்சொந்த நின்சார்பு
சாரும் படிக்கு வைப்பாய்

மாத்திரு வயோத்தியெனு முனதுமூ தூரிலே
மருவிய சராசர மெலாம்
வானவரு மிச்சித்து மெச்சுபத வியில் வாழ
வைத்தவ ருள் விழி மேகமே

ஆத்திரள் களிக்கவுல காத்திர டளிர்க்கவே
யன்றூது கச்சி மாலே
அருளாள னேபெருந் தேவிமண வாளனே
யாட்டர வினடி தாளனே. (2)

உலகறிய வருமலரி பூவலரி சோமனு
முடுத்திவிடு சேர்ம னச்சேய்
ஓரிளஞ் சேய்புலவ னிரவுழன் றலைபுலவ
னெண் பொன்மிக வொளியற்ற பொன்

இலகுசுடர் வெள்ளிவெண் கலமும் விலையுறுமந்த
னென்பவன் புத்தி மந்தன்
இருநாக முந்துத்தி நாகமென வுன்னடிய
ரெண்ணுவர் பயப் படுவரோ

திலகமெழு திய சிறிய பிறைநுதலி னெருவனிதை
சித்தங் களிக்க விண்ணில்
சென்றுபல தேவர்செவி செவிடுபட வெண்சங்கு
செவ்வா யின்வைத் தூதிமுன்

அலர்மலித ருங்கற்ப தருவைக் கொணர்ந்திந்த
வவனிநடு கச்சி மாலே
அருளாள னேபெருந் தேவிமண வாளனே
யாடர வினடி தாளனே. (3)

நீயுலக முதல்வனெனு முறைமைகரி ராசனு
னிகிலவத் துவினு நிற்கும்
நிலைமைபிர கலாதனுன் முத்திதர வல்லனெனு
நீர்மைகண் டாகர்ண னுல்

மாயைபுரி யினுமடிய வர்க்கெளிய னென்னும்வித
மழிசைமுனி வர னுலுரீ
மண்ணுலகு தன்னில்வெளி பண்ணினை யுனைத்தொழா
மன்பதைகள் பேய்க ளலவோ

சேயரி படைத்துக் குடங்கையி னகன்றினைச்
சேனென மிளிர்ந்து குழைமேற்
சென்றடிக் கடிமீள வந்துசெங் குமிழின்மறி
சினவேலை வென்ற மைக்கண்

ஆயிழை சுமந்தமுலை மாதர்நட மிடுகோயி
லாயிரந் திகழ் கச்சிவாழ்
அருளாள னேபெருந் தேவிமண வாளனே
யாடர வினடி தாளனே. (4)

ஒருகாசு மற்றவன் பலதான மும்புரிய
வுன்னும் விதமென்ன முன்னம்
ஒருநன்மை புரிகிலே னுனதூரி லேயிருந்
துன்னடிய ரொடு பழகவும்

வருகாரி மாறனுரை தமிழ்மறை படிக்கவும்
மாசற்ற பொரு ளறியவும்
வருதின முனைத்தொழவு மெண்ணினே னடியேன்
மனத் தெண் ணநிறை வேற்றுவாய்

இருகாதி லிடுமணிக் குழைசிரத் திருமகுட
மிருகரத் திகிரி சங்கம்
ஈரிரு புயக்கனக கேயூர மார்பின்மணி
யிடைசாத்து பொன் னுடையும்

அருகாத சுடர்பரப் பவுமிருண் டிலகுருவி
னத்தனே கச்சி யோனே
அருளாள னேபெருந் தேவி மணவாளனே
யாடர வினடி தாளனே. (5)

## 3-ஆவது. இதுவுமது. வேற்றுமகுடம்.

முன்னமொரு சிலையழகின் மாதுமீர் வாளனைய
முதுகோந் திகுல வேந்தனும்
முனைவாளி சுட்டளவில் கரியான கர்ப்பமணி
முடிராச புத்திர னுமலா

தன்னநடை யுடையபெண் ணுணுமா கத்திரு
வருட்செய்த சாமி மிகவும்
அஞ்ஞானி யானவெனை யரைநொடியில் விஞ்ஞானி
யாக்குத லுனக் கருமையோ

உன்னத புசாதண்ட கோதண்ட வுத்தண்ட கோதண்ட
வுக்கிரச மரப் பிரசண்டா
உற்புல்ல தாமரச தளயுகள சமநேத்திர
வுசிதசுகு மார காத்திரா

கன்னிகா மணிபெருந் தேவிநய னனந்த
கரகாஞ்சி புரநி வாசா
கனகமய வரசிகர நிகரகரி கிரிநிலய
கரமுக ரதர வரதனே (1)

அண்டர்குல மெத்தனை யவைக்கேக நாதனீ
யகிலவத் துவுநின் பொருள்
அப்பொருளி லிவைதருதி யென்றிரங் திலெனின்னை
யடியே னிரத்த லிதுகேள்
மண்டுதிரை யெறிகங்கை வந்தநின் பதகஞ்ச
மறவாது சிந்தித் திடும்
மதியுதவ வேணுமது தருவையேல் வைகுந்த
வாழ்வெலா மெனது கண்டாய்
புண்டரீ கவசிட்ட நாரத சுகாதிமுனி
புங்கவத் தோத்திர பாத்திரா
புசகேந்திர பணசங்க ரங்கநட னதுங்க
பூதரவ ரர்த பத்திரா
கண்டவிட மலினபசு பதிசாப கண்டன
காகுத் தகுல மண்டன
கனகமய வரசிகர நிகரகரி கிரிநிலய
கரமுகர தர வரதனே (2)

அந்தமது ராபுரியின் மிருகமத படீரத்தை
யருளின ளங்க வக்கிரம்
அத்தனையு மக்கண நிமிர்த்தனை யெனப்புகல்வ
ரவ்வித முனக் கருமையோ
இந்தநில முதிர்கருங் காலியடி வனைதுண்ட
மெனவலிது கோண லாகும்
என் மனது செம்மையாய் நிற்கும்வகை புரிவையே
ளெளியெனற் பதமடை குவேன்
நந்தகோ பகுமார யதுகுலோத் தமவீர
நவநீத சோர தீரா
நாளீக நாபமது சூதன புராதன
நரகர்சுரச் சேதன
கந்தமத சலபத்திர கசராச சீவோப
காரகாஞ் சீவி காரா
கனகமய வரசிகர நிகரகரி கிரிநிலய
கரமுகர தர வரதனே (3)

சங்கர னிருத்தலிற் சுத்தமா னதுரசத
சைலமதில் பரி சுத்தனும்
சம்புவு மகாசுத்த நதியென்று கங்கைசடை
தாங்கினு னக்கங்கைநின்
பங்கய பதப்பரிச மொருகால மடைதலிற்
பரிசுத்தி பெற்ற தென்பார்
பலகாலு முன்றுளை மனம்வைத்த பாகவதர்
பரிசுத்த மோத வசமோ
அங்கச கிரீடச மபீனகுச பாஞ்சாலி
யபிமான தன ரக்ஷகா
ஆலோல கல்லோல சாலகன கோலாக
லாம்போதி யோக சயனு
கங்கண விராசித கரத்துவந் தமேதினீ
காந்தர் மனோ நாயகா
கனகமய வரசிகர நிகரகரிகிரி நிலய
கரமுக ரதர வரதனே (4)
அச்சகடு தைத்தலகை யாருயிரு முலையமுண்
டன்று கன்றுல் விளவெறிந்
தப்புள்ளின் வாய்கிழித் தானையை வதைத்திகலி
யடுமல் லர்தமை யழித்துத்
துச்சரித கஞ்சனைக் கொன்றனே யெனப்புகல்வர்
துர்வார மத்த சித்த
துட்டனே னுலகினிற் புரியகா டவியுந்
துணிக்கின் மிக விசை யுண்டுகாண்
மச்சகன கச்சபவ ராகநர சிம்மவா
மனரூப பரசு ராமா
மனுவம்ச ராமபல ராமமோ கனகிருஷ்ண
மகனீய துரக வேஷா
கச்சள விசாலநய னத்துவய பெருந்தேவி
காமினீ சீவ நாதா
கனகமய வரசிகர நிகரகரி கிரிநிலய
கரமுகர தர வரதனே. (5)

## 4-ஆவது. இதுவுமது. வேற்றுமகுடம்.

மச்சங் குதித்துமணி மழைதடவி வருவேக
வதியா றுநெடு வீதியும்
வான்மதியை முத்தமிடு கோபுரமு மிலகுபொன்
மதிலும் படைத் துடையநின்

கச்சிநகர் மேவிவாழ் பாகவதர் விரசைசூழ்
கன்னிவை குந்த புரியைக்
காணநீனே யாரந்த வைகுந்த நித்தியரிக்
கச்சிதொழ விச்சிப் பர்காண்
நிச்சங்க நிர்ப்பய நிராமய நிரஞ்சன
நிராகார நிர்வி யாகுலா
நிர்த்தொந்த நிரதசய நித்தியவை பவநிகில
நிகமசந் நுதநி ருப்மா
அச்சுதா நந்தித வகண்டித வபங்குர
வசஞ்சல வனந்த நாமா
அர்க்கசி நயனயுக சக்கிரகர தலவரத
வத்திகிரி சிகர மணியே. (1)

பண்டுகண் டாகனன் காகா சுரற்குமருள்
பண்ணினே பணிந்த மையினல்
பார்க்கிலோ சிலதியர் தாழ்வினற் சார்வைப்
படைத்தமை குரித்த வைக்கும்
மண்டலத் துதவிசெய் தனேசுகுர்த லேசமறு
மாபாவி யாகு மெனேயாள்
வாயென்னின் முன்பெற்ற புகழிலிரு மடியாகி
வருபுகழை யடைவை கண்டாய்
சண்டத மதம்போளி சசமசஞ் சுமஞ்சுதர
சத்கண்ட கருட துரகா
சத்குணத் தோமமே கச்சியா மசீரங்க
தாமசுர சார்வ பௌமா
அண்டபரி பூர்ணமணி குண்டலத் துவயகர்ன
வாசானு பாகு யுகளா
அர்க்கச்சி நயனயுக சக்கிரதர தலவரத
வத்திகிரி சிகர மணியே. (2)

வேகவதி தீரத்தில் வந்தபெரு மாள்பிரமன்
வேள்விக் குகந்த பெருமாள்
வீறிய திருக்கச்சி நம்பியொடு வாசகம்
விளம்பு பெருமா ளவனியில்
பீகரா சுரவேட்டை யாடுபெரு மாணல்ல
பெண்ணேயா ளுக்கு மெங்கள்
பெருமா ளெனத்தின முனேத்துதி நரர்க்குவரு
பேறச் சுரர்க்கு முளதோ
சீகர டாரிபர காலமுக வாரிச
திவாகர புராரி விநுதா

செகத்கார ணுசதுர்த் தசபுவன பாரணு
திவ்யதுள சீபூ ஷணு
ஆகவார்ச் சுனசூத நீளா சமேதவனி
லாத்மசர மப்பி ரகிதா
அர்க்கச்சி நயனயுக சக்கிரகர தலவரத
வத்திகிரி சிகர மணியே. (3)

தாசானு தாசனு மவனைத் தலைக்கறி
சமைத்திடுக வென்று சற்றும்
தயவிலா தோதுபர தேவர்மிக நாணவுன்
சந்நிதியி லால வட்டம்
வீசோர் திருக்கச்சி நம்பிக்கொ ராளாகி
வேலைசெய் தனை யாதலால்
வீறிய வுனக்காகு மருளாள னெனுநாமம்
வேறுதே வர்க் காகுமோ
வாசாம கோசர குணுதிசய கோபால
வரவேணு கான லோலா
மதனமத னுகுந்த முகுளா தனுபக்த
மானசு பவித்திர சதனு
ஆசீவி ஷோபமமு ராந்தகா சயராவ
ணுசு ரானுச பாந்தவா
அர்க்கச்சி நயனயுக சக்கிரகர தலவரத
வத்திகிரி சிகர மணியே, (4)

கனதரங் கத்திரு வனந்தசர சாடாத
காயம்வெங் காய நின்னைக்
கங்கைகொண் டான்மண்ட பத்தினிற் கருடன்மிசை
காணுத கண்கள் புண்கள்
தினமுனைப் பணியாத முடிகண்டு முடிவலஞ்
செய்யாத கால் பந்தலிற்
சேர்கா ளுழாதகை யுலகைதுதி பண்ணுத
சிலவாய்கள் பிலவாய்கள் காண்
வனசபவ விநுதமன சிசசனக கனகனித
வசனசுப நளின வதனு
மாரீச தானவவி நாசபர மாகாச
வைகுண்ட புரவ ரேசா
அனுபமம கோச்சவா கேசவா ரத்தினமய
வாரகாஞ் சீவி காரா
அர்க்கச்சி நயனயுக சக்கிரகர தலவரத
வத்திகிரி சிகர மணியே, (5)

ஸ்ரீ:

பிள்ளைப்பாக்கம் கோமாண்டூர்-இளையவல்லி

லக்ஷ்மி நரஸிம்மாசாரியாரால்

இயற்றப்பெற்ற

# தேவராஜ சதகம்.

## முதற் பத்து.

அத்தியங் கிரியோ னெனையடை யுயிர்க
ளனைத்தையு மருளுவே னென்னச்
சத்திய வசனஞ் சதுமுகற் கன்று
தந்துள னெனிற்சங்கை யென்னே
கைத்தலை குவித்துக் கரிகிரி யணுகிக்
காதலுற் றவன்கழ லடைமின்
உய்த்துயிர் வாழ்மி னூழ்வினை யொழிமி
னுண்மையி லுபாயமற் றிதுவே. (1)

சத்திய விரத நன்னில மதனிற்
சதுமுக னூர்புரி மேத
உத்தர வேதி யுகந்தவெம் பெருமா
னுயர்புரு டோத்தமன் வரதன்
அத்திசை முகனுக் கருவர மருளி
யபயவத் தத்தினை யளித்து
முத்தியைத் தருவா னத்தியங் கிரிமேன்
முகிலெனப் படிந்துநின் றனே, (2)

செஞ்சடைச் சிவனுஞ் செழுமலர்த் தேவுந்
தெரிகிலாத் தேசுடைப் பரனென்
றஞ்சன்மி னும்மை யாதரித் தருள்வா
னர்ச்சையி லிங்கமர்ந் துள்ளான்
தஞ்சமென் றத்தி கிரியினைச் சார்மின்
சார்ந்தவன் றளிணை மலரை.
நெஞ்சினுட் பதிய நிலைபெறச் செய்ம்மி
னிச்சய மிடர்கணீங் கிடுமே. (3)

பரத்துவம் வியூகம் விபவமென் பவற்றுட்
பாரினி லெய்துமெய் யடியார்க்
கருச்சைதா னெளிதென் றத்தியின் மலைமே
லவதரித் தருளினன் வரதன்
கரத்தினி லபயக் குறிப்பினைக் காண்மின்
கடிமலர்க் கழலிணைக் கமலம்
சிரத்தினிற் றிகழச் சூட்டுமின் வினைக
டீயினிற் றூசெனக் கெடுமே. (4)

ஆதிநான் மறையுஞ் சீரெடுத் தோத
வரனுயர் குணகணம் பரவக்
கோதிலா காகூ கூவிசை பாடக்
குளிர்மல ரண்டர்கொண் டேந்த
வேதநூல் விதியால் விதிதினம் பணியும்
விண்டொடர் வேழமா மலைமேற்
சோதியாய்த் திகழுஞ் சுந்தரா! வுனையித்
தொண்டனே சொல்லவல் லவனே. (5)

அடைந்தவர் தம்மை யாதரித் தருளுந்
திருவுள மியற்கையி னமைந்த
மடந்தையைத் தனது மார்பினில் வகிக்கு
மாதவ னினியபாற் கடலிற்
படந்தரு பாம்பின் பாயலைத் துறந்து
பகட்டுமா மலையின்வந் தருளி
மடந்தரு நரத்தின் நன்மையைக் கருதும்
வாஞ்சையுங் கருணையு மென்னே. (6)

எண்ணிடின் யாக்கை மண்ணொடு மண்ணா
மெழிறரு மிளமையு மொழியும்
மண்ணுட லுளு மன்னவர் வாழ்வும்
வறிதினில் வீழ்ந்திடு நமர்காள்!
தண்ணளி கொண்டித் தந்திமா மலைமேற்
சகலரு முய்ந்திடத் தானே
நண்ணின னமது நாரணன் றாளை
நலனுற நணுகுமி னீரே. (7)

தன்னுயர் நிலைமை தவிர்ந்துமண் ணடைந்து
தாழ்வுறு மிடைக்குலத் துதித்த
கன்னிய ருளமு முடைகளுங் கவர்ந்து
கறவையுங் களிக்கவே யூதி

அன்னையா மசோதை யதட்டிட வங்காந்
தழுதவா யகிலமுங் காட்டி
மன்னிய வடியார்க் கெளியனு மிந்த
வரதனே சரணமா நமக்கே, (8)

தன்னையே துணையாக் கொண்டவை வர்க்காய்த்
தரணியிற் றூதுசென் றருளிப்
பன்னரும் பொருளைப் பார்த்தனுக் குரைத்துப்
பாரத முடித்தவப் பரமன்
பின்னுமிக் கலியி லுயிரெலாம் பிழைப்பப்
பேரரு ளாளனு யிந்த
உன்னத கிரியி னுச்சிமே னின்று
னுலகுறு பாக்கிய மிதுவே, (9)

கண்ணனைக் கதியைக் கடற்படா வமுதைக்
கரிகிரி முடியமர்ந் தானை
விண்ணவர்க் கரசை வித்திலாக் கனியை
வினையுளோர்க் கோரரு மருந்தை
எண்ணின்மீ தியனை யெப்பொருள் கட்கு
மிறைவனுஞ் சோதியை நீல
வண்ணனை வணங்கி வளம்பெற வுய்ம்மின்
வான்வழித் துணையிலை வேறே, (10)

## இரண்டாம் பத்து.

மண்ணினில் மனித னாகி மாண்புடை மரபை யுற்றும்
புண்ணிய பங்க நேரப் புன்மையிற் புகுந்த ழுந்தி
எண்ணிலா விடர்சு மந்து மென்னிடத் துன்னை நோக்கக்
கண்ணிலேன் பாவ மென்னோ கச்சிமா நகரு ளானே! (1)

அருணிறைந் தெங்கு முள்ளா யந்தரி யாமி யாகி
இரணியற் கவன்றன் பால னிதைநிரு பித்தி ருந்தும்
மருணிறைந் துளதா லென்றன் மதியினிற் பதியக் காணேன்
கருணையங் கடலே! எந்தாய்! கச்சிமா நகரு ளானே! (2)

எத்தனை கால மோதா னென்னினீ கலந்தி ருந்தும்
நித்தமுந் தொழுவி ருப்ப நீசனே னினைத்து மில்லேன்
இத்தின மெனக்கு தித்த வெண்ணமுன் னருளா லன்றோ
கத்தனே! கமலக் கண்ணா! கச்சிமா நகரு ளானே! (3)

"அஞ்சலேன்? அஞ்ச லஞ்சல், அனைவரு மனுகி யென்னைத்
"தஞ்சமா் யடைமின்" என்னுஞ் சமிக்கையுன் றிருக்கரத்தால்
நெஞ்சினுட் பதியுமாறு நித்தமுங் காட்டி நின்றுங்
கஞ்சனேன் கருத கில்லேன் கச்சிமா நகரு ளானே! (4)

துரிசறு கருணை யென்னே தூயபாற் கடலை நீங்கிப்
பரிவுடன் பாரில் வந்திப் பாவியேன் போன்ற வர்க்குத்
தெருளினைக் காட்டி யுன்றன் றேசினைக் காட்டி நின்றாய்
கரிகிரி வரத! வெந்தாய்! கச்சிமா நகரு ளானே! (5)

நிரையுறு வேத மோதி நிட்டையி னின்ற வர்க்கே
உரியவ னென்னி லென்னை யொத்தவ ருய்வ தெங்ஙன்
தரையுறு முயிரை யெல்லாந் தாயெனக் காக்க வந்தாய்
கரை செய்மாக் கடல்கி டந்தாய்! கச்சிமா நகரு ளானே! (6)

ஊனினிப் பொதிசு மந்தே னூழ்வினை மதிசு மந்தேன்
கானடை சோர்ந்துங் காத மேகியுந் துறையைக் காணேன்
தீனர்தம் பந்து வென்றே செகமெலா முறவொ லிக்கும்
கானமார் வேத வோதைக் கச்சிமா நகரு ளானே! (7)

மதியினிற் கசட துற்றேன் மனத்தினிற் கபட முற்றேன்
விதியினில் வெறுப்பை யுற்றேன் விலக்கினில் விருப்பை யுற்றேன்
நிதியென நிற்கு நின்பால் நேசமாம் நினைவை யுற்றேன்
கதியினைக் கருத கில்லேன் கச்சிமா நகரு ளானே! (9)

அல்லலுற் றுனைய டைந்த அயன்முத லோரைக் காத்தாய்
முல்லையிற் கறவை காத்து முதலைவாய்க் கரியைக் காத்தாய்
வல்லவை மேனி திண்டும் வாயச மதையுங் காத்தாய்
கல்லினுட் டேரை காத்தாய் கச்சிமா நகரு ளானே! (9)

இங்குள வேழை யேனை யெண்ணிலா வினைம றந்து
தங்குநின் னேது வில்லாத் தயையினு லணைத்துக் காப்பாய்
பொங்குவெங் கலியின் றீயாற் புழுங்குறு முயிரைக் காக்கக்
கங்கணங் கட்டி நிற்குங் கச்சிமா நகரு ளானே! (10)

## மூன்றும் பத்து

கொடுவரந் தனையுன்னிக் குதுகலமாய்க் கொண்டாடிப்
படுத்தவர வணையோடும் பாற்கடலை நீத்தகன்றே
அடுத்தசுரர் தமையளிப்பா னயோத்திபுகுந் தரக்கர்குலம்
மடித்தவுனக் கேதகுமிவ் வரதனெனுந் திருநாமம். (1)

வேதவதி யுயிர்விடுமுன் வேருடனவ் விலங்கைநகர்ப்
பாதகனைப் படுப்பனெனப் பகர்ந்தனளப் பதுமமலர்
மாதரசி வஞ்சினமுன் மனக்கருத்தி னெடுமுடித்த
சீதரனே! யுனக்கேயாம் வரதனெனுந் திருநாமம்! (2)

தாயினிது மனமகிழத் தந்தையின்மெய்ப் புகழோங்க
ஆயதொரு தருணத்தை யனுகூல வகையாக்கித்
தீயடவி வழியேகித் தென்னிலங்கை செற்றுகந்த
மாயவனே யுனக்கேயாம் வரதனெனுந் திருநாமம். (3)

தந்தையுயிர் தடுமாறத் தாரணியெல் லாம்புலம்பச்
சந்தமுறு மணிமகுடந் தரியாமே சடைமுடிகொண்
டிந்திரையோ டடவிநடந் திமையவர்தங் குறைமுடிக்க
வந்தவுனக் கேதகுமிவ் வரதனெனுந் திருநாமம். (4)

புந்திமிகு தினகரன்சேய் புகலடைய வாக்கருளித்
தந்திரமா வாலியினைச் சங்கரித்து முடிசூட்டிப்
பந்தமுறப் பணிகொண்டுன் சங்கற்பப் படியருள
வந்தபிரா னேயுனக்காம் வரதனெனுந் திருநாமம். (5)

"இந்தா விபிஷணவிவ் விலங்கா புரிராஜ்யம்
தந்தே'னுனக்'' கென்று யவனுன்னைச் சரணடைய
முந்நீ வரமுடித்து மோதமுற முடிசூட்டி
வந்தாய்க்கே யாமிந்த வரதனெனுந் திருநாமம். (6)

பாதுகையை முன்னிட்டுப் பாராளும் பரதாழ்வான்
ஓதியசொற் றவறாமை மாருதியா லுணர்ந்துகந்து
சீதையுட னகர்மேவித் திருமுடியைச் சாத்தியருள்
மாதவனே யுனக்கேயாம் வரதனெனுந் திருநாமம். (7)

மானிடமண் ணிற்றரித்து வாய்மையினுக் கேவசமாய்த்
தானடையுந் தருமத்திற் றவறாமே தனையடையும்
ஆனவரைக் காத்தருளி யன்னியரை மாய்த்துகந்த
வானவகோ வேயுனக்காம் வரதனெனுந் திருநாமம். (8)

பூத்தனுவேள் புகழ்தருமுன் பொற்புடைய திருமேனி
மாத்தவர்கள் கண்டணைவான் மால்கொள்ள மறுபிறப்பிற்
கோத்திடுவங் குரவையெனக் கோகுலத்தி லவர்குறையைத்
தீர்த்தபிரா னேயுனக்காம் வரதனெனுந் திருநாமம். (9)

சிரமுதவும் வாழ்வுதவுஞ் செழுஞ்செல்வ நலமுதவும்
நரமுதவும் பிறவியெனும் நரலையினக் கரையேற்றக்
கரமுதவும் பதமுதவும் மேலான கதியுதவும்
வரமுதவுந் திருநாமம் வரதனெனுந் திருநாமம். (19)

## நாலாம் பத்து

சீராக நின்றிலகு செந்தாம ரைக்கனுறை
திருவோ டிலங்கு பெருமான்
சூராழி யைம்படைகள் பாலாழி விட்டெமது
கோபால னுன வடிவாய்ப்
பாராள வந்துவசு தேவன்ற னக்கரிய
பைம்பால னுகி யருள்வோன்
தீராத வெவ்வினைகள் சாராத ளித்தருள் செய்
தேவாதி ராச னிவனே. (1)

நாலார ணத்தின்முடி மேலாக நின்றதிரு
நாராய ணன்க ணழகன்
கோலாடு கையழகன் கொண்டாடு மெய்யழகன்
கோபால ரோடு குலவா
வாலாட மாமணியி னுவாட வர்னிரைகள்
வானுட மேய்த்த குழகன்
சேலாகு நீள்விழிய சோதைக்கொ ராரமுது
தேவாதி ராச னிவனே. (2)

ஒவ்வாது யர்ந்தமுழு முதனுத னுகிமிக
வொளிர்கின்ற சோதி விமலன்
அவ்வாயர் தாமுருக மண்ணேடு கல்லுருக
வரவாதி யாவு முருகத்
துவ்வாது கவ்வியபுல் வாய்சோர வானிரைக
டுவர்வாயை நோக்கி யுருகச்
செவ்வாயின் வைத்தினிய வேயூதி நின்றசுடர்
தேவாதி ராச னிவனே. (3(

நீரேந்தி நின்றசிறு வடபத்ர சாயியெனு
நிழலாடு மேனி யழகன்
போரேந்தி நின்றமரர் பதியேவு கன்மழைகள்
பொழிகின்ற போழ்தி லருளிக்
காரேந்தி நின்றமலை குடையாக வேசுதறு
கற்ருவி னங்கண் மகிழச்
சீரேந்தி நின்றசிறு விரலேந்து மாமதலை
தேவாதி ராச னிவனே. (4)

மற்றேவ ராலுமுன மாக்கப்ப டாதமறை
முன்சொன்ன வன்ன வடிவோன்

சற்றேனு மையமுள தாகாவ ணங்கலைகள்
சாந்தீப னென்னு முனிவர்
தெற்றேவு ணர்த்தவவர் தாட்கீழ மர்ந்துபல
சின்னஞ்சி றூர்க ளுடனே
சிற்றேவல் செய்துமுறை செவ்வேப டித்தமணி
தேவாதி ராச னிவனே. (5)

வானுண்ட வகிலபுவ னுதார மாகுமுயர்
வைகுண்ட நாத னதிபன்
கானுண்ட வாயர்பதி பால்வெண்ணெ யோடுதயிர்
களவுண்ட கள்ள விழியோன்
மானுண்ட கண்ணியர்கள் மால்கொண்டு சூழவவர்
மணிமூர லுண்ட விதழின்
தேனுண்ட செம்பவள வாய்முத்து கந்தமணி
தேவாதி ராச னிவனே. (6)

கார்க்கோல மின்னலென வொளிவீசு மேனியொடு
கதிர்மண்ட லத்தி லொளிர்வோன்
தார்ப்பார மின்றியவிழ் பாஞ்சாலி கூந்தலொடு
தனியைவர் தாழ்வு முடியச்
சீர்ப்பாத நோவவொரு தூதாக வேகிமிகு
திறல்வீர னுய விசயன்
தேர்ப்பாக னுகியமர் வெல்வித்த செங்கணிறை
தேவாதி ராச னிவனே. (7)

அலைமேவு மாரமுத மும்பர்க்க ளித்ததிரு
வகலாத வகல முடையான்
கலைமேவு நெஞ்சொளிர்கு சேலன்கொ ணர்ந்தவவல்
கனிவாய ருந்தி மகிழா
நிலைமேவு செல்வமவன் வேண்டாத ளித்தருளு
நிதியான நீல முகிலாஞ்
சிலைமேவு நன்னுதலி பின்னைக்கி சைந்ததுணை
தேவாதி ராச னிவனே. (8)

மாணுகை மூலமென வாயோல மிட்டலற
வந்தாத ரித்த முதலோன்
கோணுகை மர்னகொடி யோன்றம்பி மன்னர்சபை
கொடுவந்து துகிலை யுரியப்

பூணாக மானமணி பாஞ்சாலி யின்புடவை
பேராக வளர வருளும்
சேணாக நின்றிலகு துவராபு ரிக்கரசு
தேவாதி ராச னிவனே. (9)

தாயான தண்ணளியி னுன்சத்ய மாயவொரு
சங்கற்ப மேய பரமன்
வாயான சொற்பழுது தாணாக வேதிகிரி
வலமேந்தி வான நதியின்
சேயான வன்மொழியை யேயாத ரித்தலரி
தெரியாது மாய்த்து விசயன்
தீயான வெய்யகுழி பாயாத ளித்ததுணை
தேவாதி ராச னிவனே. (10)

## ஐந்தாம் பத்து

சீராளுமெக் கருமங்களுஞ் சிறுபான்மையுஞ் சேய்தே னிலேன்
தீராதவெம் பழிபாவமே செய்தேங்கியுஞ் செய்தேயுளேன்
பேராளுமாற் பிரபஞ்சவஞ் சகனென்னுமிப் பெரும்பேதையை
ஆராளுவார் நீயேயலால் அருளாளனே அருளாளனே. (1)

இருள்சூழுமிப் பிறவிக்கடற் கிடையென்னையென் வினைசூழ்ந்திடும்
மருள்சூழுமென் னெஞ்சந்தனை வதைசெய்யவென் னிடர்சூழ்ந்திடும்
வெருள்சூழுமவ் விழியோடெமன் விடு பாசமென் னைச்சூழுமுன்
அருள்சூழவந் தெனையாளுவாய் அருளாளனே அருளாளனே. (2)

நொந்தார்க்கி ரக்கங்கொண்டிலேன் நோயாலிடுக் கண்பட்டுளேன்
வந்தார்க்கமு திட்டுண்டிலேன் வருமுன்சுளித் தெதிர்சீறினேன்
தந்தார்க்கிடர் தந்தேசினேன் தாயும்வெறுப் புறுதீமையேன்
அந்தாயெனைக் கைவிட்டிடேல் அருளாளனே அருளாளனே. (3)

ஊராகுமோ வழியிற்றுணை யுறவுங்நெடுந் துணையாகுமோ
சீராகுமோ குருடன்னடை செறிகானிடைத் தனியேகிடில்
நீராகுமோ வெங்கானலும் நின்றேன்விடாய்ப் பட்டேங்கியே
ஆராளுவார் கதிநீயலால் அருளாளனே அருளாளனே. (4)

வினையின்விடந் தலையேறலால் வேம்புஞ்சுவைக் கரும்பாயது
நினைவும்படிப் படியாகவே நிலையிற்கலங் கியதாயது
இனியாரிதைச் சொலுமென்செவிக் கேருததாய் வெளியாயது
அநியாயநோய்ப் பிடகாரியார் அருளாளனே அருளாளனே. (5)

மலையாய்த்திரௌ பதிதானையை வளர்வானளித் ததுமில்லையோ
மலையாங்கரீந் திரனைக்கரா வாய்நின்றளித்த ததுமில்லையோ
சிலையானநங் கையையுந்திருத் தாளாலளித் ததுமில்லையோ
அலையோவெனக் கவ்வாறுதான் அருளாளனே அருளாளனே. (6)

வலமார்ந்ததொர் மகிழ்வேதரு மனைமக்களின் சுகம் வேண்டிலேன்
நிலமாளுமன் னவர்வெண்குடை நெடுநீழலின் சுகம் வேண்டிலேன்
விலகாதவிந் திரலோகபோ கமும்வேண்டிலேன் விமலாவுனக்
கலமேவுதொண் டேவேண்டுவேன் அருளாளனே அருளாளனே.
(7)

இடரேந்தினேன் பலவூழியா யியல்பாயெனக் கிதுநின்றது
படவேறிடர் புதிதாயிலை படிமீதுநின்னடியார்களை
யொடியாதவா றருள்வாயெனு முரையோவுனக் கபவாதமாம்
அடியேனையா தலினாளுவாய் அருளாளனே அருளாளனே. (8)

பேராசையான் முடநீள்கிளைப் பிரசம்விரும் பியவாறுபோல்
தீராதவிவ் வினையேனுமுன் சீரார்ந்தசே வடியெண்ணவோ
ஆராய்ந்திலே னறிவின்மையால் அபாரதிநா னபராதிநான்
ஆராவமு தேயாளுவாய் அருளாளனே அருளாளனே, (9)

இத்தண்மையா னருள்வேண்டலெ னிதயத்தினுள் ளெழுபத்தியின்
மெய்த்தன்மையாந் துதியன்றுகாண் பிறரென்னையே மெச்சும்
வணம்
பொய்த்தன்மைபூண் டுளதீதுகண் டாகன்னனைப் போலென்னையும்
அத்தன்மையா தரித்தாளுவாய் அருளாளனே அருளாளனே. (10)

## ஆறும் பத்து.

நினையாத பாவ மினியில்லை யெற்கு
நிலையாய்நி னைத்த நினைவை
முனையாமு டித்த றனையேசி றந்த
முனையாய்வ கித்த முறையால்
வினையாள நின்ற வெனையாவ ருங்கை
விடுகின்ற வேலை விரவி
எனையாத ரிப்ப ரெவரேக ரீச!
யிலைவேறெ னக்கொர் கதியே. (1)

இருளால டர்ந்த பவசாக ரத்தி
னிடையேய ழுந்து தமியேன்
மருளான்ம யங்கு மனமேங்க வாய்மேய்
வலிசோர வீழு பொழுது

தெருளாலென் சிந்தை யதுசீர்தி ருத்தி
யடியார்ம ருங்கு திகழ
அருளாள வைப்ப ரெவருன்னை யன்றி
யறியேனெ னக்கோர் கதியே. (2)

நிலையற்ற வாழ்வை நிகரற்ற தென்று
நினைவுற்று நின்று நெடுநாள்
அலைவுற்று வீணி லயர்வுற்ற னுங்கி
யறிவற்ற சத்தை யனையேன்
கொலையுற்ற வைவர் குறியிட்ட வாறெ
னுயிரைக்கு மைக்க விதியோ
கலையுற்ற முத்தி நகரக்க ரீச!
காணேனெ னக்கோர் கதியே. (3)

தனியாய கன்ம சண்டாள னென்று
சான்றோரு மென்னை விழியார்
இனியானெ றதெ னினமும்வெ றுத்த
திடரென்கை யுற்ற வகையால்
உனியானி ழைக்க வுளதாய தீமை
யொன்றில்லை யொன்றி யுறைவேன்
எனையாத ரிப்ப தினியார்க ரீச!
யிலையெற்கு வேறு கதியே. (4)

வனமந்தி கட்கு மெட்டாது யர்ந்து
வானேங்கு மாவி னுனிமேல்
தனியாய்வி ளங்கு கனியாசை கொண்டு
தலைநீட்டி நீட்டு முடவன்
இனமாகி யாழ்ந்த குருபாத கத்தி
னிடருற்ற வென்னை யெவரே
நினையாதெ னீச மருள்வார்க ரீச!
நினையல்ல தில்லை கதியே. (5)

தருமத்தை யென்று மறியேன்சி றந்த
தக்கோரி னத்தை மதியேன்
கருமத்தை நாடு கயவர்க்கி சைந்து
காலங்க ழித்த கடையேன்
சிரமத்தி ளுலோர் செயலற்று வீழ்ந்த
திக்கற்ற தீய சிறியேன்
திருவத்தியீச! வுனையன்றி வேறு
தெரியேனெ னக்கோர் கதியே. (6)

வித்தொன்று போட வினையுங்கொல் வேறு
வினையால்வி ளைந்த விபவம்

நித்தஞ்செ றிந்து புண்ணுகி நைஞ்ச
நெடுநஞ்ச வஞ்ச மதியேன்
கத்தன்க டூர கன்னெஞ்ச னென்று
காருண்ய மேயொர் பழியை
வைத்துன்னை யேசு மெனைநீவி லக்கில்
வரதாவெ னக்கென் கதியே. (7)

இன்புற்ற தற்கு நானேது வென்று
மேனேர்க ளல்ல ரெனவும்
துன்புற்ற தற்கு நீமூல மென்றுந்
துணிவாய்ப்ப ழித்த பழியை
வன்புற்ற சிந்தை மயலென்றி ரங்கி
மதியாத ளிப்ப ரெவரே
அன்பர்க்கு கந்த வமுதேக ரீச!
வடைவில்லை வேறு கதியே. (8)

விண்ணுங்க லங்க விசைகொண்டு மோது
சுழல் காற்றின் வீசு துகள்போல்
மண்ணிற்சு ழன்று தடுமாறு பற்றை
மனிதற்கு ளொன்றை யிழிபென்
றெண்ணிப்ப ழித்தொர் தூசைப்ப ழிச்சி
யினைவேனெ வர்க்கு மிறையாய்
உண்ணிற்கு முன்னை யுணரேன்க ரீச !
வுனையல்ல தில்லை கதியே. (9)

இனியானு ரைப்ப தெவனீயி ரங்கி
யெனையார்த ரிக்க விலையேல்
அனியாய மாக வெனதாவி மாளு
மருளாள! நிற்கி தழகோ
தனியாழி யாய தயையாலெ னக்குன்
சரணீத லேநின் முறைமை
கனியாவெ னக்கிங் கிலையில்லை யில்லை
கண்கண்ட வேறு கதியே. (10)

## ஏழாம் பத்து

அருமறை மெய்யெனி லதன்படி நோக்க
அடியனேன் வினையெலா மறந்தவிர்ந் தனவே
இருளடர் நெஞ்சினர் நீசருக் கெல்லாம்
இணையறு தலைவனு னீதுமெய் வரதா!

ஒருமுறை வினவியவ் வொளிச்சி முதலோர்
உண்மையே யிதுவென விடையுத வுவரேல்
அருமையி லாகுமிவ் வாய்மையை மெச்சி
யன்புட னென்வினை பொறுத்த ருளாயே. (1)

கமையெனு முன்குணங் கனவினை தேடிக்
கட்டழித் தொழிக்குமோர் காதலுற் றுளதால்
சுமைவினை கொண்டவர் தொடுகட லுலகில்
துருவினு மென்னின்மிக் கோர்களு முளரோ
குமை செயுன் பொறையினுக் கமைதரு மிலக்காய்க்
கொண்டெனை யருள் செயிற் பேரரு ளாளா
அமைதரு நம்மிரு வருக்குமாண் பெய்து
மாதலி னென்வினை பொறுத்தரு ளாயே. (2)

புண்ணியம் புரிந்துநின் பூசையே செய்யும்
புனிதரைக் காத்தருள் புரிதலி னினக்கு
நண்ணிய மேன்மையென் பேரரு ளாளா!
நற்றநின் பொறையினுக் குற்றதோர் பொருளென்
எண்ணரு நின்னிடத் தேயபரா த
மிழைக்குமிப் பாவியே னினங்களை யோம்பல்
கண்ணிய மாகுநின் னிணையிலாக் கமைக்கிக்
காரணத் தென்வினை பொறுத்தரு ளாயே. (3)

கதியிலை வேறெனக் கருதினா னனடந்தேன்
கரிகிரி வரதநீ காத்திலை யாயின்
விதியுறு வினைவிளை விவிதமாந் துயர்கள்
மேவிடு மென்வயின், மேவுக, மதியேன்,
பதிதர்தந் தலைவனு யுன்பெரும் பொறைக்குப்
பாத்திர னுமெனைக் காத்திலை யெனவே
அதிபதி யிலையென வகல்வரென் வழியோ
ராதலி னென்வினை பொறுத்தரு ளாயே. (4)

படுகுழி நரகுறும் பரிபவ மெல்லாம்
பலமுறை பழகிய அனுபவ முறுநாள்
அடுகள மேவிமுன் னருச்சுனற் குரைத்த
வபயவான் மொழியினை யகமுறக் கொண்டுன்
அடிகளே கதியென வடைக்கலம் புகுந்தே
னருக னுயினு மருகனு யமைத்துன்
உடனுறை கமையுள் மகிழ்தர வரதா!
உன்மொழி காத்தெனைப் பொறுத்தருளாயே. (5)

அடியிணை யேகதி யெனவிழு வேனை
 அளியனென் றிக்கண மருள்கிலை யெனிற்பின்
உடைவுறு நாயினே னுத்தையி லழுந்தி
 யுன்னருவருப்பிற் கேபொரு ளாவேன்
தடையிலை சகியார் தயைகமை யென்போர்
 தாசனை வரதவுன் றாளிணை வைப்பார்
கடைவரை காத்தலிற் காண்பய னிலையால்
 கடுகி யென் கனவினை பொறுத்தரு ளாயே. (6)

எனையருள் வாயென விரந்துநா னிற்ப
 விதரதெய் வதங்கள்போல் வரதனு நீயும்
"வினைவழி யவரவ ரடைகுவர் பலனை
 விதியிது வாம்" என விளம்புத றகுமோ
நினையடை யார்க்கிது நிகழ்த்துறு மொழியாம்
 நேர்மையி னினக்குறு சுதந்திரம் விளங்க
யுனையடை யடியனே னுய்ந்திடும் வண்ண
 மூழுறு மென்வினை பொறுத்தரு ளாயே. (7)

புண்ணியம் புரிந்திலன் புரிபவர் தமையும்
 புரியவொட் டாவணம் புகன்றபூ ரியனேன்
பண்ணிய பாவவெம் பயன்களோ வென்னைப்
 படர்தரு மிடருடன் பரிபவப் படுத்தும்
எண்ணில வாமிவை யெனையணு காமே
 யெதிர்த்திடத் திடனிலே னென்னரு ளாளா!
நண்ணுமுன் கமையினு லொழிக்கநீ வல்லை
 நாரண வென்வினை பொறுத்தரு ளாயே. (8)

துயருடன் கலந்துறு சுகங்களி லாழ்த்துந்
 தொல்வினை யெனும்பெருஞ் சுறையிற் சுழல்வேன்
மயர்வுறு மதியினி லென்னையே யறியேன்
 மாயனே சூக்கும மாயெனுள் வயங்கும்
உயர்வுறு முன்னையா னுணர்ந்திடா ததுவு
 மோரரு விந்தைகொல் பேரரு ளாளா
அயர்வற வுன்னடித் தியானமே யமர்வா
 னறிவுதந் தானைப் பொருத்தரு ளாயே. (9)

புற்புத வாழ்வினை நிற்பதென் றெளியேன்
 புரிவினை சிறிதெனிற் புந்தியிற் கொள்ளேல்
சற்பனைப் புலன்களின் வசத்தனு யிழைத்த
 தவறுக ளுளவெனிற் சகித்தனின் பரமாம்
வெற்பெனத் துணிந்துமுன் வேண்டுமென் றிழைத்த
 வினையுடை யேனெனிற் பேரரு ளாளா!
பொற்பமை கமையெனும் பூவைபாற் படுத்திப்
 புரிவினை யனைத்தையும் பொறுத்தரு ளாயே. (10)

## எட்டாம் பத்து

ஆண்டுக ளாண்டுக ளாயெனை யாண்டனை யானு முனக்கடிமை
பூண்டொரு போழ்துமு னாணைக டந்திலன் பூதல மீதறியும்
வேண்டுவ னாதலி னோர்வர முன்னையவ் வேழ மலைச்சிகரத்
தாண்டவ னண்டைய ரைக்கண மேலும மர்த்திடு வாய்மனனே(1)

ஆவிய டங்குமு னோர்தர மேனுமெ னாசைய டங்கிவிடப்
பாவக ணங்களென் பாங்கர்வி டப்படர் பாரினை விண்ணினுறத்
தாவிய ளந்தத யாநிதி யுஞ்சக தீசனு மானபெருந்
தேவிம ணாளன டிக்கம லத்திடை சேர்த்திடு வாய் மனனே. (2)

தேகமு கந்துயர் பாலன முண்டுதி னந்தொறுஞ் சேயிழையார்
போகமு கந்தலை வுற்றது போதுமு னாழிய மர்ந்தணையாய்
நாகமு கந்தவன் மண்டல விண்ணக ரிற்புரி நான்முகனார்
யாகமு கந்தவி யுண்டபி ரானடி யண்டைவி டாய்மனனே. (3)

ஆசையி னாலரு ளாளன டைக்கல மாகநெ ருங்கிலெனைத்
தேசம லாததொர் தேசம திற்புக வைத்துந கைத்திடுவாய்
தேசமெ தாயினு முன்னுனை வீட்டுமு யன்றிடிற் றேவர்பிரான்
ஈசனை யென்னெதிர் மன்னிநி லைத்திட வைத்திடு வாய்மனனே. (4)

தீவினை சூழ்ந்துத கித்திடு மெற்கொரு தேறுத ருனிலையோ
பாவிய னேன்படு பாடுமு னெஞ்சினிற் பட்டது தானிலையோ
நாவியி னிற்பெறு நான்முக னார்க்கரு ணாதனு நீயுமலால்
யாவரெ னக்குள ராதரத வாயுரை யாயிதை யென்மனனே, (6)

நீயிலை யேயொரு காரிய முந்நிறை வேறுத லென்பதிலை
போயிலை யேனுந்து றந்தெனை விட்டுந யந்துபொ ருந்தியிலை
வாயில னேனும்வி ரும்புவ தோவரு ளாளன்ம லர்க்கழலே
ஆயினு முன்னைய டுத்ததி னாலில பித்திடு மேமனமே, (6)

இச்சையெ னக்குமி குத்துள தாலிது வேயொரு நற்சகுனம்
நிச்சய மின்றிலை யேனுநி த்லதிலெ னேடிடு முன்னெனைநீ
மெச்சியெ ழுப்பிவி ழித்தபி னென்னையவ் வேழ மலைச்சிகரத்
தச்சுத னுக்கொர டைக்கல மாக வமர்த்திடு வாய் மனனே. (7)

வேளைவ ராதுவ ராதெது வும்வளர் ஊழ்வினை வேருடனே
மாளவ ராதுநி னைத்தவு டன்பலன் முற்றும்வ கித்தன்முறை
ஆளவ ரானரு ளாளனெ னிற்கமை யன்னைத யாமுனமே
தாளவ ராதத விப்புடை யேனுறத் தயைபுரிவாய் மனனே. (8)

காலனெ ருங்கிடு காலமுங் கோலமுங் கண்டவர் தாமுளரோ
காலையின் மாலையி லெக்கண மோவரு கங்குலி னெக்கணமோ
சாலவு மற்பநி பங்களை யுங்கொடு தானுயிர் கொண்டிடுவான்
காலம திற்கரி மாமலை யான்கழல் காட்டிடுவாய் மனனே. (9)

நொந்தன னேமன னேபடு நோயில மிழ்ந்தன னேமனனே
வெந்தன னேமன னேபிற வித்தழல் வேதையி முன்மனனே
வந்தென்வி டாயற யின்னமு தூட்டிட மாட்டுவை நீமனனே
எந்தையு நீயுமி ருந்தெனை விட்டிட லேற்குங்கொ லோமனனே.(10)

## ஒன்பதாம் பத்து.

தீமையெலாஞ் செறிமனத்தாற் றேடியுனைச் சிந்தனைநாள்
செய்த லாலோ
வாய்மையிலா வாக்குட னுன் வழங்கரிய திருநாமம்
வழங்க லாலோ
தூய்மையிலா வென்கரத்தா லுனதுசுட ரடிமலரைத்
தொழுத லாலோ
சேய்மையுள்ா யென்பட்டுஞ் சிறந்தெங்கும் பரந்துள்ள
தேவர் தேவே. (1)

விதிவழியே மெய்ஞ்ஞான வித்தகர்த முபதேசம்
வேண்டி லேனுய்க்
கதியினதென் றறியாமே காலமெலாம் வீணுகக்
கழித்தே னின்று
மதிமருளு மேழையினேன் வகையறியா துரைசெயுமிவ்
வழுக்கள் வாய்ந்த
துதிமொழியைப் பொருண்மொழியாக் கொண்டருள்வாய்
துதிக்கைமலைச் சோதியோனே. (2)

மண்ணின்மிசை யுறுநசையான் மாநிதிய மாமுன்னை
மதிக்க லாதேன்
எண்ணிவிடர்ப் பெருக்கத்தா லின்றுனது திருவடியே
யெய்தவேண்டி
நண்ணியலற் றுவனேனு மெய்திவிடு மேர்வெனவு
நடுங்கு கின்றேன்
பண்ணியபா வமுமென்னே வரதர்விச் சிக்கறுத்துப்
பாலிப்பாயே. (3)

குன்றமதிற் றிருக்கோயில் கொண்டருளும் வானவர்தங்
கோவே யுன்றுள்
ஒன்றியுறு நிலையொன்றே நிலையாக நின்றநிலை
யிந்த வுண்மை
யன்றுமுத லறியாமே யலைவுற்றின் றறிந்துனடி
யடைய நின்றேன்
நின்றநிலை தவருமே யானுய்ய நியமிப்பாய்
நெடியமாலே. (4)

துஞ்சுவதே தொழிலாகத் துவண்டுறங்கு மென்மதியந்
துணையி தற்காய்ச்
சஞ்சலமே விதியாகத் தன்வழியே தானுழலுந்
தமியே னெஞ்சம்
வஞ்சனையென் வயினில்லேன் வழியில்லே னுய்வதற்
வகைதா னில்லேன்
அஞ்சலிசெய் துன்னடியே காதலித்தே னருளாள
வருளுவாயே, (5)

கையாகச் சடமிதெனக் கண்டவருங்க ழித்துவிடு
கின்ற ரெந்தாய்
மெய்யாகு மிதைநீயே மேலாக வெனக்கமைத்த
விதையென் றெண்ணி
நையாது நான்கற்ற வரதாவென் றொருநாமம்
நயந்து கூறிக்
கையாரக் கைகூப்பிக் காத்திருப்பே னெனைநீயுங்
கைவி டாதே. [6]

கண்டாலு மக்கணமே கனவினையா வுந்தொடருங்
கடிய கன்ம
சண்டாள னிவனென்றே தமர்களுமித் தமியேனைத்
தணந்தா ரெந்தாய்
உண்டான வித்தனிமை யுன்னருடா வெனவுன்னி
யுனது பாதங்
கொண்டாடிக் கைகூப்பிக் காத்திருப்பேன் குளிரவிழித்
தெனைக் கொள்வாயே, (7)

நாடியெலா முள்ளொடுங்க நாவியினின் றுவியெழ
நணுகு மந்நாள்
நேடிநமன் றமர்களெனை நலிந்திடுவார் நானுன்னை
நினைக்க மாட்டேன்
தேடியுன திருநாம மென்னினைவு சிதையாம
லிருக்கு மின்றே
பாடிடுவன் கச்சிநம்பி தனக்குரைத்த படியிதைநீ
பற்றுவாயே. (8)

ஆருக்காகிலுமுண்டோ பயனணுமாத் திரமேனு
மளிய னேனால்
ஊருக்கா யிலனேனு மொருவர்க்கா யினுமுலகி
லுதவி லேனாய்

சீருக்கா யிலவேனுஞ் செயவொண்ணுச் செயல்புரிந்தென்
சிறுமை பூண்டிப்
பாருக்கோர் பளுவாகப் படிந்துள்ளே னருளாள
பாவி நானே, (9)

நின்றறிலே யேயென்று நிலேத்திருக்கு மென்பதிலா
நெஞ்சந் தான்மற்
றின்றெனது வசமாக விருத்தலினுன் றிருநாம
மியம்ப லுற்றேன்
பொன்றலுறு நாட்கால தூதர்போ ராட்டத்தி
லுன்னைப் போற்றேன்
அன்றருளி யிதையேகொண் டருளாள வெளியேனை
யாட்கொள் வாயே, (10)

## பத்தாம் பத்து,

வண்டார் பூவின் மாமக ளாகம் வைத்தோனைத்
திண்டோ ளானைத் தேவர்தங் கோனைச் செந்தேனை
விண்டோய் மாடக் கச்சியில் வேழக் குன்றேனைக்
கண்டேன் கண்டேன் கண்கள்க ளிப்பக் கண்டேனே. (1)

அண்டா ரைத்தா ஞதரி யானைப் பெம்மானைத்
தொண்டே செய்யுந் தூயர்சு வைக்குந் துப்போனைத்
தண்டார் சோலைக் கச்சியி லின்பந் தந்தானைக்
கண்டேன் கண்டேன் கண்கள்க ளிப்பக் கண்டேனே, (2)

எண்டே ரன்பர்க் கெய்ப்பினில் வைப்பா மெங்கோனைத்
திண்டே ரைவர் தூதுவ னென்னச் சென்றேனைப்
பண்டோர் வேதக் கச்சியு கக்கும் பண்போனைக்
கண்டேன் கண்டேன் கண்கள்க ளிப்பக் கண்டேனே. (3)

உண்டே வையந் தன்னுத ரத்தே யுய்த்தோனை
மண்டேய் மாந்தர் மாசுத விர்க்கும் வல்லோனைச்
செண்டார் வீதிக் கச்சிவி ளங்கச் செய்தோனைக்
கண்டேன் கண்டேன் கண்கள்க ளிப்பக் கண்டேனே. (4)

தண்டோர் வில்வாள் சக்கரம் வெற்றிச் சங்கோனை
விண்டாய் மண்ணை முற்றும ளக்கும் மிக்கோனை
மிண்டா ரிஞ்சிக் கச்சியை மெச்சும் மெய்த்தேவைக்
கண்டேன் கண்டேன் கண்கள்க ளிப்பக்கண்டேனே, (5)

பண்டோ ராலிற் பள்ளியு கக்கும் பண்போனைக்
கொண்டோர் கோலக் கோலம தாய்மண் கொண்டோனைத்
திண்டேர் வீதிக் கச்சிசி றக்கச் செல்வோனைக்
கண்டேன் கண்டேன் கண்கள்க ளிப்பக் கண்டேனே, (6)

தண்டே னைக்கற்கண்டினை யிக்கின் சத்தோனை
விண்டோர் நஞ்சை யண்டமு யிர்க்கும் வித்தோனைப்
பண்டார் கச்சிக் கெச்சனை வண்ணம் பைத்தோனைக்
கண்டேன் கண்டேன் கண்கள்க ளிப்பக் கண்டேனே. (7)

விண்டோர் புள்ளாய் நான்மறை முற்றும் விண்டோனைத்
தண்டா மீனா யம்மறை மீளத் தந்தோனைப்
பண்டார் வேதப் பண்பயில் கச்சிப் பற்றோனைக்
கண்டேன் கண்டேன் கண்கள்க ளிப்பக் கண்டேனே, (8)

உண்டே வெண்ணெய்க் காங்குர லிற்கட் டுண்டோர்னைக்
குண்டோர் மேதத் தேயவி வாயிற் கொர்ண்டோனைப்
பண்டேர் கச்சிப் பண்டென நிற்கும் பண்டோனைக்
கண்டேன் கண்டேன் கண்கள்க ளிப்பக் கண்டேனே. (9)

புண்டேர் கண்ணிற் பொய்யர்த மக்குப் பொய்த்தோனை
விண்டேர் கண்ணின் மெய்யர்த மக்கு மெய்த் தோனை
மண்டேர் கண்ணைக் கச்சியி லென்னை வைத்தோனைக்
கண்டேன் கண்டேன் கண்கள்க ளிப்பக் கண்டேனே. (10)

ஸ்ரீ:

வட ஆற்காடு ஜில்லா செய்யாறு தாலூகா

குத்தனூர் ஸ்ரீமான் சின்னஸாமி சாஸ்திரியாரவர்கள் இயற்றிய

## ஸ்ரீ காஞ்சீபுரம் அத்திகிரிவரதராஜப்பெருமான்

## கீர்த்தனை

கல்யாணி ராகம் — ரூபக தாளம்

### பல்லவி

வரதா வரந்தர வரவேணும்
வந்து தரிசனந் தரவேணும் (வரதா)

### அனுபல்லவி

மரதகமணி வண்ணனே கண்ணனே
மாயனே செங்கனிவாயனே தூயனே
சரதமாக நின்சரண பக்தியைத்
தாருமுன் வாரும் சொல்லேருங்கண் பாரும் (வரதா)

### சரணம்

1. பண்டந்தரங்க பக்தனு மரவிந்த
பவன்செய்த பரிமேதந் தனி விந்த
மண்டலமீடேற வந்த வைகுந்த
வாஸனே யாளுமென் றந்த
விண்டலத் தண்டருந் தண்டுக மண்டலங்
கொண்டவருமா கண்டலனுங்காள
கண்டனுந் தொண்டருங்கண்டு துதிசெய்யுங்
காரண காரண நாரண வாரண (வரதா)

2. அந்தணர்தேடி யன்புடனேநாடி
யனைவருங் கூடியரு மறைபாடி
வந்தனஞ்சூடி வணங்கிக் கொண்டாடி
மாரஸஹஸ்திரகோடி
சுந்தரனே கம்புகந்தரனே ராம
சந்திரனேயென்று சந்ததம் புகழ
மந்தநகை கோடிமதிபோல் துலங்க
வந்த கோவிந்த முகுந்த முசுகுந்த (வரதா)

3. உன்னையன்றி தெய்வமில்லையென்று வேதம்
உபநிஷத்து முரைத்திட பேதம்
துன்னு மறியாத மூடர்கள் வாதம்
சொல்லுவதென்ன விநோதம்
பன்னக சயனு பன்னக ரண்ணிய
மன்னும் பரந்தாமனென்னுந் தயாகர
சின்னஸாமிதாஸன் சித்தத்தில் வாழ்பெருந்
தேவியை மேவியுலாவிக் குலாவிய (வரதா)

## ஸ்ரீ வரதராஜப் பெருமாள் வைசாகவுற்சவ யேலப் பாட்டு

ஏலேலோ ராமஜயம்—கோவிந்தா
ஏலேலோ ஸீதா தேவி ஜயம்

1. கடலாடை யுடுத்தபெருங்
காசினிக்கோ திலகமெனுங்
கச்சிநகர் தனில்வாழுங்
கரிவரதன் கண்டருளுந்
திடமேவுந் திருநாளின்
திவ்வியவை பவங்களெல்லாஞ்
சீராக ஜனங்களுக்கு
தெளியவுரை செய்வதற்கு

### முடுகு

அடைவுடன்சாதுக்க ளாசார்யனென்றே
யனிசமுங்கொண்டாடி யானந்தமீறி
புடைசூழுமெழில்பூத புரிதனில்வாழும்
புண்ணியனுமெதிராஜன் பொன்னடிகள்போற்றி
தடமதிளமர்க்குருகை தனிலெந்தநாளும்
ஸஜ்ஜனர்களிகொண்டு தரிசிக்கவாழுஞ்
சடகோபன்பாதபொற் றுமறைகள்போற்றி
தாரணியிலோங்கிவளர் தமிழுக்குநல்ல
வடமொழிக்குஞ்சகல மந்திரங்களுக்கும்
வாதிகளைவெல்லுமதி வல்லமைகளுக்கும்
இடமானதேசிக னெழிற்பதம்போற்றி

இவ்வுலகுமவ்வுலகு மெவ்வுலகும் புகழும்
படமாரனந்தனே பாரிலவதாரம்
பண்ணிடும்மணவாள பண்ணவனெடின்னம்
அடியார்பதக்கமல மனவரதம்போற்றி
ஆத்மஞானிகளுபய வடிபொடிகள்போற்றி.

### ஏலேலோ.

2. செங்கமல மங்கைபெருந்
தேவியம்மை குடியிருக்குந்
திருமார்பன் அருளாளன்
திருநாளின் தேதிகண்டு
புங்கவனுஞ் சடகோபன்
புரங்காண வருமுன்னே
பூரணமா யலங்காரம்
புரியமனம் பூண்டுடனே.

### முடுகு,

சங்கமன்னனங்களுந் தவமுகமுனிகளும்
ஜாதிமல்லிகைமுல்லை ஸம்பங்கிஜாஜி
பங்கயங்கள்சேரும் பலவாவிசோலை
பரிமளஞ்சூழ்காஞ்சி பட்டணந்தன்னில்
பொங்கமுடனேவாழும் புண்ணியரெல்லோரும்
போட்டியாயங்கங்கே பூப்பந்தலிட்டு
தங்கத்தூண்களை ஜாரிஜாரியாய்நாட்டி
ஜாலரஸமானகிரி சதிராகப்பூட்டி
தொங்கப்பழக்குலைகள் சுற்றிலும்மாட்டி
சுத்தமாய்பித்திகளில் சுண்ணமுந்தீட்டி
துங்கமணிமயமகர தோரணங்கள்கட்டி
தூயவீதிகளெலாந் தோயங்கள்கொட்டி
மங்களாலங்கார மருவிபந்துக்கள்
வருகவருகக்கண்டு மரியாதைசெய்ய
கொங்கணர்வங்கணர்க் குச்சரர்சோளர்
குலுக்கர்க்கலிங்கரொடு குடகுமலையாளர்
வங்கர்த்தெலுங்கர்வட மதுரைநேபாளர்

வாராணசீபுரியில் வாழுங்குணாளர்
பெங்களூர்மைசூரர் பேரூர்சித்தூரர்
பெரும்புவியிலிருக்கின்ற பேரெலாம்வருக
கங்கையணிசிவனுமா கண்டலனுமயனுங்
ககனத்திலமரமுனி கணங்களொடுசூழ
அங்கசன்மகிழும்வை யாசிமாதத்தில்
அன்பரெவருங்கோரி யானந்தமடையுந்
திங்கள்வளர்பட்சத்தில் சித்திரைநக்ஷத்திரஞ்
சேர்ந்ததினம்கொடியேற சீர்விமானத்தில்
எங்களன்னையரிருவ ரிருபுரமிருக்க
எழுந்தருளிவந்தபின் னிரவிலெழிலாக
சிங்கவாகனமேறி ஸேவைதந்தெவருஞ்
சிந்தைமகிழ்கொண்டுஜய ஜயவென்று சொல்ல
இங்கிந்தவைபோக மெங்குமிலையென்ன
இகபரமபதமெனு மிருப்பிடஞ்சேர்ந்தான்.

### ஏலேலோ

3. அந்தமுட னிரண்டாநாள்
அன்னத்தின் மீதேறி
அகிலத்தையும் படைத்தவனும்
அயனும்நா னெனக்கூறி
சுந்தரமா யன்றிரவில்
சூர்யப்ரபை தனிலெழுந்து
சூரியனு ருள்ளிருந்து
துலங்குமவன் தானென்று

### முடுகு

விந்தையாய்காட்டியே விடுதிவரகதிரோன்
வெட்கியதுபோலுதய வேளைமூன்றுநாள்
மந்தாரபொழுதர்க மறைமூர்த்தியான
வைனதேயனையேறி வைபோகமாக
சொந்தமாம்வைரமுடி சோதியாய்மின்ன
தோள்வலயங்குண்டலமுந் துலங்குபொன்பூணூல்
சந்ததபதக்கம்ஹாரம் தங்கவரைநாணும்
ஜாஜியொடுஸம்பங்கி தவனமருக்கொழுந்து

கந்தவேர்மல்லிகை கதிர்பச்சைமுல்லை
கமலமலர்ஹாரமுங் கஸ்தூரிதிலகம்
இந்துநிகர்குடைகளுட னிருசாமரங்கள்
எல்லாம்பிரகாசிக்க யிபசைலமதனை
மந்தகதியாகவலம் வந்துகோபுரத்தின்
வாசலிலெழுந்தருள மலரயன்செய்த
குந்தகமிலாவேள்வி குண்டத்தில்வந்த
குறியைக்காட்டும்வேத கோஷங்களோங்க
துந்துபிமுதலான துகளும்முழங்க
சுருட்டிஜண்டாக்களுஞ் சோபையாய்விளங்க
வந்தவர்களெல்லாரும் வந்தனஞ்செய்து
வரதகரிவரதஹரி வைகுந்தவாசா
முந்தமுடவனையாண்ட முசுகுந்தவரதா
மோக்ஷதாயகஜகன் மோஹனுகாரா
உந்தனுக்கிணையில்லை யூமைக்குமந்நாள்
ஓதவாக்கிட்டபுரு ஷோத்தமனேயென்ன
தந்தந்தலைப்பாகை ஸலவைவேஷ்டிகளின்
தவளமயமிதுகலச ஜலதியோவென்ன
மந்தரந்தானிந்த வாரணமோவென்ன
மாகரிகளிதுகளம் மாகரிகளென்ன
இந்தசோபைலக்ஷ்மி இவனருளேயமிர்தம்
என்றேதவென்னைய னெழுந்ருளினனே

ஏலேலோ

4. மண்டலமெல் லாங்களிக்க
மணிவண்ணன் பதினறுகால்
மண்டபத்தை தாண்டிவந்து
மாருதிக்கும் ஸேவைதந்து
திண்டரளம் பொன்வளருஞ்
செட்டிகள்வீ தியைத்தாண்டி
திருக்கச்சி நம்பிக்கு
ஸ்ரீசட கோபந்தந்து

முடுகு

அண்டமதிரும்பேரி யறையமேளங்கள்
அடுக்குவெடினிவெடிக ளடிக்கடிமுழங்க

பண்டைமறைபின்னும் ப்ரபந்தங்கள் முன்னும்
பலபேர்களோதிவர பாகவதரெல்லாங்
கொண்டாடியானந்தக் கூத்தாடதாளங்
கொட்டநாகஸ்வரங் குளிரபலகுத
தண்டுளபமாலைபீ தாம்பரமுமாட
ஸந்தோஷமாய்ரங்க ஸாமிகுளந்தாண்டி
சண்டமார்த்தாண்டசத ஸமதேஜனை
ஸாமிகவிவாதிகே ஸரியென்றுபுகழுங்
கண்டாவதாரனைக் கண்டு சடகோபங்
களிகொண்டளித்ததிக கம்பீரமாக
வண்டமருஞ்சோலைமூட வன்வீதிதாண்டி
வந்துசாலைத்தெருவின் வைபவங்கண்டு
எண்டிசையும்புகழ்கின்ற ராஜவீதியிலே
எழுந்தருளிவேசையர்க ளிருபுரமுமாட
அண்டரியகங்கைகொண் டான்மண்டபத்தில்
அமிசையாய்வினியோக மானதக்ஷணமே
விண்டெழுந்தருள்செய்து வேம்பன்வீதியையும்
வேடிக்கையாய்க்குயவர் வீதியையுந்தாண்டி
பெண்டுகள்புருஷர்முன் பின்செல்லராஜாம்
பேட்டையாடிசன்பேட்டை பெரியாகசாலை
மண்டபமிருந்திடம் வந்துராத்திரியில்
வரிசைமத்தர்ப்புதீ வட்டிகள்ஜொலிக்க
தொண்டனுமனுமந்தன் தோளிலெழுந்தருளி
துரைராமனென்றவருந் தோத்திரஞ்செய்ய
புண்டரீகக்கண்ணன் பூபவீதிதனில்
பொழியும்பாணங்களின் புதுமைகளைக்கண்டு
மண்டுகடலெனகோஷம் வளரவர்ஸ்தானம்
வந்துபின்னுபசார வைபவம்பெற்று
விண்டலத்தோரெலாம் வேண்டநாலாநாள்
குண்டலியையேறினன் கொண்டல்வண்ணன்தான்

### ஏலேலோ

5. நாகபதி தனையேறி
நலமிகுந்த பரமபத

நாதனென ஸேவைதந்து
நன்ருக வன்றிரவில்
ஸ்ரீகரனர் மதிப்ரபையில்
தேவிகளோ டெழுந்தருளி
சிந்தையினல் சந்த்ரகலை
தேய்வதென வைந்தாநாள்

முடுகு

மோகனுகாரனுய் முதலவன்வருக
முன்பட்டபாடெண்ணி முக்கண்ணனை
ஏகம்பனவ்வேளை யீச்வரியைச்சேர்ந்தும்
இதயங்கலங்கித னிருப்பிடமகன்று
தேககுணம்வளர்வதும் தெரிந்துவியாஜமதாய்
தெப்பமாடவே ஸர்வதீர்த்தமெழுந்தருள
பாகவதர் கீர்த்தனங்கள் பாடதாளங்கள்
பலவாய்நடத்ததிரு பதியெலாங்கண்டு
போகமாயங்கங்கே பொன்னடிகள்சாத்தி
புண்ணியனிருப்பிடம் புகுந்தன்றுநிசியில்
மேகவண்ணன்யாளி மீதுமாருநாள்
வேணுகோபாலனுய் மின்விமானத்தில்
கோகனகபதம்வைத்துக் கொண்டெழுந்தருளி
குவலயத்தோரெலாங் கொண்டாடநிசியில்
வேகமாகவேயானை மீதேறிவந்து
வெகுவேடிக்கைகளேசல் விசித்திரங்கண்டு
ஆகமிகபூரித்தெ ணயனேழாநாள்
அலங்காரரதமேறி யானபின் குதிரை
வாகனந்தனிலேறி வரதனெட்டாநாள்
வந்தொன்பதாந்தின மணிச்சிவிகையேறி
மாகனகபுண்ணியவி மானமெழுந்தருளி
மறுநாள்விழல்வேர்வி மானத்திலேறி
தோகையருடன்வருந் துரைவரதராஜன்
சுபமகோற்சவமகிமை சொல்லகவிராஜ
சேகரருந் தேவர்களுந் தியங்கியேநிற்க
சின்னஸாமியெனும்யான் செப்பதரமாமோ

தீகரன்கிருபையால் தெரிந்தமட்டுந்தான்
சகமீதிலிவ்வோடஞ் சீராகச்சொன்னேன்
பூகமலைநீளேயொடு புண்ணியனும் வாழி
புரஹரனுமயனுமவர் பூவையரும் வாழி
ஸாகரம்சூழ்புவியில் ஸகலரும் வாழி
ஸந்ததமிதைப்பாடும் ஸஜ்ஜனர்கள் வாழி
ஏலேலோ ராமஜயம்—கோவிந்தா
ஏலேலோ ஸீதாதேவிஜயம்.

## வரதராஜப் பெருமாள் ஊஞ்சல்

1. சீராருஞ் சடகோப சீலனேத்தி
திருவடி செம்முளரியனு தினமும்போற்றி
பாராருமிமையவரும் பகருங்கீர்த்தி
பரவும்யதிராஜனடி பணிந்துசாத்தி
நேராருமில்லாத வெகுளியாற்றி
நிகமாந்ததேசிகனை வணங்கி வாழ்த்தி
ஆராரும்புகழுங்குரு குலத்தையேத்தி
அவனியுறைவீர்பாடீர் ஆடுமூஞ்சல்

2. துய்யமுறுசெம்பவள தூண்கள்நாட்டி
துங்கமணியிழைத்தவிசை விட்டஞ்சூட்டி
செய்யநவரத்னமய பலகைகூட்டி
சகமெங்கும்புகழ்தங்க கொலுசுமாட்டி
வையகமும்வானகமும் புகழமேட்டி
மரதகங்களிழைத்தவெளிக் கொடுங்கையூட்டி
ஐயனிபகிரிவாழும் வரதராஜன்
அரிவைபெருந்தேவியுடன் ஆடுமூஞ்சல்

3. திங்களணிசிவனுமையோர் வடந்தொட்டாட்ட
திசைமுகனும்வாணியுமோர் வடந்தொட்டாட்ட
அங்கஜனுமிரதியுமோர் வடந்தொட்டாட்ட
அமரபதிசசியுமொரு வடந்தொட்டாட்ட
மங்களமும்லாலிமுதல் பாடியீட்ட
வானரம்பையர்களபி நயமுங்காட்ட
பங்கஜலோசனவரத பார்த்திபேந்த்ரன்
பாவைபெருந்தேவியுடன் ஆடுமூஞ்சல்

4, அண்டரலர்மாரிபொழிந் தருகுகூட
அகிலமுனிவருமாதி மறைகள்பாட
மண்டலமாளரசர்களும் வணங்கி நாட
மணிமகுடமுரைந்தபொடி மகியைமூட
புண்டரீகமித்திரனுந் தனவிசேட
புரவலனுமதிநாணுங் குடைகள்போட
கொண்டலுறுமெழிலானை குவட்டில்வாஸன்
கோதைபெருந்தேவியுடன் ஆடுமூஞ்சல்

5. அந்தமிகுமணிகளுறுந் தார்பிரகாச
அணிமகுடகாந்தியினு லிரவிகூச
சுந்தரலோசனமுகமும் புனலில்வாச
துய்யமுறுமரவிந்தம் மதியையேச
கந்தமலர்க்குழல்மாதர் கவரிவீச
கலவையுடுபதிமெய்யிற் கதிக்கப்பூச
ஸந்ததமுந்தும்பிமலை தன்னில்வாச
ஸகியுடனே மணிவண்ணன் ஆடுமூஞ்சல்

6. மல்லிகையுமுல்லைகளு மருவுஞ்சேரும்
மணமிகுந்தபுன்னுக மலருமாரும்
சொல்லியமலர்ஜாஜி துளபமேரும்
சுகந்தனிலேஸம்பங்கி துலங்குந்தாரும்
துல்லியவனஜமலருந் தொடுத்தெல்லோரும்
சூட்டுந்தார்களிலங்குந் தோளன்பாரும்
வல்லிபெருந்தேவியுடன் வரதராஜன்
வாஞ்சையாய்போகமுடன் ஆடுமூஞ்சல்

7. ஆரணங்களறியாத சுப்ரகாசன்
அகிலபுவனங்களிலு மெங்கும்வாசன்
பூரணமாயடியவருக் கருளுமீசன்
புனிதமனத்தவர்க்குபத முதவுநேசன்
நாரணன்முன்காரணனு மிருடிகேசன்
நளினமலர்க்கண்ணன்கதிர் கோடிதேஜன்
வாரணமுன்கூவவந்த வரதராஜன்
மங்கைபெருந்தேவியுடன் ஆடுமூஞ்சல்

8. எம்பிரானரும் தவத்தோர்க் கினியநேயன்
எழும்புங்கருமுகிலனைய யிருண்டகாயன்
கும்பிடுமெய்யன்பர்க்கெலாங் கொடுக்குந்தூயன்
கொடுமைசெயுநிருதர்களின் குலவபாயன்
நம்பிசின்னஸாமிதுதி நாமதேயன்
நாலானவேதங்களை நவின்றமாயன்
தும்பிமலைதனிலுற்றையும் வரதராயன்
தோகைபெருந்தேவியுடன் ஆடுமூஞ்சல்

## ஸ்ரீவரதராஜப்பெருமாள் லாலி

### மத்தியமாவதிராகம்

1. திங்களுடன் கங்கையணி சிவன்பணியும் பாதா
அங்கஜனைத்தந் தவனே அயன்வரும்போதா
மங்களமென்மேலுமுற வரமெனக்கு நீதா
பங்கயப்பெண் பெருந்தேவி பாவைமகிழ் நாதா லாலி

2. சீராருஞ்செங்கமலத் திருமகிழுநேயா
ஆராரும்புகழ் வெண்ணெ யருந்துங்கனிவாயா
நேராருமில்லாத நிமலவரமாயா
காராரு மேனியனே கரிவரதராயா லாலி

3. நிரதகல்யாணகுண நிர்மலனிரண்டோ
பரதெய்வமுண்டென்று படிப்பதென்னக்கண்டோ
கரதலாமலகமெனக் கண்டுமதங்கொண்டோ
வரதனே யுனையன்றி மறுதெய்வமுண்டோ லாலி

4. புண்டரீகமலர்கள் பூத்தமழையாகா
குண்டலிகளரிவினதை கோதைசுதவாகா
தொண்டர்களுக்கின்பருளுஞ் சுகசயனநாகா
வண்டுகுழல் நீளைநில வல்லியிருபாகா லாலி

5. ஓராழிதேரானி னுறவிலுறைவாயே
நீராழியுலகமீ ரேழுந்தரு வாயே
சீராழியான் மகிழச் சேருமவள் நீயே
பேராழிதனில்வந்த பெருந்தேவிதாயே லாலி

6. வாணியிந்திராணிஸர் வாணிமறைத்தோணி
ஆணிவஜ்ஜிரபாணி யரவாரம் பூணி
மாணிலகுமிவர்கள் தொழு மலைவேழக்காணி
சேணிரவிமதியுந்துதி செய்யுமணிவேணி லாலி

7. ஒதராவணையானே யுன்னை மறவேனே
சீதராவென்று தொழுந் திசைமுகனுந் தானே
பூதராதிப மற்றும் போற்றுவேனோ நானே
நீதராவிடிலேது நிலையோதுவானே லாலி

8. சிஷ்டர் தொழுமெழிலானே சிகரிதனில் வாவி
வட்டமலர் முகமலர்ந்து வாழுமனமேவி
துஷ்ட காக்கைக்குமருள் தொகுத்தருளுமாவி
அஷ்ட சம்பத்துகளும் அளிக்கும் பெருந்தேவி லாலி

9. தினகராயிர கோடி தேஜப்பிரகாசா
ஸனகாதி முனியோகி ஸகலருக்கு நேசா
கனகவரை நிகரான கரிசைலவாசா
அனக சின்னஸாமி தொழு மரிதேவ ராஜா லாலி

## வேறுவித லாலி

**[ஆனந்தபைரவி ராகம்]**

1. ஈசாமஹேச லாலி - வைகுந்த
வாஸாதி நேச லாலி
தேஜாதி தேஜ லாலி - ஸ்ரீவரத
ராஜாதி ராஜ லாலி

2. விண்ணவர் தொழும் பிரதாபா - அரவிந்த
கண்ணனே கமல நாபா
அண்ணல் யதுவம்ச தீபா - நீலமணி
வண்ணனே வரத பூபா

3. சுந்தராகார சீலா - புகழ் பெற்ற
நந்த கோபால பால
இந்திர முகானு கூலா - வரபணில
கந்தரா கமல லோலா

4. தங்கவரையனைய தீரா - மதுரமிகுந்
துங்க நவ நீத சோரா
புங்கவா துளவத் தாரா - அங்கசன்
பங்கஜாஸன குமாரா

5. அத்தி பண்டோதி வாவா - வெனவந்து
வெற்றி யுறவாளுந் தேவா
சித்தியுடனுரு மேவா - முத்திதரும்
நித்திய மஹானு பாவா

6. தாணு தானேந்தி யுண்ணு - வகைமேவ
நாணு மவ்வேலை வண்ணு
பூணு மிடர்தீர்த்து நண்ணு - விதமருளும்
வேணு கோபால கண்ணு

7. இன்ன தென்றே தவறியேன் - எப்போதும்
நின்னடிமை யென்னுங் குறியேன்
உன்ன தடி சிந்தை பிரியேன் - எனையாளுஞ்
சின்னஸாமி யெனுஞ் சிறியேன்.

RAJAN & Co. (Printers)
Madras-1.

| இலக்கம். | வெளியீட்டின் பெயர். | வள்ளலார் பெயர். |
|---|---|---|
| 27. | ஸ்ரீ பார்த்தசாரதி யம்மான் பாமாலை. | ஸ்ரீமான் பி. எஸ். கோவிந்தராஜய்யங்கார் அவர்கள். |
| 28. | தமிழரேத்தும் ஸ்ரீ மணவாளமாமுனிகள், | சந்தமிகு செந்தமிழ்ச் செல்வர். |
| 29. | திருச்சின்ன மாலை. | ஸ்ரீமான் கே. துரைசாமி அய்யங்கார் அவர்கள் |
| 30. | திருவேங்கடவர்மாலை. | நான்மறையாளர்கள். |
| 31. | மார்கழிமாலை. | ஸ்ரீமான் பூண்டி அச்சுத கோபாலாசாரியார் அவர்கள். |
| 32. | மதுரகவி மாலை. | ஸ்ரீமான் கே. எஸ். ஸ்ரீனிவாஸாசாரியார் அவர்கள். |
| 33. | திருவருட்சதக மாலை. | ஸ்ரீமான் என். கிருஷ்ணய்யங்கார் அவர்கள். |
| 34. | சீரொன்று தூப்புற்றனியன் மாலை. | அருள் வரதரடியார். |
| 35. | மும்மறைத்தெளிவுப்பொருண் மூதுரை மாலை. | ஸ்ரீமான் அமிஞ்சிக்கரை ஆதிநாராயணஸ்வாமி ரெட்டியார் அவர்கள். |
| 36. | அருளாளர் மாலை. | ஸ்ரீமான் திண்டுக்கல் ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள். |
| 37. | பூங்கோதை மாலை. | ஸ்ரீமான் பி. எஸ். கிருஷ்ணய்யங்கார் அவர்கள். ஸ்ரீமான் பி. எஸ். நாராயணய்யங்கார் அவர்கள். |
| 38. | பூமகள் மாலை. | ஸ்ரீமான் பி. கோபாலாசார்யா அவர்கள். |
| 39. | இடைப்பிள்ளை மாலை. | ஸ்ரீமான் பி. ஏ. சந்தானமய்யங்கார் அவர்கள். |
| 40. | செந்தாமரையாள் மாலை. | ராவ்பஹதூர் என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள். |
| 41. | பெரியபிராட்டியார் மாலை. | ஸ்ரீமான்ஆர். கோபாலஸ்வாமி அய்யங்கார் அவர்கள். |
| 42. | தேசிகரந்தாதி மாலை. | ஸ்ரீமான் திருநின்றவூர் பாலவேடு பரவஸ்து நரஸிம்மாசாரியார் அவர்கள். |
| 43. | இராமாவதாரமாலை. | ஸ்ரீமான் டி. ர. ஸி. நாராயணஸ்வாமி அய்யர் அவர்கள். |
| 44. | திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவ மாலை. | ஸ்ரீமான் லக்ஷ்மீநரஸிம்ஹ பிள்ளை அவர்கள். |
| 45. | ஆனைபரிதேரின் மேலழகர் மாலை. | ஸ்ரீமான் பி. எம். சுந்தரவரதய்யங்கார் அவர்கள். ஸ்ரீமான் பி. எம். நரஸிம்ஹராகவய்யங்கார் அவர்கள். |

பெறும் இடம்: **ஆனந்த பிருந்தாவனம்,**
ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத் தெரு, அம்பத்தூர்.

5, 7, 8, 10, 15, 16 இலக்கம் உள்ளவை இப்போது கைவசமில்லை.